திராவகத்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 30 செவ்வாய்க்கிழமை (13.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 138

# பேச்சுக்கு வருமாறு நேற்றுவரை கூட்டமைப்புக்கு அழைப்பு இல்லை

## வரும் பட்சத்தில் பொறுப்புடன் பரிசீலிக்கப்படும் என்கிறார் சம்பந்தன்



கொழும்பு, ஏப்ரல் 13

**பேச்சுவார்த்தைக்கு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நேற்று இரவுவரை அழைப்பு எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**அழைப்புக் கிடைத்தவுடன் அது குறித்து பொறுப்புணர்ச்சியுடனும் ஆக்க பூர்வமாகவும் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.**

மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட எதிர்க்கட்சிகளுக்கு அரசாங்கம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பகிரங்க அழைப்பு விடுத்திருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்து இந்த அழைப்பை விடுத்திருந்தார்.

இந்த நாட்டின் எதிர்காலச் சந்ததியினருக்காக நாட்டை கட்டிஎழுப்புவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் உட்பட எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் இணைய வேண்டுமென்று அவர் கேட்டிருந்தார்.

எனினும் நேற்றிரவுவரை உத்தியோக பூர்வமாக இதுகுறித்த அழைப்பு எதுவும் கிடைக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்வட்டாரங்கள் தெரிவித்தன.

பேச்சுக்கு வருமாறு அரசிடமிருந்து எழுத்து மூலமான அழைப்பு வந்தால், நாடாளுமன்றக் குழு கூடி பொறுப்புணர்ச்சியுடன் முடிவு எடுக்கும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் (24ஆம் பக்கம் பார்க்க)

## விகிர்தி வருடப்பிறப்பு விஷு புண்ணியகாலம்

யாழ்ப்பாணம், ஏப். 13

இன்று செவ்வாய்க்கிழமை பங்குனி மாதம் 30ஆம் திகதி வைகறை 5 மணி 21 நிமிடத்தில் (14.04.2010) விகிர்தி வருடம் பிறப்பதாகவும், அன்று பின்னிரவு 1 மணி 21 நிமிடம் முதல் சித்திரை முதலாம் திகதி புதன்கிழமை காலை 9 மணி 21 நிமிடம் வரை விஷு புண்ணியகாலமாகுமென வாக்கிய பஞ்சாங்கமும் -

நாளை புதன்கிழமை 14.04.2010 காலை 6 மணி 57 நிமிடத்தில் விகிர்தி வருடம் பிறப்பதாகவும், செவ்வாய் இரவு 2 மணி 57 நிமிடத்திலிருந்து புதன் முற்பகல் 10 மணி 57 நிமிடம் வரையும் புண்ணியகாலமாகுமெனத் திருக்கணித பஞ்சாங்கமும் - தெரிவிக்கின்றன.

(விகிர்தி வருடப் பிறப்புக் கரும விவரத்தை 09ஆம் பக்கத்தில் படியுங்கள்).

## பசில் பிரதமரா ? வெளிநாட்டமைச்சரா? ஆளும் கட்சிக்குள் தீவிர கருத்து மோதல்!

கொழும்பு, ஏப். 13

இலங்கையின் புதிய பிரதமராக யாரை நியமிப்பது என்பது தொடர்பில் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களிடையே கருத்து மோதல் வலுத்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பசில் ராஜபக்ஷவிற்கான ஆதரவு வலுத்து வருவதால் டி.எம்.ஜயரட்ன, மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு மனத் தாக்கம் அதிகரித்து வருகின்றது என்றும் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இது தொடர்பில் கலந்துரையாடிய ஆளும் கட்சியின் மூத்த அமைச்சர்கள், பசில் ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்காது விடில் அவருக்கு வெளிநாட்டு அமைச்சர் பதவியாவது வழங்கப்படவேண்டும் என்ற திட்டவட்டமாகக் கருத்து வெளியிட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (24ஆம் பக்கம் பார்க்க)

## சவூதியில் குழு மோதல் இலங்கையர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 13

சவூதி அரேபியாவில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் இலங்கையர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சவூதி அரேபிய ஜித்தா கந்தஹார் பாலத்திற்கு அடியில் (24ஆம் பக்கம் பார்க்க)

## புதுவருடத்தை ஒட்டி பலத்த பாதுகாப்பு!

கொழும்பு, ஏப். 13

வடக்கு - கிழக்கில் யுத்தம் முடிவடைந்திருக்கும் சூழலில் பிறக்கும் முதலாவது புத்தாண்டை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

அதேவேளை, நாடளாவிய ரீதியில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். (அ-சி)

## முஸ்லிம் காங்கிரஸுக்கு மொத்தம் 8 ஆசனங்கள் மூன்று ஆசனங்களை இம்முறை அதிகரித்தது

கொழும்பு, ஏப். 13

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி பட்டியலில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆறு ஆசனங்களைத் தனதாக்கியிருக்கின்றது.

மேலும் தேசியப் பட்டியலின் ஊடாக இரண்டு ஆசனங்கள் கிடைக்கும் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது. அந்த இரண்டையும் சேர்த்தால் அக்கட்சியின் மொத்த ஆசனங்கள் எட்டாக உயரும்.

அக்கட்சியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட பஷீர் சேகுதாவூத், அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட எச்.எம்.எம்.ஹரீஸ் மற்றும் பைஸல் காசிம், வன்னி மாவட்டத்தில் போட்டியிட்ட நூர்தீன் மசூர் ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட தேர்தல் முடிவு அறிவிக்கப்படாதபோதிலும், அங்கு சின்ன தௌபீக் வெற்றி பெற்றுள்ளமை ஓரளவுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் கண்டி மாவட்டத்தில் ரவூப் ஹக்கீம் வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசிய முன்னணி பட்டியலில் 21 வேட்பாளர்களை நாடளாவிய ரீதியில் நிறுத்தியிருந்தது. (24ஆம் பக்கம் பார்க்க)

## 22ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு நிச்சயம் பொன்சேகா வருவார்

### அடித்துக் கூறுகின்றார் அநுரகுமார திஸநாயக்க

கொழும்பு, ஏப்.13

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று எம்.பியாகத் தெரிவாகியுள்ள ஜெனரல் சரத் பொன்சேகா இந்த மாதம் 22ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வில் நிச்சயம் கலந்துகொள்வார் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுவின் முன்னாள் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்றுக் கூறினார்.

நீதிமன்றத்தால் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட பலர் நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்ட வரலாறு இந்நாட்டில் உண்டு என்று கூறிய அவர் வெறுமனே குற்றம் மட்டுமே சாட்டப்பட்டவராக - குற்றத் தீர்ப்புக்கு உள்ளாகாதவராக - இருக்கும் பொன்சேகாவுக்கு நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதில் எந்தச் சிக்கலுமில்லை என்றும் சொன்னார்.

மக்கள் பொன்சேகாவுக்கு வழங்கியிருக்கும் வாக்குகள் மூலம் அவர் குற்றமற்றவர் என்பது தெளிவாகின்றது என்றும் அநுரகுமார கூறினார்.

ஜெனரல் பொன்சேகா 22ஆம் திகதி நடைபெறும் ஏழாவது நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு உட்பட அதனைத் தொடர்ந்து வரும் 2010ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட விவாதத்திலும் கலந்துகொள்வார் என்றும் அநுர கூறினார்.

பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு கூறினார். (அ-சி)

## அரசமைப்பு மாற்றத்துக்கு ஆதரவு தர நிபந்தனை விதிக்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஏப்ரல் 13

நல்லாட்சிக்கு வழி செய்யும் விதத்தில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், ஊழல், மோசடிகளை இல்லாதொழித்தல், சட்டத்தை மதித்தல் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு அரசமைப்பை (யாப்பை) மாற்றுவதற்குத் திட்டம் முன்வைக்கப்பட்டால் அதற்கு ஜே.வி.பி. ஆதரவு வழங்கும் என்று அந்தக்கட்சி நேற்றுத் தெரிவித்தது.

பத்தரமுல்லையில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுவின் முன்னாள் தலைவரும், முன்னாள் எம்.பியுமான அநுர குமார திஸாநாயக்கவே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டின் அரசியல் கலாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாது, அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை.

**பெரும்பான்மை ஆதரவு இல்லையே**

நடந்து முடிந்த தேர்தலில் அரசு அதிகூடிய ஆசனங்களைப் பெற்றிருக்கலாம். ஆனால், பெரும்[illegible] அரசுக்குக் கிடை[illegible].

தற்போது அரசுக்குப் பாரிய பொறுப்புக்கள் உள்ளன. அவற்றை மறந்து அரசால் செயற்பட முடியாது. மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றத் தவறிய அரசு இனியும் அந்தத் தப்பைச் செய்யக்கூடாது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் நீதியானதாகவும், நேர்மையானதாகவும் இடம்பெறவில்லை. தேர்தல் சட்டங்கள் முழுமையாக மீறப்பட்டன. இந்த நிலைமைக்குத் தேர்தல் திணைக்களமும், பொலிஸாருமே காரணம்.

ஜே.ஆர்.ஜெயவர்தனவின் காலத்தில் [illegible]ில் ஐந்து பெரும்பான்[illegible]ளுமன்றில் பெறமுடிந்தது. ஆனால், அவர் ஆட்சியை விட்டுச் செல்லும்போது நாடு (24ஆம் பக்கம் பார்க்க)

இன்னும் 05 நாள்களில்

JAFFNA International 2010 TRADE FAIR

2010 ஏப்பிரல் 18,19,20 வரை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை அருள்மிகு பத்திர காளி அம்பாள் தேவஸ்தானத்தால் நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந் தன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக் கப்பட்டார். அதன்போது எடுக்கப்பட்ட படம்.

## புத்தாண்டுப் போட்டிகளும் கலைநிகழ்வுகளும்

யாழ்ப்பாணம், ஏப்13

523 ஆம் படையணியினரின் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகளும் கலைநிகழ் வுகளும் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் கைதடி சரஸ்வதி சனசமூக நிலைய விளையாட்டரங்கில் நடைபெறும். (ஒ-207)

## இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளையில் யுவதிகளுக்குத் தையல் இயந்திரங்கள்

இலங்கை வங்கி அச்சுவேலிக்கிளையில் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு சுயதொழில்முயற்சிக்கான கருவிகள், சாதனங்கள் கடன் அடிப்படையில் வழங்கும் நிகழ்வு அன்றய தினம் (புதன் கிழமை) காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கி அச்சுவேலிக்கிளை முகாமையாளர் லயன் த.புவனேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் இலங்கையின் வடபிராந்திய பதில் உதவிப் பொது முகாமையாளர் வி.எஸ்.சிவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சுயதொழில் முயற்சிக்கான ஊக்குவிப்பு கடன்திட்டத்தின் கீழ் யுவதிகளுக்கு தையல் இயந்திரங்கள், விவசாயிகளுக்கு கிருமி நாசினி தெளிக்கும் கருவிகள், நீர்இறைக்கும் இயந்திரங்கள், மற்றும் சைக்கிள்கள் என்பன வழங்கப்படவுள்ளன. (ஒ-11)


## காணவில்லை

அரசடிவீதி, கோண்டாவில் கிழக்கு ஐ.இரவீந்திரன் என்பவருடைய சிவப்பு நிறம், நெற்றியில் வெள்ளை நிறம், வாலில் வெள்ளை நிறம் உடைய பசு மாடு கன்றுக்குட்டி மார் ... (07.04.2010) 1மணிக்கு பிற்பாடு காணவில்லை. கண்டவர்கள் கீழ் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொ.பே. 0770760262, 0774687812, 0213215125.



# யாழ் நகரில்

British College of Higher Studies ஏற்பாட்டில்

வேலைவாய்ப்பைத் தேடும் இளைஞர் யுவதிகளுக்கு 100% வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தரும்/உறுதிப்படுத்தும் முகமாக அவர்களின் ஆளுமையை விருத்திசெய்யும் (Personality Development) பயிற்சிப் பட்டறைகள் (Work shops)

இப் பயிற்சி நெறியில் உள்ளடங்குபவை

- நேர்முகத்தேர்வினை எவ்வாறு எதிர் கொள்வது?
- அங்கு கேட்கும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது?
- எப்படியான ஆயத்தங்களிற்கமைய உங்களைத் தயார்படுத்துவது?
- உங்களிடம் உள்ள ஆவணங்களை எவ்வாறு முறைமைப்படுத்துவது?
- அலுவலகத்தில் பேசக்கூடிய ஆங்கிலமும், அதற்கான உரையாடற் பயிற்சிகளும்
- முகாமைத்துவம் (Management)
- மனிதவளப் பயன்பாடுகள் ( Human Resource Management)
- அலுவலகப் பிரயோகத்திற்கான கணினிப் பயிற்சிகள் (Ms.Windows, Ms Word, Excel, Power Point, Accounting)

பயிற்சியின் முடிவில் தரம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்

பயிற்சிப் பட்டறைகள் : 15 மணித்தியாலங்கள்
சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களிலும் நடாத்தப்படும்

பயிற்சிப் பட்டறையில் பங்குபெறும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்களின் பதிவுகளை தாமதமின்றி முன்கூட்டியே பதிவு செய்து உங்கள் நேரஅட்டவணையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இப் பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவருக்கும் எமது நிறுவனத்தினால் சுயவிபரக்கோவை (Bio-Data) தயாரிக்கப்பட்டுத் தொழில் வங்கியிலும் (Jop Bank) இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

British College of Higher Studies
No. 15, Sirambiyadi Lane (Off Stanley Road), Jaffna.
web: www.bchs.lk Email:info@bchs.lk Tel: 021-2224550, Mobile:0777222422, 0714299935, 0773501499


## நூல் வெளியீட்டு விழா

முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம் ஐயாவின் 96ஆவது அகவை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆசியுரையை சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் செ.மோகனதாஸ் ஐயாவும், வெளியீட்டுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேலும், மதிப்பீட்டுரையை இளைப்பாறிய விரிவுரையாளர் ச. விநாயகமூர்த்தியும் நிகழ்த்தவுள்ளனர். (ஒ-16)


## மரண அறிவித்தல்

### நடராசா ராஜேஸ்வரி



தனங்கிளப்பைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா ராஜேஸ்வரி 11.04.2010 அன்று நள்ளிரவு காலமானார்.

அன்னார் சின்னத்துரை நடராசாவின் (முன்னாள் பிரபல வர்த்தகர், சாவகச்சேரி) அன்பு மனைவியும், இந்திரகுமார் நளாயினி (தேவி),ரோகினி (வதனி-ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவரஞ்ஜன், தவராசா (ஜேர்மனி), அனுலதா (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிஷன் (ரஷ்யா), கார்த்திக், சபீதா (இந்தியா), லக்ஷன் (பழைய மாணவன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி) கரிகாலன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆர்த்திகா, பிருத்திகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.04.2010) செவ்வாய்க்கிழமை பி.ப 3.30 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியை நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில்மேற்கு,
சாவகச்சேரி.

தகவல்
சின்னத்துரை நடராசா,
மற்றும் குடும்பத்தினர்.



## வீடு விற்பனைக்கு

நல்லூர்க் கோவில் சுற்றாடலில், யாழ்.மாநகர சபை எல்லைக்குள் முத்திரைச் சந்திக்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட அழகான வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0777432645 எனது பக்கம் தரகர் தேவையில்லை.



## தவறிவிட்டது

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் 3இல் கற்கும் கி.கிரு ஷாளினி 06.04.2010அன்று பஸ்சில் வரும்போது ரெயின் கோட் டையும் அதனுள் தேர்ச்சி அறிக்கையையும் ஒரு பெண்ணிடம் கொடுத்தார். இறங்கும்போது வாங்காம் இறங்கிவிட்டார். தயவு செய்து அதைவாங்கிவைத்திருந்த பெண் நந்தலாலா இருப்பகம்,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.



## தவறிவிட்டது

புத்தூர் கிழக்கு என்னும் முகவரியுடைய மகாலிங்கம் ரஞ்சித் என்பவருடைய தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம், மோட்டார் வாகன காப்புறுதிப் பத்திரம், மோட்டார் போக்குவரத்து ஸ்தாபனத்தின் பதிவுச் சான்றிதழ் உட்பட Video camcra battary மற்றும் சில முக்கிய ஆவணங்கள் என்பன யாழ். நகரப் பகுதியில் (12.04.2010) அன்று தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைக்கவும். (சன்மானம் வழங்கப்படும்)

தொடர்பு :- K.M. ரஞ்சித்,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
T.P. 0775632234, 0776544738



## மரண அறிவித்தல்கள்

### இராசரத்தினம் ஜெயன்சலா



பூநகரியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் ஜெயன்சலா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி) நேற்று (12.04.2010) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் ஆசிரியர் மா.இராசரத்தினம் - ஆசிரியை கதாநாயகி ஆகியோரின் சிரேஸ்ட புத்திரியும், குயின்சலா, பிரசன்னா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### அருமைநாயகம் சுசிலா (பவளம்)



இல 96/1, கண்டி வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அருமைநாயகம் சுசீலா (பவளம்) 10.04.2010 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

96/1, கண்டி வீதி, அரியாலை.
தொ.பே.021-4591459, 077-8375224

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி விசாலாட்சி சிவபாதசுந்தரம்பிள்ளை



சிவன் கோவிலடி, இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி சிவபாதசுந்தரம்பிள்ளை நேற்று (12.04.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை-வாலாம்பிகை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம்பிள்ளை-பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், வாலாம்பிகை (சாயா), அமிர்தாம்பிகை, கோமளாம்பிகை, சொக்கலிங்கம், விக்கினேஸ்வரி, குகனேஸ்வரி (அமரர்), வடிவழகாம்பாள் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற விஜயராசா, மற்றும் நவீந்திரன், கிரிஜா, இராசேந்திரன், மகேந்திரன் ஆகியோரின் மாமியாரும் கௌரிசங்கர், லாவண்யா, ஆரூரன், மேகலா, அனந்தன், கிருத்திவாசன், ஜெகனிவாசன், சந்தோஷினி, சக்திவாசன், அர்ச்சுன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், இராமநாதன், பராசக்தி ஆகியோரின் சகோதரியும், நாகரத்தினம் அவர்களின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.04.2010) செவ்வாய்க்கிழமை மதியம் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோவிலடி,
கே.கே.எஸ்.வீதி, இணுவில். (சி/566544)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருச்செல்வம் ஜோர்ஜ் கமில்டன் (ரமேஷ்)



யாழ்ப்பாணம் சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் ஜோர்ஜ் கமில்டன் (ரமேஷ்) 09.04.2010 வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா திருச்செல்வம் மற்றும் மரியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் திரேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், யசிந்தா ரஞ்சினியின் அன்புக் கணவரும், எட்வின்ரன் (யாழ்.பரியோவான் கல்லூரி), பிரவின்ரன் யூடிப் பரோசன் (யாழ்.புனித யோண் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மரியஸ்ரெலா, காலஞ்சென்றவர்களான கிறிஸ்ரி யோன்சன், ஐசக் நியூட்டன் மற்றும் மரீனா (மஞ்சுளா),றொபின்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிதம்பரநாதன், கௌசல்யா, சிவநாதன், துஷ்யந்தி, காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் செல்வராணி, ராசேந்திரன்-புஸ்பராணி (பிரான்ஸ்), சகாயராசா (அன்ரன்)-வனஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மேரி வசந்தினி, டென்ஷன் (லண்டன்),மைதிலி, கபிஷ்ரன் பியாட்றிஸ், நத்தாசா,செசா ஆகியோரின் அன்பு மாமனும் கல்கி (யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்), சதீஸ்குமார் லிண்டா (ஆசிரியர், யாழ்.மத்தியகல்லூரி), டன்ஸ்ரன் வாசுகி (கனடா) டிட்ரோ, டினோ, ஆன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.04.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.15 மணியளவில் புனித திரேசாள் ஆலயத்தில் திரும்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (96930)

தகவல் .
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# விலகும் விரோதி வருடத்தோடாவது விரோதம் விலகிச் செல்ல மாட்டாதா?

தரிப்பிடம் இன்றி சதா ஓடிக்கொண்டிருக்கின்றது காலநதி. நேரக்கணக்கீடு ஒவ்வொரு கணமும் கரைந்து கொண்டிருக்க, மணிச்சக்கரம் நில்லாமல், நிலையாமல், சுழன்று கொண்டிருக்கின்றது.

காலதேவனின் இந்த இடையறாத அசைவியக்கத்தில் பழையன கழிதலும், புதியன புகுதலும் உலக நியதி; தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம்; யதார்த்தம்.

இத்தகைய காலச் சுழல் ஓட்டத்திலே விரோதி வருடம் வாடி விழ,விகிர்த்தி வருடம் நாளை மொட்டவிழ்கின்றது.

இலங்கையின் இரு பெரும் தேசிய இனங்களான தமிழினத்துக்கும், சிங்கள இனத்துக்கும் இது பண்டிகைக் காலம்.

நாளை பிறக்கும் தமிழ், சிங்களப் புத்தாண்டை இரண்டு இனங்களும் அர்த்தபூர்வமாகக் கொண்டாடுகின்றமை வழமையே.

தை மாதமே - தைப் பொங்கலே - தமிழர் தம் புதுவருடப் பிறப்பு என்று தமிழகத்தில் கலைஞர் மு.கருணாநிதி தலைமையிலான மாநில அரசு அறிவித்து, அந்தப் பாதையில் நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும், ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் சித்திரைப் புத்தாண்டையே தமிழ் வருடப் பிறப்பாக அனுஷ்டித்து வருகின்றனர்.

இலங்கைத் தீவில் தனித்துவமான மொழி மற்றும் பண்பாட்டுக் கோலங்களோடு, தனித்துவமான இனங்களுக்குரிய அடையாளங்களோடு, வேறுபடுத்தப்பட்டவையாகக் குறிப்பிடக்கூடிய - தொடர்ச்சியான - பாரம்பரிய தாயகப் பிரதேசங்களோடு, சரித்திர காலம் தொட்டு பூர்வீகமாக வாழுகின்ற இரு சுதேசிய இனங்களின் கொண்டாட்டங்கள் சங்கமிக்கும் திருநாள் என்ற முறையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக இது அமைகின்றது. இரண்டு இனங்களுமே தத்தமது பண்பாடுகளை - கலாசார விழுமியங்களை - கிராமியக் கலைக் கோலங்களை - வெளிப்படுத்தி நினைவுகூரும் வகையில் இந்தப் புதுவருடத்தைக் கொண்டாடி மகிழ்வதும் வழமையே.

வானியல் அறிவில் விஞ்சி நின்ற தமிழன், சூரியனை ஒட்டி பூமிப்பந்தின் அசைவியக்கத்தை நுணுக்கமாகக் கணிப்பிட்டு காலச் சக்கரத்தை வகுத்துக்கொண்டான்.

அறுபது ஆண்டுகளைக் கொண்ட வருட வட்டம், ஒவ்வொரு ஆண்டிலும் இரண்டு அயணங்களும், ஆறு ருதுக்களும் என அவனது காலக் கணிப்பீடு விரிந்தது.

சூரியன் மேட ராசியில் சஞ்சரித்து வடக்கே செல்வது உத்தராயணம் ஆயிற்று. அந்த உத்தராயண காலம் மலரும் வேளையே இந்தப் புதுவருடப் பிறப்பு.

ஆண்டின் கடைசி ஆறு மாதங்களும் - சூரியன் தெற்கே பயணிக்கும் வேளை - தட்சணாயம்.

பங்குனிப் பெண் தன் பணி முடித்து விடைபெற, சித்திரைப் பெண்ணாள் சீர்கொண்டு தன் சிறப்பை வெளிப்படுத்தும் இக்காலமே வருடப்பிறப்பு.

மழைகாலம், முன்பனி - பின்பனி காலங்கள் முடிந்து, வசந்த ருது பரிமளிக்கும் இளவேனில் வேளை இது. இலையுதிர் காலம் கழிந்து, புதிய இலைகள் எனும் மென் பச்சைப் பட்டாடை உடுத்தி, மலர்கள் பூத்துச் சொரிய மரங்கள் மணம் பரப்பும் வேளையும் இதுவே.

இந்தச் சமயத்தில்தான் 'விரோதி' நீங்க, 'விகிர்த்தி' வருகின்றான்.

கடந்து செல்லும் விரோதி வருடம் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு முற்றிலும் விரோதமான நிகழ்வுகளையே அரங்கேற்றிவிட்டுச் செல்கின்றது என்பது தெளிவானதாகும்.

சரித்திர காலம் முதல் இலங்கைத் தீவில் வாழும் தமிழினம் மிகப் பெரிய யுத்தத்தை - மோசமான போரழிவுகளை - மிகக் கொடூரமான பேரவலங்களை - மிக உச்சமாகச் சந்தித்த காலம் இந்த விரோதி வருடத்தில்தான்.

விரோதி வருடம் பிறந்தபோதே வன்னியில் ஈழத் தமிழர்கள் மீது ஈவிரக்கமற்ற யுத்தம் மிகக் கொடூரமாக - கோரமாக - கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது.

தமிழரின் தேசிய இன எழுச்சிப் போராட்டம் ஆளும் சிங்கள - பௌத்த பேரினவாத ஆட்சிப்பீடத்தினால் ஆயுத முனையில் அடக்கி ஒடுக்கப்பட்டதும் கூட விரோதி வருடம் பிறந்ததன் பின்னரான முதல் மாதத்தில்தான்.

இலங்கையில், களத்தில் இடம்பெற்ற மோசமான கொடூரங்களை எண்ணி, களத்தில் மட்டுமல்ல இலங்கையின் பிற இடங்களி லும், புலத்திலும் வாழும் தமிழர்கள் இந்த விரோதி வரு டம் முழுவதும் கண்ணீர்விட்டுக் கதறி அழுது, துன்பத் தில் துடித்துக்கொண்டிருந்தார்கள் என்பதும் கூட மறுக்க முடியாத உண்மையே.

ஈழத் தமிழினத்தின் மீது விரோதம் காட்டி, பகையுறவு வளர்த்து, அவர்களை மீளாத்துயரில் ஆழ்த்திய 'விரோதம்' நம்மை விட்டு நீங்கும் இந்தச் சமயத்தில் - இனிப் பிறக்கும் புத்தாண்டாவது தங்களுக்கு மீட்சியைத் தருவதாக அமையாதா என்று தமிழர்கள் ஏங்குகின்றார்கள்.

புதுவருடப் பிறப்பு என்பது புத்தூக்கமும், புத்தெழுச்சியும், புத்துணர்வுமாகப் புதியன தரும் காலமாகப் பிறக்க வேண்டும் என்பது நம் அனைவரினதும் பிரார்த்தனையும் எதிர்பார்ப்புமாகும்.

இலங்கையின் இரு பெரும் தேசிய இனங்களுள் ஒன்று மற்றொன்றால் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டமையால் பெரும் போராக வெடித்த தேசிய இனப்பிரச்சினைக்கு இங்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை.

விரோதி வருடம் விலகிச் செல்வதோடாவது, இலங்கைத் தீவில் இனவிரோதம் நீங்கி, எல்லா இனங்களும் உரிய உரிமைகளோடும், நீதி, நியாயமான தீர்வோடும் அமைதியாகவும், நட்புறவாகவும், சமாதானமாகவும் வாழ வழி பிறக்காதா என்பதே இன்று பலரினதும் ஏக்கமாக உள்ளது.

# கழிவுப் பொருள்களைக் கண்ட இடங்களிலும் வீசாதா; சேகரித்து வைத்தால் மாநகரசபை அகற்றும்

## யாழ். வர்த்தகர்களுக்கு மேயர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ். நகரில் உள்ள வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் கழிவுப் பொருள்களை வீசாது சேகரித்து வைத்தால் அவற்றை மாநகர சபையின் வாகனங்கள் உரிய நேரத்தில் எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்படும்.

இந்தச்செயற்பாட்டுக்கு ஒத்துழைத்து, நகரப்பகுதி சுத்தமாகவும், அழகாகவும் இருக்க வர்த்தகர்கள் உதவவேண்டும்.

யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராச மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

யாழ். நகருக்குத் தினமும் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும், தென் பகுதியிலிருந்தும் வந்த வண்ண முள்ளனர். மக்கள் திரளும் இடங்கள் எப்பொழுதும் சுத்தமாகவும், அழகாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள வியாபார நிறுவனங்களின் சூழலில் எந்நேரமும் குப்பைகள் மற்றும் கழிவுப்பொருள்கள் குவிந்து கிடக்கின்றன. குப்பைகளை அகற்றி நகரை சுத்தமாகவும், அழகாகவும் வைத்திருக்கும் பெரும் பொறுப்பு மாநகர சபைக்கே உரியது. சபையினது சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தினமும் காலையும், மாலையும் நகரைச் சுத்திகரித்து வருகின்றபோதிலும் பெரும்பாலான வர்த்தக நிறுவனங்கள் தமது வியாபார நிலையத்தினுள் சேரும் கழிவுகளை வடிகால்களினுள்ளும், வீதியோரங்களிலும் வீசுவதனால் நகரின் சுகாதாரமும் அழகும் பாதிப்படைகின்றது.

இவ்வாறான நிலையைத் தவிர்ப்பதற்கு வியாபார நிறுவனங்களின் சூழலிலுள்ள குப்பைகள் மற்றும் கழிவுகளுக்கு அந்நிறுவனத்தின் உரிமையாளரே பொறுப்பாளர் என்ற கோட்பாட்டை அனைத்து வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்களும் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு தமது நிலையங்களில் அன்றாடம் சேரும் கழிவுகளை வீதியோரங்கள் மற்றும் வடிகால்களினுள் வீசாது சேகரித்து வைக்குமிடத்து சபையின் வாகனங்கள் அவற்றை உரிய நேரத்தில் எடுத்துச் செல்வதற்குரிய ஒழுங்குகளை மாநகரசபை மேற்கொள்ளும்.

கடந்த 11ஆம் திகதி சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் சகிதம் யாழ். வணிகர்கழகப் பிரதிநிதிகளுடன் நான் நடத்திய உரையாடலின்போது மேற்படி தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதையும் இங்கு விசேடமாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

எமது நகரம் எப்போதும் அழகாகவும், சுத்தமாகவும் இருக்கும் விதத்தில் யாழ். நகர வர்த்தகர்களும், யாழ்ப்பாணம் மாநகரசபையும் ஒன்றுபட்டுச் செயற்படுவோம் - என்றுள்ளது. (ஒ-1)

# என்னாலான பணிகளைத் தொடர உங்கள் ஆதரவை நாடி நிற்கிறேன்

## அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறார் சீ.வி.கே.

யாழ்ப்பாணம்,ஏப்,13

இந்த மண்ணில் தொடர்ந்தும் உங்களுடன் வாழ்ந்து என்னாலான பணிகளைத் தொடர உங்கள் ஆதரவை நாடி நிற்கிறேன்.

இலங்கைத் தமிழரசுக்கட்சி சார்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் வேட்பாளராகப் போட்டியிட்ட சீ.வி.கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

8 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நான் தெரிவு செய்யப்படாதபோதிலும் என்னை ஆதரித்து தெரிவு செய்யப்படுவேன் என்ற நம்பிக்கையோடு எனது தேர்தல் நடவடிக்கைகளில் உதவியவர்கள், வாக்களித்தவர்கள் யாவருக்கும் சிரம் தாழ்த்திய எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்த் தேசியத்துக்கான தங்கள் ஆதரவுக்கு எனது நன்றிகள்.

என்னை நேசித்து இந்த மண்ணில் நான் தொடர்ந்து மக்களோடு மக்களாக உங்களுடன் வாழ்ந்தமைக்கு தந்த இந்த அங்கீகாரத்துக்கும் நன்றி தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் உங்களுடன் இந்த மண்ணில் வாழ்ந்து என்னாலான பணிகளைத் தொடர உங்கள் ஆதரவை நாடி நிற்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது. (ஒ-1)

# தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு விண்ணப்பம்

வடமாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் செயற்படும் அபிவிருத்தி பணிகளை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்க மற்றும் மாகாண சபைகளில் பணியாற்றி ஓய்வுபெற்றும் தகைமைகளைக் கொண்டுள்ளதுமான இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பிரஸ்தாப அலுவலர்கள் ஆறு மாத காலப்பகுதிக்காக மட்டும் ஆள் சேர்ப்புச் செய்யப்படுவதுடன் விண்ணப்பிக்கும் போது அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்வித்த சான்றிதழின் பிரதி மற்றும் அலுவலரின் சுயவிவரத் தரவுகளுடன் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

# கிணற்றில் தவறிவீழ்ந்து யுவதி மரணம்

அதிகாலைவேளை தண்ணீர் அள்ளச் சென்ற யுவதி ஒருவர் கிணற்றுக்குள் தவறிவீழ்ந்து உயிரிழந்ததாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று நேற்று கல்வியங்காட்டில் இடம்பெற்றது.

செம்மணி வீதி,கல்வியங்காட்டைச் சேர்ந்த ஜெயன்சலா இராசரத்தினம் (வயது19) என்பவரே இந்தச் சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தவர் ஆவார்.

இவரது சடலம், மரண விசாரணைக்காக யாழ்.வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-14-78)

# தேர்தல் சுவரொட்டிகளை அகற்றுவதில் குடாநாட்டு மக்கள் மும்முரம்!

யாழ்ப்பாணம்,ஏப்,13

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலையடுத்து பிரசாரச் சுவரொட்டிகள் மற்றும் எழுதப்பட்ட வாசகங்கள், சின்னங்களை அகற்றுவதில் குடாநாட்டு மக்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வீட்டு மதில்கள், வியாபார நிலையங்களின் சுவர்களை நிறைத்திருந்த பல வர்ண சுவரொட்டிகளை அகற்றி சுத்தம் செய்வதை பரவலாகக் காணக்கூடியதாக உள்ளது.

அதேவேளை, அகற்றப்பட்ட சுவரொட்டிகள் வீதிகள் தோறும் சிதறப்பட்டும், குவிக்கப்பட்டும் உள்ளமையால் சூழல் அசுத்தமாகக் காணப்படுவதாக பலரும் தெரிவிக்கின்றனர். வர்ணம் பூசப்பட்டிருந்த தமது மதிர்சுவர்கள் சுவரொட்டிப் போட்டிகளால் அலங்கோலப்பட்டுள்ளதாகவும் மீண்டும் அவற்றைப் சீர்திருத்த செலவீனங்களை எதிர்நோக்குவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஒ-135)

# இலங்கை - சீன நெருக்கம் அதிகரிப்பது குறித்து அச்சப்படத் தேவையில்லை என்கிறது இந்தியா

பிராங்க்பர்ட், ஏப். 13

இலங்கையில் சீனாவின் அதிகரித்த முதலீடுகளுக்கும், நெருக்கத்துக்கும் தேவையில்லாத முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இலங்கையில் சீனா துறைமுகம் அமைப்பதால் இந்தியாவின் பாதுகாப்புக்கு எந்தவித அச்சுறுத்தலும் ஏற்பட வழியில்லை - என்று மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் மன்மோகன் சிங்குடன், எட்டு நாள் பயணமாக அமெரிக்கா மற்றும் பிரேஸில் செல்லும் பத்திரிகையாளர்களுடன் உரையாடிய வெளிவிவகாரத் துறையின் உயரதிகாரிகள் சிலரே இதனைத் தெரிவித்தனர்.

சீனாவின் அச்சுறுத்தல்கள் பற்றி எழுப்பிய சந்தேகங்களுக்கு, பத்திரிகையாளர்களுடன் அதிகாரபூர்வமற்ற உரையாடல் நடத்திய உயர் அதிகாரிகள், இலங்கையில் சீனாவின் அதிகரித்த முதலீடுகளுக்கும், நெருக்கத்துக்கும் தேவையில்லாத முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது எனத் தெரிவித்தனர்.

இதுகுறித்து வெளியுறவுத்துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியவை வருமாறு -

இலங்கை ஒரு சுதந்திர, ஜனநாயகநாடு. தீவிரவாதத்துக்கு எதிரான மிகப் பெரிய போராட்டத்துக்குப் பிறகு அந்த நாடு மீண்டும் புனர்நிர்மாணத்தில் ஈடுபட்டிருக்கிறது.

பொருளாதாரத்தை பழைய நிலைமைக்குக் கொண்டுவர அந்த நாட்டுக்கு அதிகரித்த அந்நிய முதலீடுகள் தேவைப்படுகின்றன. எந்த நாடு அதிக உதவிகளை அளிக்கிறதோ அந்த நாட்டுடன் அதிகரித்த உறவு வைத்துக் கொள்வதை நாம் எப்படித் தடுக்க முடியும்?

இலங்கையில் ரயில் பாதைகள் அமைக்கும் பணியில் இந்தியாவும், துறைமுகம் அமைக்கும் பணியில் சீனாவும் ஈடுபட்டிருக்கின்றன. இதில் தவறு காண எதுவும் இல்லை. இதனால் இந்தியாவின் பாதுகாப்புக்கு எந்தவித அச்சுறுத்தலும் ஏற்பட வழியில்லை - என்றார்.

தந்தேவாடா மற்றும் மேற்கு வங்க மாநிலம் லால்கரில் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மாவோயிஸ்டுகளுக்கும் சீனாவுக்கும் தொடர்பு ஏதும் இல்லை என்று மற்றொரு அதிகாரி தெரிவித்தார்.

அவர்களை இடதுசாரித் தீவிரவாதிகள் என்று கூறலாமே என்று கேட்டபோது -

மாவோயிஸ்டுகள் என்று கூறுவது கூடத் தவறு. சீனத் தூதரக அதிகாரிகள் அவர்களைத் தங்களது நாட்டுடன் தொடர்புபடுத்துவதைப் பார்த்து அதிர்ச்சி தெரிவிக்கிறார்கள். அவர்களுக்கும் சீனாவுக்கும் சம்பந்தம் இல்லை. சீனா குறித்த அச்சத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் - என்றார் அவர்.

பாகிஸ்தான், நேபாளம், மியான்மர், வங்கதேசம் மற்றும் இலங்கை போன்ற நமது பக்கத்து நாடுகளுடன் சீனா நெருக்கமான நல்லுறவு கொண்டிருப்பது நமது பாதுகாப்புக்கு ஆபத்தல்லவா என்று கேட்டபோது -

இதுவும் கண்மூடித்தனமான சீன எதிர்ப்பின் வெளிப்பாடுதான் - என்று கூறினார் அந்த அதிகாரி.

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 01 | 14.04.2010 புதன்கிழமை |
| திதி | : அமாவாசை பி.ப. 06.36 வரை |
| நட்சத்திரம் : | ரேவதி பி.ப. 05.34 |
| சுபநேரம் | : 04.35-06.05 வரை |
| ராகுகாலம் | : 12.05-01.35 வரை |
| தமிழ், சிங்கள புதுவருடப்பிறப்பு | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகவும் பெருமையோடு பாராட்டும் லாலா சோப் ஸ்தாபனத்தார்



தர்மம் தலைகாக்கும் சரியான நேரத்தில் உயிரையும் மானத்தையும் காக்கும். தனது உடல் ஆரோக்கியத்தை துச்சமென மதித்து ஓய்வு உறக்கமின்றி மக்களுக்காகவும் அதைவிட ஏழை எளிய மக்கள் என்றும் பாராது அன்பான மன நிறைவோடு உதவிக்கரம் நீட்டிக்கொண்டவருக்கு ஆண்டவனால் நல்ல தீர்ப்புக் கிடைத்தது. எவராலும் மறக்கவே முடியாது. தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகமே தன்னை மறந்து மூக்கில் விரல் வைத்து யோசிக்கும் அளவுக்கு பெரும் அதிர்வு கொண்டுள்ளது.

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய அதி உயர் மாண்புமிகு அமைச்சர் உயர்திரு டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எமது மக்களின் அசைக்கமுடியாத மக்கள் நாயகன் ஆகிக்கொண்டவருக்கு என்னால் ஆன தனிமை கொண்ட புகழ் பாடல்.

**லாலா சோப் தொழிற்சாலை,**

அச்சுவேலி. (சி/566534)

# பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,ஏப்,13

தீவக வலயப் பாடசாலைகளில் அனர்த்த பாதுகாப்புக் கல்விப் பொறுப்பாசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ்ணன் கேட்டுள்ளார்.(ஓ-1-267)

## விற்பனைக்கு

பான்சிக்கடைக்குரிய அனுமினியம் பிற்றிங்கினால் ஆன கண்ணாடி அலுமாரிகளும் 15' நீள கவுண்டர் மேசையும், முன்பக்க கண்ணாடி அலுமாரியும் பருத்தித்துறையில் உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: 0774084810

## தேவை

லான்ட்மாஸ்ரர் பெட்டி விலைக்குத் தேவை. தொடர்பு: 0776184713

## பொதுச்சபைக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு ஏற்பாடு

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் ஆலோசனைக்கு அமைய இதுவரை செயற்படாதிருக்கும் தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலைச் சங்கத்தின் பொதுக்கூட்டத்தை கூட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மேற்படி சங்கத்தைப் புனரமைப்பதற்காக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் அண்மையில் நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட இயக்குனர் சபையே தற்போது செயற்பட்டு வருவதாக தலைவர் நா.தவநாதன் தெரிவித்தார்.

வலி.வடக்கு, வலி.தெற்குப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களான அங்கத்தவர்களைக் கொண்டிருந்த இச்சங்கம் தற்போது வலி.கிழக்கு பிரதேசத்திற்கும் விஸ்தரிக்கப்பட வுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு 3மாணவர்கள்3A!, 12மாணவர்கள், பல்கலை செல்கின்றனர்! நீங்களும் பல்கலை செல்ல எம்முடன் இணையுங்கள்.

**A/L 2012 கலைப்பிரிவு நடைபெறுகிறது.**

புத்தாண்டு நாள் வகுப்புக்கள் வியாழன் பிற்பகல் 3மணி.

**மதுரம் இன்ஸ்ரிரியூட்,**

உயர்கல்விப் பிரிவு,கட்டப்பிராய்.

# யாழ்.மாவட்ட விவசாயிகள் வாழ்த்துகின்றோம்



7ஆவது நாடாளுமன்ற தேர்தலில் மாவட்ட மட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளுடன் வென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா (M.P.) அவர்களை உளமாரப் பாராட்டுவதோடு, மேலும் வடக்கு மக்களுக்கு சிறந்த பணியாற்றவும் அவருடன் தெரிவாகிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும், மனதார வாழ்த்துகின்றோம்.

**தலைவர்,நிர்வாகிகள்,**
**மாவட்ட விவசாய சம்மேளனங்கள்**
**உறுப்பினர்கள், தேசவள விவசாயிகள்**
**சம்மேளனம் , யாழ். மாவட்டம்.**

(சி/566538)

# Pre School வகுப்புகள்

(ஆங்கில மொழிமூலம்)

பாடசாலையில் ஆங்கில மொழிமூலம் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமைய ஆரம்பிக்கப்படுகிறது

**வகுப்புகள் : 1,2,3,4 & 5**

SUBJECTS *Maths, Enviorment Studies, English, Computer, Elocution.*

எமது புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கற்கைநெறிகளில் இணையும் மாணவர்களின் ஆங்கிலப் புலமை விருத்திசெய்யப்பட்டு அவர்களின் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளுக்கு எம்மால் உத்தரவாதம் அளிக்கப்படும்

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

No.15, 2/1, Sirambiyadi Lane,Off Stanley Road, Jaffna
Tel :021-2224550, 0777222422, 0714299935, 0773501499
Email :info@bchs.lk

# முன்பள்ளி பாடசாலை

(Maria Montessori Method)

| Class | Age | Time |
|---|---|---|
| Lower Nursery | 2½ - 3 | 8. 30 a.m 11.00 a.m |
| Upper Nursery | 3 - 4 | 8. 30 a.m 11.30 a.m |
| Pre - Grade | 4 - 5 | 8. 30 a.m 12.00 a.m |



100% ஆங்கிலத்தில் பயிற்சி

**பயிற்றுவிக்கும் முறைகள்**

- ஆங்கிலத்தில் பேச்சு பயிற்சிகள்
- (Audio & Video Visual) ஊடாக பாட்டு, கதைகள்
- கணனி தொடர்பான அறிவுசார் விளையாட்டுக்கள்
- பாரம்பரிய கதைகள், வரைதல், கைவேலைகள்
- இசைக்கருவி பயிற்சிகள் (Guitar, Keyboard)

100% எதிர்காலக் கல்வியில் வெற்றி

இன்றைய நவீன யுகத்திலே சிறு பிராயத்திலிருந்தே மாணவர்களின் ஆங்கில / தமிழ் அறிவை புதிய தொழில் நுட்பங்களுக்கேற்றவாறு விருத்தி செய்வதனூடாக எதிர்காலத்தில் அவர்கள் வளமான ஒரு வாழ்வைப் பெற்றுக் கொள்வதற்கமைவாக அவர்களை தயார்ப்படுத்தும் செயல் திட்டமே எமது முன்பள்ளிப் பாடசாலை

**BRITISH College of Higher Studies**

No.15,2/1, Sirambiyadi Lane,Off Stanley Road, Jaffna.
Tel: 021 2224550 HotLines: 0773501499 / 0777222422 Email: info@bchs.lk

மலர்வு: 11.01.1970

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

உதிர்வு 13.04.2006



அமரர்

## பஞ்சாட்சரம் கிருபாகரன்

**சாரங்கன் நகைமாடம்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அன்போடும் பண்போடும்
பாசத்துடன் எல்லோரிடம்
இன்முகம் காட்டி திடீரென மறைந்து
இன்றுடன் நான்கு வருடங்கள் சென்றாலும்
உம் நினைவுடனே வாழ்கின்றோம்
உமது ஆன்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல பெருங்குளம் பிள்ளையாரை
வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

**குடும்பத்தினர்.**

**சாரங்கா நகைமாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்.

**சாரங்கன் நகைமாடம்**
மின்சார நிலைய வீதி யாழ்.

(சி/566637)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மஞ்சி பிஸ்கட் நிறுவனம், ஐ.ரி.என்.நிறுவனம், நெஸ்ரோமோல்ட் நிறுவனம் ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ்.மாவட்டப் படையணியினரும் யாழ். செயலகமும் இணைந்து புத்தாண்டையொட்டி நடத்திவரும் விளையாட்டுப்போட்டித் தொடரில் ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

போட்டிகளில் ஆண்கள், பெண்கள் ஈடுபட்டிருப்பதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன், தமிழினியன்)

# யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் போட்டியில் பாடும்மீன், சென்.அன்ரனிஸ் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,ஏப்.13

யாழ்.லீக்கின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம், பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றி பெற்றுள்ளன.

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையே அணிக்கு 7பேர் கொண்ட விலகல் முறையிலான சுற்றுப் போட்டி நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த வெள்ளிக்கிழமை உரும்பிராய் மூன்று கோயில் மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம், பாஷையூர் சென். அன்ரனிஸ் (மறூன்) விளையாட்டுக்கழகத்துடன் மோதியது.

இதில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகம் தன்னை எதிர்த்துக் களமிறங்கிய பாஷையூர் சென். அன்ரனிஸ் (மறூன்) விளையாட்டுக் கழகத்தை 2:1 எனும் கோல் கணக்கில் வீழ்த்தியது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் (வெள்ளை) அரியாலை விளையாட்டுக் கழகத்துடன் மோதியது.

இதில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் (வெள்ளை) விளையாட்டுக்கழகம் அரியாலை விளையாட்டுக் கழகத்தை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

(50-6-23)

# யாழ்.வலயப் பாடசாலைகளின் சதுரங்கப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ்.கல்வி வலயப் பாடசாலைக்கு இடையிலான பெண்களுக்கான சதுரங்கப் போட்டியில் 15; 19 வயதுப் பிரிவில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:

**15 வயதுப் பிரிவு**

வேம்படி மகளிர் கல்லூரி(முதலாம் இடம்).

கொக்குவில் இந்துக் கல்லூரி (இரண்டாம் இடம்).

யாழ்.இந்துமகளிர் கல்லூரி (மூன்றாம் இடம்).

**19 வயதுப் பிரிவு**

யாழ்.இந்து மகளிர் கல்லூரி ( முதலாம் இடம்).

வேம்படி மகளிர் கல்லூரி( இரண்டாம் இடம்).

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி (மூன்றாம் இடம்). (6-23)

# பெண்களுக்கான சைக்கிளோட்டத்தில் வெற்றிபெற்ற வீராங்கனைகள்



வலி.வடக்கு, ஏப்.13

ஐ.ரி.என்.நிறுவனம், நெஸ்ரோமோல்ட் நிறுவனம், மஞ்சி பிஸ்கட் நிறுவனம் ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் படையினரும் யாழ்.செயலகமும் இணைந்து சித்திரைப் புத்தாண்டையொட்டி நடத்திவரும் விளையாட்டுப் போட்டித் தொடரில் பெண்களுக்கான 35 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

* முதலாம் இடம்- குமாரசாமி ஜனுசா (பண்டத்தரிப்பு).
* இரண்டாமிடம்- இராசன் பருவநிலா (மல்லாகம்).
* மூன்றாமிடம்- செல்வராசா கோடீஸ்வரி (பண்டத்தரிப்பு).
* நான்காமிடம்- செல்வராசா அனுசா (பண்டத்தரிப்பு).
* ஐந்தாமிடம்- கனகரெத்தினம் கனகதுர்க்கா (ஏழாலை).

(50-86)




# நான்காவது தடவையாகவும் யாழ்.மத்திய கல்லூரி வெற்றி

வலி.வடக்கு, ஏப்.13

வடக்கின் பெரும்போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையேயான துடுப்பாட்டப் போரைத் தொடர்ந்து இடம்பெறும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் ஆட்டத்தில் நான்காவது தடவையாகவும் தொடர் வெற்றியை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பெற்றுள்ளது.

எட்டாவது தடவையாக இடம்பெற்ற இப்போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றது.

எட்வேட் எடின் 15 நான்குகள், ஒரு ஆறுடன் 95 ஓட்டங்களையும், வதுசனன் 36 ஓட்டங்களையும், கபிகரன் 30 ஓட்டங்களையும், ஜேம்ஸ்ஜான்சன் 23 ஓட்டங்களையும் கோகுலன் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஹரிவதனன் 10 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 50 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் அமிர்தஜன் 05 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், விதுசன் 06 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் பிரியதர்சன், ஜெருசன் முறையே 24, 43 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

260 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 32.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

பிரணவன் 19 ஓட்டங்களையும், ஆதிரையன் 15 ஓட்டங்களையும், கஜீபன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜெரிக்துஷாந், கோகுலன், தனுஜன் ஆகியோர் தலா 02 விக்கெட்டுக்களையும் ஜெனோஷன், திவாகர், மதீசன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

போட்டி ஆரம்பமாகிய முதல் நான்கு வருடமும் தொடர்ச்சியாக யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுள்ளதுடன் இறுதி நான்கு போட்டிகளையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வெற்றி பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

(50-23-86)

# சித்திரைப் புத்தாண்டையொட்டி இன்று நடைபெறும் போட்டிகள்

வலி.வடக்கு, ஏப்.13

ஐ.ரி.என்., நெஸ்ரோமோல்ட், மஞ்சி பிஸ்கட் நிறுவனங்களின் ஆதரவுடன் யாழ். மாவட்ட படையினரும் யாழ்.செயலகமும் இணைந்து நடத்திவரும் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வில் இரண்டாம் நாளான இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் கோட்டையில் முற்பகல் 10 மணி முதல் விளையாட்டுப் போட்டிகள், கலைநிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இன்று சறுக்குமரம் ஏறுதல், முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை, கிடுகு பின்னுதல், தாச்சிப்போட்டி, போத்தலில் நீர்நிரப்புதல், பணிஸ் சாப்பிடுதல், கரண்டியில் பாலுாட்டுதல், விநோத உடை, படையினருக்கான கயிறு இழுத்தல் போட்டி மற்றும் சங்கீதக் கதிரை என்பனவும் இடம் பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளுடன் காலை முதல் கலை நிகழ்வுகளும் மைதானத்தில் நடைபெற்று பரிசளிப்பு நிகழ்வும் நடைபெறும். இன்று நடைபெறும் தாச்சிப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகமும் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(50-86)



யாழ்.மாவட்டப் படைகளின் தலைமையகத்தினால் நடத்தப்பட்ட பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் பெண்கள் கிரிக்கெட் அணி சம்பியனாகியது.

சம்பியன் கிண்ணத்தை யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க வழங்குவதையும், யாழ்.மாவட்டப் பெண்கள் அணிக்கான பரிசை வட மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் வழங்குவதையும்-

பாடசாலைகளின் அணித்தலைவிக்கான பரிசினை யாழ் [illegible] வேதநாயகம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் நேசன், தமிழினியன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



அமரர் சின்னத்தம்பி கிரவுஞ்சநாதன்

(முருகன் கோயில் வீதி, கிராம்புவில், சாவகச்சேரி)

எமது பாடசாலை ஆசிரியைகளான திருமதி ஜெயரஞ்சினி சிவகுமாரன் அவர்களின் பாசமிகு தம்பியும், திருமதி கலாநிதி ஞானரஞ்சிதம் அவர்களின் மைத்துனரும் ஆகிய சின்னத் தம்பி கிரவுஞ்சநாதன் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு நாமும் அத்துயரி னைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

யா/மீசாலை விக்னேஸ்வர ம.வி,
மீசாலை. (96918)

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
மாணவர்கள்.



## கிறீன் ஞாபகார்த்த (மிஷன்) வைத்தியசாலை மானிப்பாய்

(ஸ்தாபிதம் 1848)

**1. அதி நவீன இயந்திரத்துக்கூடாக மருத்துவ பரிசோதனைகள்**

மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையின் மருத்துவ ஆய்வுகூடப் பகுதிக்கு புதிதாக T.C-96+Elisa Microplate reader அண்மையில் கிடைக்கப்பெற்று, இந்த இயந்திரத்தின் ஊடாக T.S.H, $T_3$,$T_4$, P.S.A போன்ற மருத்தவ பரிசோதனைகள் செய்து கொடுக்கப்படுகின்றன என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றேன். மக்கள் இதனால் பயன்பெறலாம்.

**2. சத்திர சிகிச்சை தியேட்டர்**

இக்கட்டான காலத்தில் இயக்கமுடியாமலிருந்து மக்களுக்கான சேவை பாதிப்புறும் வண்ணம் இருந்த சத்திர சிகிச்சைத் தியேட்டர் பிரிவையும் இயங்க வைப்பதற்கு அதிநவீன இயந்திரங்கள், General anaesthesia machine, Theatre lamp போன்றவைகள் வந்துசேர்ந்த வண்ணம் இருக்கின்றன.

இங்கே கடமை புரியும் தாதிமார்களை சத்திர சிகிச்சைத் தியேட்டர் பயிற்சிக்காக திருச்சி ( இந்தியா) CSI பொது மிஷன் வைத்தியசாலைக்கு அனுப்பிக் கொண்டு இருக்கின்றோம். ஆகவே, சத்திர சிகிச்சை சேவைகளும் முழு அளவில் தொடங்கி வைக்கப்படும்.

**3. 'X'ray ('X' கதிர்) பிரிவு**

யுத்த சூழ்நிலை காரணமாக இயங்க வைக்க முடியாமலிருந்த் 'X' ray பிரிவும் இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதையும் மக்களின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

**4. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை , சண்டிலிப்பாய் - சுகாதாரத் திணைக்களம்**

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் இயங்கிக்கொண்டிருப்பதையும் அறியத்தருகிறேன். மக்கள் தங்கள் சுகாதாரம் சம்பந்த மான தேவைகளை இங்கு வருகை தந்து பூர்த்தி செய்யலாம்.

மருத்துவ மேலதிகாரி,
Medical Superintendent
Green Memorial Hospital
Manipay.

தொலைபேசி:
0212222747 (96915)


# அரசு சிறையில் அடைத்து வைத்தமையால்தான் பொன்சேகாவினால் வெற்றி பெறமுடிந்ததாம்!

## அவரது பாரியார் கண்ணீரைக் காட்டி சாதித்தார் என்கிறார் வீரவன்ஸ

கொழும்பு, ஏப்.13

அரசால் ஜெனரல் சரத் பொன்சேகா அடைத்து வைக்கப்பட்டிருந்ததன் காரணத்தாலேயே அவரால் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற முடிந்தது என்று விமல் வீரவன்ஸ கூறினார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற் றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்தத் தேர்தலில் அரசுக்குக் கிடைத்திருக்கும் வெற்றி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. போன்றவை நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்குத் தோல்வியைச் சந்தித்துள்ளன.

ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டு மக்களிடம் விடுத்த வேண்டுகோளுக்கு எதிராகவே மக்கள் தீர்ப்பு வழங்கியுள்ளனர். அரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் கொடுக்க வேண்டாம் என்றார் ரணில். ஆனால், மக்கள் அந்தப் பெரும்பான் மையை எட்டக்கூடிய தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

ஜே.வி.பி. கடும் வீழ்ச்சி கண்டுள்ளது. ஆகக் குறைந்தது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு ஆசனத்தையாவது அக்கட்சியால் வெல்ல முடியவில்லை. ஏதோ பொன்சேகாவின் தயவால் அக்கட்சியால் 5 ஆசனங்களைப் பெற முடிந்தது.

பொன்சேகா 'உள்ளே' இருந்தமையால்தான் அவரால் வெற்றி பெற முடிந்தது. அவரது பாரியார் அனோமா கண்ணீரைக் காட்டி, பொன்சேகாவை வெற்றிபெறச் செய்துவிட்டார். பொன்சேகா மேடையில் ஏறிப் பேசியிருந்தால் நிச்சயம் தோல்வியடைந்திருப்பார் - என்றார்.

## புதுவருட ஒன்றுகூடல்

கோப்பாய்,ஏப்.13

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றுவரும் தேசிய கல்வி நிறுவக கல்விமாணி கற்கைநெறி முதலாம் வருட மாணவர்களின் புதுவருட ஒன்றுகூடல் நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மாணவர் மன்றத் தலைவர் நா.விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும், தேசியக் கல்வி நிறுவக பட்டபின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி இணைப்பாளர் திருமதி சு.வில்வநாதன் ஆகியோர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (50-72)

## நூல்கள் அன்பளிப்பு

கோப்பாய்,ஏப்.13

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் நூலகப் பயன்பாட்டிற்கென அதன் பழைய மாணவரும் முற்போக்கு எழுத்தாளருமான நீர்வைப் பொன்னையன் ஒருதொகுதி நூல்களை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியுள்ளாரென பாடசாலை அதிபர் இ.குணநாதன் தெரிவித்துள்ளார். (50-72)

## நினைவுப் பேருரை

கோப்பாய்,ஏப்.13

நீர்வேலி கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு தினமும் மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை தெய்வீகப் பேருரை நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

இந்நிகழ்வில் பல இளம் சொற்பொழிவாளர்கள் பங்கேற்று வருகின்றனர். (50-72)


## கார் விற்பனைக்கு

அரச ஊழியரின் பாவனையில் உள்ள, கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட Nissan Sunny Supper Saloon FB14,இல WP GA XXXX Metalic Brown நிறமுடைய, A/C வசதிகளுடன் கார் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: இல.07, குறோசர் லேன், கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 0776579745. விடுமுறை தினங்களிலும், வேலை நாள்களில் பிற்பகல் 5 மணிக்குப் பின்பும் பார்வையிடலாம். (96910)



## ஓராம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 24 ★ 03 ★ 1955



மறைவு 27 ★ 04 ★ 2009

அமரர் சுப்பிரமணியம் அழகரத்தினம்

கூவியழைத்து நீங்கள் குலாவிய சந்தை
நெற்றி வியர்வைதன்னை பட்டுமேனியிலேந்திய காண
அயலவரும் அன்னிய உறவுகளும்
அழகு எங்கே என்று அதட்டுகின்றன
அன்புள்ள மனையாள் அழுதவிழிகளோடு
அப்பா...என்றழைக்க யார் உள்ளார் உங்கள்
அன்புச் செல்வங்களுக்கு....
ஓராண்டு சென்றும் ஓயாத உங்கள் நினைவுகளால்
ஒவென்றழுவது கேட்கலையோடு?
அப்பா....
அலையாது உங்கள் ஆத்மா
யாருமறியாத உண்மைகள் உங்கள் சாவில்
உறவுகள் அறியும்போது
உண்மையை புரிவார்கள்

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நி.மு:- பேராலை, பளை
த.மு:- விக்னேஸ்வரா வீதி,
ஐங்கரன் ரியூசன் அருகாமை, நெல்லியடி.

திருமதி சி.அழகரத்தினம்
(அம்மாச்சி)
பிள்ளைகள்.

(96579)



## மரண அறிவித்தல்

### சிவசூரியமூர்த்தி பாலசுந்தரம்



சாவகச்சேரி வடக்கு, மடத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசூரியமூர்த்தி பாலசுந்தரம் 10.04.2010 சனிக்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசூரியமூர்த்தி மற்றும் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் குமாரசாமி - நல்லம்மா தம்பதியினரின் பெறமகனும் கோகிலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நடராஜா அருளம்பலம் மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மரு மகனும் மதனி, மதனகுமார், கோகிலவதனா (ஜேர்மனி), யசோதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கேதீஸ்வரன், பிலோமினா, ரவிச்சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற பொன்னுச்சாமி, தங்கராசா (ஜேர்மனி), இராஜேஸ்வரி (ஜேர்மனி), மனோகரி (அமெரிக்கா), கமலநாதன் (கரணவாய்), இராஜபூபதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வரத்தினம் (ஜேர்மனி), மகேஸ்வரன் (அமெரிக்கா), தருமபால்ன், சரஸ்வதி (ஜேர்மனி), மீனாகுமாரி, தேவா, சாந்தி, மகாநாமதேவன் (பூசன், - நோர்வே) ஜெயக்குமார் (ஜேர்மனி), காலஞ்சென்ற சிறீ ஆகியோரின் மைத்துனரும், கஜானன், நேமியா, ஆருஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2010) முற்பகல் 10 மணிக்கு அவரது மடத்தடி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மடத்தடி,
சாவகச்சேரி. (சி/566528)

[illegible]



## 15ஆம் ஆண்டு நினைவலைகள்





கந்தையா குமரேசு

மலர்வு 10.09.1903 உதிர்வு 29.03.1995

திருமதி
தங்கம்மா குமரேசு

மலர்வு 06.06.1908 உதிர்வு 05.04.1995

ஆண்டுகள் பதினைந்து ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம் பாசத்தின்
உறைவிடமாய் இருந்த நீங்களும் உங்கள்
நினைவுகளும் எம்மைவிட்டு அகலா.

குமரேஸ் ரேடர்ஸ்,
பருத்தித்துறை. (92220)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.
தும்பளை மேற்கு, பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரியமில வாயுக்களின் பிடியிலிருந்து உலகினைக் காப்பாற்ற சைக்கிளிலில் அவனியைப் பவனி வரும் நேபாள இளைஞர்கள்

நவீன உலகில் எல்லா நாடுகளுமே அளவுக்கு அதிகமான எரிபொருள் பாவனையில் ஈடுபடுகின்றன. இதனால் வளிமண்டலத்தில் கரியமில்வாயுக்களின் செறிவு அதிகரித்துச் செல்கின்றது. இவற்றைக் கட்டுப்படுத்தி நிலைத்திருக்கக் கூடிய சூழல் பாதுகாப்பை எல்லா நாடுகளுமே வற்புறுத்தி நிற்கின்றன.

இந்த நிலையில் சூழல் பாதுகாப்பு மற்றும் கரியமில வாயுக்களை கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நேபாள் நாட்டின் தலைநகரான காத்மண்டுவில் இருந்து சைக்கிள் மூலம் உலகைச் சுற்றிவரும் ரஜீந்திர சப்கோத (Rajendra Sapkota), யோகி யாம் (yogi yam) ஆகியோர் தங்கள் பயணத்தின் ஒரு பகுதியாக இலங்கைக்கும் வந்துள்ளனர். அதன்போது யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அவர்களை உதயனுக்காக நேர்கண்டோம்.

அந்த நேர்காணலை உதயன் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.

**கேள்வி:** இதுவரையில் எத்தனை நாடுகளைச் சுற்றிவந்திருக்கிறீர்கள்? உங்களது இந்த நீண்ட முயற்சிக்குக் காரணமாக இருந்த விடயம் பற்றிக் கூறமுடியுமா?

**பதில்:** நாங்கள் நேபாள நாட்டைச் சேர்ந்தவர்கள். அதன் தலைநகரான காத்மண்டு பகுதியில் இருந்து வருகின்றோம். நேபாளத்தில் இருந்து புறப்பட்ட நாங்கள் இதுவரைக்கும் நான்கு நாடுகளுக்கு - இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், இலங்கை ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளோம். இலங்கைப் பயணத்தின் பின் இந்தியா ஊடாக பாகிஸ்தான் செல்லவுள்ளோம். நாங்கள் இருவரும் நேபாளத்தில் உள்ள மனோக்ராந்தி (Manokranti matrix) குருகுலத்தைச் சேர்ந்தவர்கள். இந்த ஆச்சிரமத்தின் குருவாக டாக்டர் யோய்விகசன்டா (Dr.Yogivikashanda) இருக்கின்றார். அவருக்கு கீழ் யோகா பயிற்சியைக் கற்றுவரும் நாங்கள் மற்றவர்களுக்கும் யோகா பயிற்சியையும் கற்பித்து வருகின்றோம். யோகா என்பது தெய்வத் தன்மை பொருந்தியது. அது இயற்கைச் சூழலில் பேணப்படும் தனித்துவக் கலையாகும். இந்தக் கலைக்கும் இயற்கைக்கும் நிறையவே தொடர்புகள் இருக்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டுதான் நாங்கள் உலகம் பூராகவும் சூழலைப் பாதுகாக்கும் வகையிலான சைக்கிளில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளத் தீர்மானித்தோம். யோகக் கலைமூலம் சுகமான, தேக ஆரோக்கியமான வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ள முடியும். இது உலகறிந்த உண்மை, தனிமனித ஆரோக்கியம், சூழலின் ஆரோக்கியமாக மாறும் சக்திமிக்க சமூகமாக மாறும். அதுபோல சூழலில் ஏற்படும் பாதிப்புக்களையும் ஒவ்வொருவரும் கணித்து அவற்றில் அக்கறை கொண்டு செயற்படுவது அவசியம். இதற்காகவே நாங்கள் சூழலை எத்தவகையிலும் மாசுபடுத்தாத வாகனமான சைக்கிளைத் தேர்ந்தெடுத் துப் பயணித்தோம். இதனை எல்லா நாட்டு மக்களும் யோசிக்க வேண்டும். ஏனென்றால் அந்த அளவுக்கு புவி வெப்பமடைந்து வருகின்றது. இதனால் நோய்கள், இறப்புக்கள் 'என்று மனிதன் பாரிய விளைவுகளைச் சந்திக்கவேண்டி ஏற்பட்டுள்ளது. நாங்கள் மீண்டும் இயற்கை உலகை கற்பனையில் மட்டுமே நினைத்துப் பார்க்க முடிகின்றது. எனவே இயற்கை சார்ந்த அதற்கு நட்புறவான் காரியங்களில் ஈடுபட்டுவரும் எமது குருகுலமே இந்த முயற்சிக்குக் காரணமாக இருந்தது. எங்களது இந்த முயற்சியை உலகெங்கும் அறியச் செய்து அதன் மூலம் வெப்பமடையும் உலகில் புதிய சிந்தனைகள், செயல்கள் மூலம் ஒரு பசுமை செய்வோம்.



**கேள்வி:** சைக்கிள் மூலம் உலகைச் சுற்றிவர முற்பட்டிருக்கும் நடவடிக்கை மூலம் உலகுக்குச் சொல்ல விரும்பும் செய்தி என்ன?

**பதில்:** எங்களின் நோக்கம் அதிகரித்த வாகனப் பாவனையைக் கட்டுப்படுத்தி இயற்கைச் சூழலை பாதுகாக்க கூடியதான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலகம் பூராகவும் சைக்கிளில் 5 வருடங்களில் சுற்றி வருவதாகும்.

இயற்கையில் உள்ள வாயுக்களை வாகனப் புகைகள் மாசுபடுத்துகின்றன. சைக்கிள் பாவனை இயற்கையை அழிக்காத வகையில் பயன்படும். அதன்மூலம் ஒரு பிரசாரத்தை உலக நாடுகள் எங்கும் பரப்புவதே எமது நோக்கமாக உள்ளது. நாங்கள் இருவரும் சூழலில் கொண்டுள்ள அக்கறையை உலக நாடுகளில் இருக்கும் ஏனையோரும் உணர்ந்து கொண்டால் எங்கள் நோக்கம் நிறைவேறும்.

**கேள்வி:** உலக நாடுகள் சேர்ந்து கடந்த வருடம் பிற்பகுதியில் கரியமில வாயு உற்பத்தியைக் குறைப்பது என்ற அடிப்படையில் ஹோர்பன் ஹேகன் மாநாட்டை நடத்தினார். ஆனால் இந்த மாநாடு தீர்க்கமான முடிவு ஏதும் எட்டப்படாமல் முடிவடைந்தது அனைவருக்கும் தெரியும்.இந்த நிலையில் உங்கள் இவ்வாறான சைக்கிள் பயணம் மக்கள் மத்தியில் எவ்வளவு தூரம் தாக்கத்தைச் செலுத்தும்?

**பதில்:** அபிவிருத்தி அடைந்த நாடுகளும், அடைந்துவரும் நாடுகளும் சேர்ந்து அந்த மாநாட்டை நடத்தின. அவை அரசுகள் மட் டத்திலான கொள்கைகளும், கோட்பாடுகளுமாகவே இருக்கும். புவி தொடர்பாக தொடர்ச்சியான மாநாடுகள் நடக்கின்றன. அவை வெறும் அறிக்கைகளாகவே வெளிவருகின்றன. எங்களுடைய பயணம் அப்படியானதல்ல. இது மக்களை விழிப்புணர்வுக்கு உட்படுத்தக் கூடிய பயணம். நாங்கள் சைக்கிளிலில் வந்திருக்கிறோம். சைக்கிள் பயணம் என்பது இயற்கையான பயணம். இதன் மூலம் நாங்கள் அனைவருக்கும் சொல்லும் செய்தி என்பது புவி வேகமாக வெப்பமடைந்துவருகிறது. இதற்கு முக்கிய காரணமாக அதிகரித்த வாகனப் பாவயையும் அவை வெளியிடும் வாயுக்களுமே. இவற்றை மாநாடுகள் மூலம் கட்டுப்படுத்த முடியாது. ஒவ்வொறு மக்களினதும் முயற்சிகள் மூலமே பாதுகாக்க முடியும்.

இதற்கு ஊடகங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நாடுகளின் அரசுகள் தொழில்நுட்பப் போட்டி காரணமாக மாநாடுகளை நடத்துவதும் இடையில் அவற்றை குழப்புவதாகவும் செயற்படுகின்றன. இவற்றையெல்லாம் விடுத்து எங்கள் முயற்சி போன்று சிறுசிறு முயற்சிகளே சூழலைப் பாதுகாக்க சிறந்தவழி. இவையே ஒவ்வொறு மக்களுக்கும் சுலபமானது, சிந்திக்கவைப்பது.

**கேள்வி:** உலக நாடுகளில் சூழல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு சைக்கிள் பயணம் மேற்கொண்டுள்ளீர்கள். உங்கள் நாட்டில்(நேபாளத்தில்) சூழல் பாதுகாப்பு கரியமிலவாயுக்களின் உற்பத்தி எப்படி இருக்கிறது?

**பதில்:** எங்கள் நாட்டில் இயற்கையான சூழலோடு இணைந்த வாழ்க்கையை எல்லா மக்களும் கொண்டிருக்க வேண்டும் என்பது வற்புறுத்தப்படுகிறது. அரசாங்கம் சூழலைப் பாதுகாப்பதற்காகப் பல்வேறு திட்டங்கள் அமுல்படுத்தி வருகிறது. அதிலும் குறிப்பாக தற்போது நேபாளத்தில் காட்டுவளம் 38 வீதமாக உள்ளது. அதனை மேலும் 15 வீதத்தால் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது. இவை தவிர எங்கள் ஆச்சிரமம் போன்ற பல ஆச்சிரமங்கள் இது தொடர்பாகச் சேவையாற்றி வருகின்றன. சூழல் விழிப்புணர்வு தொடர்பாகவும் மனிதனின் இயற்கையான வாழ்வு தொடர்பாகவும் எமது பணிகள் உள்ளன. ஒரு நாடு மட்டும் இப்படி இருந்தால் போதாது. எல்லா நாடுகளும் எல்லா மக்களும் சேர்ந்துதான் சூழல் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டும்; பாதுகாக்க வேண்டும்.

**கேள்வி:** சூழல் பாதுகாப்பில் ஊடகங்கள் பணியாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். உங்கள் இந்த முயற்சிக்கு உள்நாட்டிலும் சரி இதுவரை பயணித்த நாடுகளிலும் சரி எவ்வாறான ஒத்துழைப்பை ஊடகங்கள் வழங்கின?

**பதில்:** எங்கள் நாட்டில் Anapura Post, Kahtipur Gorkha fm போன்ற ஊடகங்கள் துணைநின்றன. இலங்கையில் TNL TV எங்களது பயணம் தொடர்பான விவரணத்தை வரும் 14ஆம் திகதி ஒளிபரப்பவுள்ளது. இவ்வாறு ஊடகங்களின் பங்களிப்பு எமக்கு இருப்பது மகிழ்ச்சியாக இருக்கின்றது. அந்த நம்பிக்கையில்தான் யாழ்ப்பாணத்து ஊடகங்களுக்கும் நாங்கள் எங்கள் பயணம் பற்றியும் சூழல் பாதுகாப்புப் பற்றியும் கருத்துக்களைப் பரிமாற விரும்புகின்றோம். அதற்கு அந்த ஊடகங்கள் சந்தர்ப்பம் தருவது மகிழ்ச்சியாக உள்ளது.

**மொழிபெயர்ப்பாளர் : R.R.குணசேகர**

**கேள்வி:** நவீன உலகில் நவீன சாதனங்கள், வாகனங்கள் என்பன தவிர்க்க முடியாதவையாக உணரப்படுகின்றன. இவை இவ்வாறு இருக்க உங்களில் இயற்கை மீதான விழிப்புணர்வுச் செயற்பாடு எத்தளவிற்கு வெற்றியளிக்கும் என எதிர்பார்க்கிறீர்கள்?

**பதில்:** நவீன உலகம் என்பது மனிதனால் உருவாக்கப்பட்டது. அவற்றை மாற்றியமைக்க மனிதனாலேயே முடியும். தேவைகள் புதிதாக இருந்தாலும் நிலைத்து நிற்கக்கூடிய சூழலை கட்டியெழுப்ப வேண்டிய தேவை எல்லா நாடுகளுக்கும் உண்டு. எனவே எங்கள் இந்த முயற்சியை பலபேர் வரவேற்கின்றனர். மேலும் பலர் வரவேற்பார்கள். அதன்மூலம் செய்திகள் பரவல் அடையும். இங்கு முக்கியமாக ஊடகங்களின் பங்களிப்பு, மாற்றுச் சக்தி வளப் பாவனை, சூழல் தொடர்பான அரசினது கொள்கைகள் என்ற மூன்று விடயங்கள் முக்கியமானவை. இந்த மூன்றும் சரியாக இயங்குமானால் சூழல் பாதுகாப்பு விவாதிக்கப்படும் விடயமாக மாறாது. அது அனைவராலும் பேணப்படும் சொத்தாக மாறிவிடும். (சந்திப்பு - சிமார்) ✱

# ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை - 2009; சில பாடசாலைகளின் முன்னணிப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.13

2009ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேற்றினை எய்திய மாணவர்களின் விவரத்தை சில பாடசாலைகள் அனுப்பி வைத்துள்ளன. அந்தப் பெறுபேறுகள் இங்கு பிரசுரமாகின்றன.

**சுண்டுக்குளி மகளிர் கல்லூரி**

**தமிழ் மொழி மூலம்**

லக்ஷனா விஜகுமாரன்-9ஏ, மகிழினி சுரேந்திரன்-9ஏ, அபிரா சற்குணநாதன்-8ஏ, ஜெனி ஜெயக்குமார்-8ஏ,ருத் ஸ்ரீபனி. அன்ரன் தேவராசா - 8ஏ, பானுஜா இளையநாதன்-7ஏ, துஸ்யங்கா தெய்வேந்திரம் -7ஏ, கனிமொழி சச்சிதானந்தம் -6ஏ, நிலானி சிவராசா-6ஏ, கீர்த்தனா சிவகுமார் -6ஏ, மதுரா தர்மராஜா - 6ஏ, ஜெபபிரியா உதயகுமார் - 6ஏ, பிருதுஷா இஸ்மாயில் -5ஏ, தாட்சாயினி ரவீந்திரன் - 5ஏ; சோபனா சுரேஷ்நேசன் - 5ஏ

**ஆங்கில மொழி மூலம்**

மதுராமி சாந்தன்-9ஏ,தாரணி திருநாவுக்கரசு-8ஏ, வேதுஜா ஜெயக்குமார் -7ஏ, சங்கீதா சந்திரசிறி-7ஏ, தாரணி ஞானசேகரம் -6ஏ, பிருதிவி சுந்தரகுமார் - 6ஏ, ஹேசிகா வர்ணகுலசிங்கம் - 6ஏ, மிச்செல் வினோஜா ஜெயராஜா-5ஏ, லக்ஷி ஜெயபாலசிங்கம் -5ஏ, சோபிதா மதிகரன் - 5ஏ

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.**

கங்காதரன் கிரிசாந் -6ஏ,பி,2சி, நடராசா புரந்தகன் - 6ஏ,பி,சி,எஸ், கிரிஜா இரத்தினகுமார் - 4ஏ,3பி,சி,எஸ், இராஜேந்திரம் விதுசன் - 4ஏ,3சி,எஸ், மஞ்சுளா கிருஷ்ணபிள்ளை - 3ஏ,2பி,3சி,எஸ், மஜிதாளினி இரஞ்சன் - 3ஏ,பி,3சி,2எஸ், கோவிந்தராஜா சத்தியபாலன் - 3ஏ,2பி, 2சி,எஸ்.

**விக்னேஸ்வராக் கல்லூரி**

**தமிழ்மொழி மூலம்**

க.கௌதமி - 8ஏ,சி, செ.திங்கரன் -6ஏ, பி,2சி, க.தேன்மொழி- 6ஏ, பி,சி,எஸ், ம.கிருஷாந்- 4ஏ,2பி,2சி, ம.உஷாந்தினி- 4எ,3பி,2சி, தே.சத்தியா - 4ஏ, பி,சி, லோ.தேனுஜா- 4ஏ,2பி,2சி

**ஆங்கில மொழி மூலம்**

அ.ராஜ்கரன் - 8ஏ,பி, பா.சரண்யா -6ஏ,பி,2சி, சி. அகிலேந்திரன்-4ஏ,3பி,2சி

**பரு.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை**

**ஆங்கில மொழி மூலம்**

த.பிரியந்தி-7ஏ,2பி, சி.கலீனா -7ஏ,பி, சி, யோ.தபித்தா-7ஏ,பி,சி, பு.நிலுக்ஸி -6ஏ, 2பி,சி, ந.சிந்துஜா -6ஏ, 3சி, சி.சிவதர்ஷா - 6ஏ,2சி எஸ், கே.கேமசாலினி - 5ஏ,3பி,சி, ந.மதுரா 5ஏ, 3பி,சி, இ.அகிலா- 5ஏ,3பி, சி, ப.மைதிலி- 5ஏ,பி,3சி, த. அருந்துசா - 5ஏ, 3பி,சி, ச.கார்த்திகாயினி -5ஏ, பி,3சி, பு.ஆரணி- 4ஏ, 2பி, 3சி

**தமிழ்மொழி மூலம்**

ப.சர்மிளா-8ஏ, சி, ச.சோபிகா- 6ஏ,2பி,சி, சி.சோபிகா - 6ஏ, பி,சி,எஸ், க.விதுஜா- 5ஏ,3பி,சி, க.மாதங்கி - 5ஏ,2பி,2சி, க.யாழினி - 5ஏ,2பி,2சி, சீ.சிந்தூரா 4ஏ,3பி,2சி, ச.தீபிகா - 4ஏ,2பி,2சி,எஸ், பா. தேனுசா- 4ஏ, 2பி,2சி,எஸ், இ. கம்ச வதனி - 4ஏ, 3பி, சி,எஸ், கா.யசோதரா- 4ஏ,பி,4சி, சி.தேவகி- 4ஏ, பி,3சி, ச. தர்ஷிகா- 4ஏ, 3சி,2எஸ், ச. தாசிகா-4ஏ, பி, சி, 3எஸ்.

# வாக்காளர்களின் மௌனத்தால் சர்வாதிகார ஆட்சி உருவாக்கம்

## ஆதங்கப்படுகின்றார் மங்கள சமரவீர

கொழும்பு,ஏப். 13

மக்கள் வாக்களிக்காமையினால் ஜனநாயக விரோத அரசு ஒன்று உருவாகியுள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கடும் போக்காளர்களினால் சர்வாதிகார ஆட்சி உருவாக்கப்படவில்லை எனவும், வாக்காளர்களின் மௌனமே இந்த ஆட்சியை உருவாக்கியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு எதிராக வாக்களித்தவர்கள் மற்றும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாதவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கவனித்தால் இந்த உண்மையை விளங்கிக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் மற்றும் இணையம் ஆகியவற்றை முடக்குவதற்கு அரசு முனைப்புக் காட்டி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்கள் தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வாதிகார நோக்கங்களைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக இந்த அரசு சட்டங்களைப் பயன்படுத்தாது எனத் தாம் நம்புகின்றார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனம் அமுல்படுத்தப்படுகின்றமையை ஐக்கிய தேசிய முன்னணி உறுதிப்படுத்தும் முனைப்புகளில் ஈடுபடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்.நகருக்கு சுமார் 4km தூரத்திலும் நல்லூர்க் கோயிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு, 3ஆம் கட்டை வீதியில் பாதுகாப்புமிக்க அமைதியான சூழலில் தூய்மையான குடிதண்ணீர் உள்ள இரண்டு வீடுகள் கட்டக் கூடிய 4¾ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விரும்பினால் இரண்டாகப் பிரித்துக்கொடுக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்

தொ.பே.: 077 2469015, 072 5682849, 078 6711952. (96907)


## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தில் மஹோற்சவம் நடத்திய சிவஸ்ரீ ஸ்ரீநிவாஸ நாகேந்திரக் குருக்களின் மரணச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அவரின் ஆத்மா எல்லாம் வல்ல மீனாட்சி சுந்தரேஸ்வரரின் பாதங்களில் சேர வேண்டுகின்றோம்.

கல்வியங்காடு,
021 222 2715.

சிவஸ்ரீ இ.கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் குடும்பமும்
ஆலய நிர்வாகத்தினரும்
(மீனாட்சி சுந்தரேஸ்வர ஆலயம், காலி). (96908)


## நாளை தேர் உலா வரும்
## யாழ். அத்தியடிப் பிள்ளையார்



வசந்த மண்டப பூசை காலை 8.15
எம்பெருமான் தேருக்கு எழுந்தருளல் 9.00
தேர்ப் பவனி ஆரம்பம் 9.30 —ஆலய நிர்வாகம்—

விளம்பர அனுசரணை:
**சிங்கப்பூர் ஜுவல்லறி**
93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## கா.சிவபாலன் நினைவுப் பேருரை

கோப்பாய்,ஏப்.13

அமரர் கா.சிவபாலனின் நினைவுப் பேருரையும் அஞ்சலி நிகழ்வும் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி ருக்மணி ஆனந்தவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் நினைவுப் பேருரையை யாழ். மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் சி. சிவகுமார் 'வாழைச் செய்கையில் நவீன முகாமைத்துவம்' என்ற தலைப்பில் நிகழ்த்துவார். (50-72)


## ஒத்துமாறல்

மேல் மாகாணப் பாடசாலையில் பணிபுரியும் ஆசிரியை வடமாகாணப் பாடசாலைக்கு ஒத்து மாற விரும்புகிறார்.
தொடர்பு: 077 0368086 அல்லது 077 6716621 (96906)

## அருள் முருகன் திருமண சேவை

Doctors, Engineers உட்பட விரும்பும் மணமக்கள் தேவைக்கு: தொ.பே.: 021 222 9334 (தரகர் தேவையில்லை) 03, யாழ்.வீதி, சிறாம்பியடி லேன், ஆரியகுளம் வாசிகசாலை லேன், பலாலி வீதி, யாழ்ப்பாணம். (96849)

## தவறிவிட்டது

மீசாலை வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த லோகேஸ்வரன் ராஜ்குமார் என்பவரது தே.அ.அ. (751752059V), இராணுவ அ.அட்டை என்பன 20.03.2010 அன்று சாவகச்சேரிக்கும் மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பெரிய அரசடி கபி கிறீம் ஹவுஸிடம் ஒப்படைக்கவும். T.P-072 9566249, 0774410912 (96912)

## வேலையாள்கள் தேவை

LDP, STP அனுபவமுள்ள பொலித்தீன்(Shopping Bag) மெசின் ஒப்பறேற்றர் தேவை.

தொடர்புகளுக்கு:
**சேகர் குளிர் ஊற்று**
இல.400, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 6634 (96914)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ்.கலட்டி அம்மன் வீதியைச் சேர்ந்த முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர்

**திரு.பிலிப் தருமநாயகம்**

அண்மையில் யாழ்.மாவட்ட நீதிபதி அ.பிறேம்சங்கர் அவர்கள் முன்னிலையில் யாழ்ப்பாண நீதி மற்றும் நிர்வாக மாவட்டத்திற்கான சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, பெங்களூர் சென்யோசேப் கல்லூரி, சென்னை கிறித்தவக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார். விளையாட்டுத் துறையிலும் மிக ஈடுபாடுள்ளவர். யாழ்.மத்திய கல்லூரியின் உதைபந்தாட்ட அணியின் தலைவராகவும் இருந்துள்ளார். சென்னைப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியான இவர் சிலகாலம் நைஜீரியாவில் ஆசிரியராகவும் பணிபுரிந்தவர். மனிதநேயமும், சமய சமூகப் பற்றும் கொண்ட இவரது சேவை தொடர வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம். (96903) உறவினர், நண்பர்கள்.

## தமிழ் உறவுகளுக்கு நன்றி



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதும் என்மீதும் நம்பிக்கை வைத்து வாக்களித்த அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள்.

யாழ். மாவட்டத்தில் அதிகூடிய வாக்குகளைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய சாவகச்சேரித் தொகுதி மக்களுக்குச் சிறப்பான நன்றிகள். எனக்குத் தோளோடு தோள்நின்று உதவிய அனைவருக்கும் எனது தோழமைமிகுந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்றும் உங்கள் பணியில்
கந்தையா அருந்தவபாலன். (வி/566524)

## மரண அறிவித்தல்

### நடேசு குணசசிகரன் (சசி)

[உரிமையாளர் சாதனாஸ்]



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 426/4, கில்னர் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு குணசசிகரன் 11.04.2010 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசு - கமலா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா மற்றும் இராஜேஸ்வரியின் பெறாமகனும் காலஞ்சென்ற வரதராசா மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயலலிதாவின் அன்புக் கணவரும் சர்மிளா, சசிரேகா, சாதனா ஆகியோரின் அருமைத் தந்தையும் கௌரி மனோகரன், தேவிகாராணி (கொழும்பு), ஜெயசிறிரட்ணாகரன் (கனடா), சந்திரிகா (கனடா), ராதிகா (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரரும் நவரத்தினம், மோகனதாஸ் (கொழும்பு), நந்தினி (கனடா), விஜயகுமார் (கனடா), லோகராசா (கனடா), பிரபாகரன் - சாளினி (சுவிஸ்), பாலகிருஷ்ணன் - நிர்மலா (கனடா), விஜயலலிதா (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனரும் கிருஷாந்தி (பிரதேச செயலகம், உடுவில்), காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் பிரபாகரன் (கரன் எலக்ரிக்கல், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சித்தப்பாவும் சமித்தன், சமிக்கா, சகானா, புருசோத்தமன், சுரபி, நிதர்ஷன் ஆகியோரின் பெரியப்பாவும் யோகச்சந்திரன், ரேணுஜா, துஸ்யந்தி, வையந்தி, அனந்தப் பிரகாஷ், நிதுஷா, நிறோன், டிசோன், நிம்ஷா, துரஷிகன், பிரவிந், அனுஷிகன் ஆகியோரின் மாமனும் லக்ஷிகன், ஜெயசீலக்ஷன், அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.04.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

426/4, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம். (96911)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்வி குணரட்ணம் இந்துமதி



கருகம்பானை, கீரிமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இளவாலையில் வசித்தவருமாகிய குணரட்ணம் இந்துமதி 10.04.2010 சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் குணரட்ணம் - வடிவாம்பிகையின் அன்பு மகளும் ராஜ்குமார், உதயகுமார், கலாவல்லி ஆகியோரின் சகோதரியும் ரூபி, லலிதாம்பிகை, ரட்ணகுமார் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.04.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாக்கியபுலம், ஏழாலை மேற்கு, சுன்னாகத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கட்டுப்பிட்டி மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.உதயகுமார்
(சகோதரன் - தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்).

நாக்கியபுலம்,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம். (96909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகிர்தி வருஷப்பிறப்புக் கருமம்

## வாக்கிய பஞ்சாங்கப்படி

கலியுகாதி சுத்ததினம் 1866834,நாடி 58 விநாடி 07, தற்பரை 30 க்குச் சரியான விரோதி ஸு பங்குனி மீ 30உ(14-04-2010)செவ்வாய்க்கிழமை வைகறை நாடி 58 விநாடி 07 (மணி 5-21) இல் அபரபக்க அமாவாசைத் திதியில்,ரேவதி நஷத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் வைதிருதி நாம யோகத்தில், சதுர்பாத கரணத்தில், மீன லக்கினத்தில், தனு நவாம்சத்தில், சுக்கிரன் காலவோரையில், சனி சூக்கும வோரையில், ராசத் குண வேளையில் நக்ஷத்திர பக்ஷியாகிய மயில் உண்டித்தொழிலும் சூக்கும பக்ஷி அசுரத்தொழிலும் செய்யுங் காலத்தில் இப்புதிய விகிர்தி வருஷம் பிறக்கின்றது. அன்று பின்னிரவு நாடி 48 விநாடி 07 (மணி 1-21 ) முதல் விகிர்தி ஸு சித்திரை 1 உ புதன்கிழமை காலை நாடி 8 விநாடி 07 (மணி 9-21) வரை விஷுபுண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் விளாவிலையும், காலில் கடப்பமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து பொன்னிறமுள்ள பட்டாடையாயினும், வெள்ளை, சிகப்புக்கரை அமைந்த பட்டாடையாயினும் உடுத்து பவளம், முத்து, வைரம், புஷ்பராகம் இழைத்த ஆபரணமணிந்து, சுகந்த சந்தனம் பூசி நறுமலர் சூடி விநாயகர் முதலிய குல தெய்வ வழிபாடு செய்து வீடுகளில் சூரியனுக்கு பொங்கல், பூஜை செய்து இயன்ற தானதருமங்களியற்றி குரு, பெற்றாரை வணங்கி ஆசி பெற்று, இனத்தவர் நண்பர்களுடன் அளவளாவி ,அறுசுவை அமைந்த உண்டிகளுடன் வேப்பம்பூ,பொறிக்கறி,கசப்பு என்பவை சேர்த்தருந்தி தாம்பூலம் தரித்து கண்ணாடி, தீபம் நிறைகுடம் முதலிய மங்கலப் பொருள்களை தரிசித்து புதிய வருஷ பலன்களை வாசித்தும் கேட்டும் நன்குணர்ந்து அரியதவத்தாற் பெற்ற மானுடப்பிறவியிற் செயற்பாலனவற்றை இனிது சிந்தித்து மங்களகரமாக வாழக்கடவர்.

மருத்து நீர்: தாழம்பூ, தாமரைப் பூ,மாதுளம் பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார், செங்கழுநீர், வில்வம்,அறுகு, பீர்க்கு,பால்,கோசலம்,கோமயம், கோரோசனை, மஞ்சள்,மிளகு, திற்பலி, சுக்கு இவைகளை சுத்த ஜலத்திலிட்டு காய்ச்சிக்கொள்க.

**சங்கிரம தோஷ நக்ஷத்திரங்கள்:** ஆயிலியம், மகம், பூரம், உத்தரத்து 1ஆம் கால்,கேட்டை, பூரட்டாதி 4ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ் செய்து தான தரும வழிபாடு செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்யக்கடவர்.

**குருசாரா பலன்:** குரு வருஷாதியாக சித்திரை மீ 20 உ வரையும் , ஐப்பசி மீ 24 உ முதல் கார்த்திகை மீ 5உ வரையும் கும்ப ராசியில் நிற்கையால் தேச சௌக்கியம், நன்மைகள் விளைவு விருத்தியும் உண்டாம். சித்திரை மீ 21உ முதல் ஐப்பசி மீ 23உ வரையும் . கார்த்திகை மீ 6உ முதல் வருஷாந்தம் வரையும் மீன ராசியில் நிற்கையால் அக்காலத்தில் மழையினால் வனங்களும் தடாகங்களும் விசேட விருத்தி அடைதலும், பயிர்கள் பலித்தலும், விவாகாதி கருமங்களாலும், உற்வச வாதிகளாலும் மக்களுக்கு சந்தோஷமும் சுகமும், எள்ளு பருத்தி விளைவும், யானை, குதிரைகளுக்கு பீடையும் உண்டாகும்.

**சனிசாரா பலன்:** சனி வருடம் முழுவதும் கன்னி ராசியில் நிற்கையால் இக்காலம் தானிய விளைவும், தானியங்கள் மலிவடைதல், சனங்களுக்கு சுகமும் அதிக மழையும் உண்டாம்.

## திருக்கணித பஞ்சாங்கப்படி

விகிர்தி வருஷம் சித்திரை மாதம் 1ஆம் திகதி (14.04.2010) புதன்கிழமை காலை உதயாதி நாழிகை 02-19 மணி காலை 06-57 இல் 'விகிர்தி' என்னும் பெயருடைய புதுவருஷம் பிறக்கின்றது. அன்று நட்ச்சத்திரம் ரேவதி 3ஆம் பாதம், திதி அமாவாசை, மரணயோகம். இது 60 வருட சுற்று வட்டத்தில் 24ஆவது வருஷமாகும். செவ்வாய்க்கிழமை இரவு நாழிகை 52.19 (மணி 02-57) முதல் புதன்கிழமை பகல் நாழிகை 12.19 (மணி 10-57) வரையும் மேட சங்கிரமண புண்ணிய காலம் எனப்படும். வருஷம் பிறக்கும்போது உதயலக்கினம் ''மேடம்'' ஆக அமைகிறது.

புதுவருட தினமாகிய சித்திரை 1ஆம் திகதி புதன்கிழமை அதிகாலையில் சகலரும் எழுந்து சங்கற்பபூர்வமாக மருத்து நீர் தேய்த்து தலையில் வேப்பமிலையும், காலில் கொன்றையிலையும் வைத்து ஸ்நானஞ்செய்து பச்சை நிறம் கலந்த பட்டாயினும் அல்லது பச்சைக் கரை வைத்த வெள்ளைப் புது வஸ்திரமாயினுந் தரித்து மரகதம் சேர்த்திழைக்கப்பெற்ற ஆபரணங்களையணிந்து, நித்திய கர்மானுஷ்டானம் முடித்து, கண்ணாடி, தீபம், பூரண கும்பம் முதலிய மங்கலபொருள்களைத் தரிசித்து, விநாயகர் முதலிய இஷ்டகுல தெய்வங்களைத் தரிசனம் செய்து, புதுவருட சூரியனுக்குப் பொங்கல், வழிபாடுகள் செய்து, இயன்ற தானாதிகள் வழங்கி, குரு, பெற்றோர் முதலிய பெரியோர்களை வணங்கி, அவர்கள் ஆசிபெற்று பிதிர் விரதானுசாரிகள் சிரார்த்தம், தர்ப்பணம் என்பன செய்து, நண்பர்கள், விருந்தினர்களை வரவேற்று, உபசரித்து, சுற்றத்தினருடன் இருந்து மோதகம், வடை, மாதுளம்பழம், நெல்லிக்காய்த் துவையல் முதலியவற்றுடன் அச்சுவைப் பதார்த்தங்களையும் போஜனஞ்செய்து, தாம்பூலமருந்தி, சுகந்த சந்தன புஷ்பாதிகளையணிந்து, புதுப் பஞ்சாங்க பலன்களைக் கேட்டு புதுவருடத்தில் ஆற்றக்கூடிய நற்கருமங்களைச் சிந்தித்து மங்களகரமாக வாழ்வார்களாக.

**சங்கிமர தோஷ நட்சத்திரங்கள்:** ஆயிலியம், மகம், பூரம், உத்தரம் 1ஆம் கால், கேட்டை, பூரட்டாதி 4ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி.

**மருத்துநீர்:** தாழம்பூ, தாதுமாதுளம் பூ, தாமரைப்பூ, துளசி, வில்வம், அறுகு, பால், கோமயம், கோசலம், கோரோசனை, குங்குமப் பூ, பச்சைக் கற்பூரம், மஞ்சள், சுக்கு, திற்பலி ஆகியவற்றைச் சுத்த ஜலத்தில் இட்டுக் காய்ச்சிய கஷாயமாகும். பூவகை கிடையாவிடின் அவைகளின் இலை, பட்டை, வேர், கிழங்கு யாதாயினும் உபயோகிக்கலாம்.

# விகிர்தி வருடத்தில் உங்கள் இராசிக்கு என்ன பலன்...?

### மேடம்



உங்களுக்கு குரு, சனி, கேது அனுகூலக் குறைவான இடத்தில் உள்ளனர். ஆனால், கேதுவும் சனியும் செப்ரெம்பரில் பெயர்ச்சியான பிறகு எண்ணற்ற பலன்களை வழங்குவர். திட்டமிட்டு செயற்படாத பட்சத்தில், பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். பணவரவு தேவைகளை நிறைவு செய்யும் அளவுக்கு இருக்கும். கடன்கள் அடைபடும். குருபகவான் அதிகாரவக்ரகதியாக மே, ஜூன், ஜூலை மாதங்களில் கும்பராசியில் அமருகிறார். அந்த சமயத்தில், ஆதாய பணவரவு தாரளமாகக் கிடைக்கும். நன்னடத்தை குறைவானவர்களின் சேர்க்கையால் சிரமங்களைச் சந்திக்க வேண்டி வரும். ஆண்டின் பிற்பகுதியில் நிலைமை சீராகும்.

வீடு, வாகன வகையில் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். சிலர் பழைய வாகனத்திற்குப் பதிலாக புதிய வாகனம் வாங்குவர். புத்திரர்களின் செயலில் இருந்த மந்தநிலை மாறும். திறமையை வளர்ப்பதிலும் புதிய விடயங்களை அறிவதிலும் கவனம் கொள்வர். வழக்கு விவகாரத்தில் அனுகூல நிலை ஏற்படும். தம்பதியர் ஒற்றுமை சிறப்பாக இருக்கும். நண்பர்களுடன் இருந்த கருத்துவேறுபாடு சரியாகும். இச் சமயத்தில் திருமணமுயற்சி செய்கிறவர்களுக்கு அனுகூல நிலை கை கூடும். தந்தை வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். உடல்நலம் சுமாராக இருக்கும்.வெளிநாடு வேலை வாய்ப்பை விரும்புபவர்களுக்கு மே, ஜூன், ஜூலை மாதங்களில் வெற்றி கிடைக்கும்.

**தொழிலதிபர்கள்:** தொழில் சார்ந்த வகையில் சுமாரான நிலையே தென்படுகிறது. இரும்பு, புடைவையகம், மின்சாதனங்கள் , மருத்துவ உபகரணங்கள், வீட்டு சாதனப் பொருள்கள், கட்டுமானப் பொருள் உற்பத்தி செய்பவர்கள் சீரான உற்பத்தியும், ஓரளவு லாபமும் கிடைக்கப்பெறுவர். இதர தொழிலதிபர்களுக்கு இவர்களை விட சற்று மேம்பட்ட நிலை இருக்கும். தொழிலை நடத்த கடன் வாங்கும் போது தகுதிக்கு மீறி செயற்பட்டால், சிரமங்களைச் சந்திக்க நேரிடும். உற்பத்தி செலவு அதிகரிக்கும்,

**வியாபாரிகள்:** கணனி, கைத் தொலைபேசி, விளையாட்டுச் சாதனங்கள், பாத்திரங்கள், கட்டுமானப் பொருள்கள், காலணி, கம்பளி, தோல், மின்சாதனப் பொருள்கள், தளபாடங்கள், அச்சக உபகரணம், கடை நடத்துபவர்கள் கடும் முயற்சியின் பேரிலேயே தொழிலை நடத்த முடியும். விற்பனையும், லாபமும் ஓரளவுக்கு இருக்கும். நகை, புடைவையகம், வாசனைப் பொருள்கள் விற்பனை செய்பவர்கள் கூடுதல் லாபம் கிடைக்கப் பெறுவர். ஏனைய வியாபாரிகளுக்கும் சுமாரான லாபமே இருக்கும்.

**பணியாளர்கள்:** அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்களுக்கு கவனச்சிதறல் காரணமாக அதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாக நேரிடும். நிர்வாக நடவடிக்கையும் இடமாற்றமும் ஏற்படும். அத்தியாவசிய தேவைகள் நிறைவேறும் அளவுக்கு பணவரவு இருக்கும்.

**மாணவர்கள்:** தகவல் தொழில்நுட்பம், விவசாயம், சிவில் பொறியியலாளர், மருத்துவம், வங்கியியல், ஆசிரியர் பயிற்சி, நிதிநிர்வாகம், சட்டம், விலங்கியல், இலக்கியம்,அழகுக் கலை ஆகிய துறைகளில் படிக்கும் மாணவர்களுக்கு படிப்பு சுமாராகவே இருக்கும். கவனத்துடன் படிப்பதால் தரத்தேர்ச்சி பெறுவர். வேலைவாய்ப்பு கிடைப்பதில் தடங்கல் ஏற்படும். படிப்புக்கான பணவசதியும் சுமாராகவே இருக்கும்.

**பெண்கள்:** அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரியும் பெண்களுக்கு கவனக்குறைவு காரணமாக பிரச்சினைகள் ஏற்படும். சலுகைகள் அதிகம் கிடைக்க வாய்ப்பில்லை. குடும்பப் பெண்கள், கணவரின் அன்பைப் பெற்று மகிழ்ச்சியாக இருப்பர். மே, ஜூன், ஜூலை மாதங்களில் ஆபரண சேர்க்கை உண்டு. சுயதொழில் நடத்தும் பெண்கள் மூலதனத்தை அதிகரித்தால் பணச்சிக்கலை சந்திப்பர். உற்பத்தி, லாபம் சுமாராகவே இருக்கும். பொருள் பரிவர்த்தனையில் பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றுவதால் நன்மை உண்டு.

**அரசியல்வாதிகள்:** கடந்த காலங்களில் செய்த நற்பணிகளுக்கு குறைந்த அளவிலான அங்கீகாரமும் பாராட்டுமே கிடைத்தன. மே, ஜூன், ஜூலை மாங்களில் புதிய திட்டங்களை செயற்படுத்தி அபரிமிதமான வளர்ச்சி பெறுவீர்கள். எதிரியாக செயற்பட்டவர்களும் உங்களைத் தேடி வந்து நட்பு கொள்ள முயற்சிப்பர். ஆதரவாளர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்வீர்கள்.

**விவசாயம்:** வருடத்தின் முற்பகுதியில் பயிர் மற்றும் கால்நடை வளர்ப்பில் செலவு அதிகரிக்கும். பலன் குறைந்த அளவிலேயே இருக்கும். வருட பிற்பகுதியில் [illegible] அதிகரிக்கும். கால்நடைகள் [illegible] கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தும் அனுகூலம் உள்ளது.

### இடபம்



உங்கள் ராசிக்கு இந்த வருடம் பிரதான கிரகங்களில் குரு, கேது மிகுந்த அனுகூலத் தன்மையுடன் உள்ளனர். ராகுவும், சனியும் சில தொந்தரவுகளைத் தருவர். பேச்சைக் குறைத்தால், இந்தத் தொந்தரவுக்கும் இடமில்லை. பணவரவை உயர்த்திக் கொள்ள வாய்ப்புகள் தேடி வரும்.

வீடு, வாகன வகையில் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். புதிதாக அபவிருத்திப் பணிகளைச் செய்தால் நஷ்டம் ஏற்பட வாய்ப்புண்டு. வாகனங்களை வேகமாக இயக்குவதைத் தவிர்க்கவும். புத்தாண்டின் ஆறுமாதத்திற்கு பின் பெயர்ச்சியாகிற சனி பகவான், கண்டச்சனி என்ற நிலையில் இருந்து விலகுவார். அப்போது இந்த நிலைமை சீராகும். ஆனால், புத்திரர்கள் வகையில் சில தொல்லைகளை சந்திக்க நேரிடும். மே, ஜூன், ஜூலை மாதங்களில் குருபகவான் அதிகார வக்ரகதியாக கும்ப ராசியில் அமருகிறார். இந்த மூன்று மாதங்களில் கடன் வாங்கினால் அடைப்பதற்கு சிரமப்பட வேண்டியிருக்கும். மேலும், இக்காலத்தில் தேவையற்ற வம்பு வழக்குகளிலும் மாட்ட நேரும். தம்பதியர் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. பொறுமை தேவை. வருடத்தின் முதல் ஆறு மாதத்திற்குள் குடும்பத்தில் திட்டமிட்ட சுபநிகழ்ச்சிகளை நடத்த அனுகூலம் உள்ளது. வெளிநாடு வேலைவாய்ப்பை விரும்புபவர்களுக்கு தடைகளின் பேரிலேயே விருப்பம் நிறைவேறும்.

தருபவர்: வித்யா

**தொழிலதிபர்கள்:** புடைவை, பால், சாயப்பொருள்கள், காகிதம், மின் சாதனங்கள், அலங்காரப் பொருள், வர்ணப்பூச்சுத் தொழிற்சாலை அதிபர்களுக்கு இந்தச் சிக்கல் அதிகமாக இருக்காது. இவர்கள் புதிய ஒப்பந்தங்களைப் பெற்று தாராள லாபம் பெறுவர். தடைபட்ட அபிவிருத்திப் பணிகளை இனிதாக நிறைவேற்றலாம். வைத்தியசாலை, ஓட்டல், விடுதி, முகவர்கள், வாடிக்கையாளர்களுக்கு சலுகை புரிந்து தொழிலில் வளர்ச்சி இலக்கை எட்டுவர். மற்ற தொழிலதிபர்கள் சிரமங்களின் பேரிலேயே லாபம் ஈட்ட முடியும்.

**வியாபாரிகள்:** நகை, புடைவை, அழகு சாதனப் பொருள்கள், வாசனை திரவியங்கள், உணவுப் பண்டங்கள், மின்சாதனங்கள், அலங்காரப் பொருள்கள், விளையாட்டுச் சாதனங்கள், கட்டுமானப் பொருள்கள், தளபாடங்கள், விற்பனை செய்பவர்கள் திறமையாக நடந்து வளர்ச்சியும் கூடுதல் லாபமும் காண்பர். மற்ற வியாபாரிகளுக்கு இவர்களை விட சற்று குறைவான லாபம் கிடைக்கும். வாகன பராமரிப்பு செலவு அதிகரிக்கும்.

**பணியாளர்கள்:** அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள், தங்கள் பணியை சிறப்பான முறையில் நிறைவேற்றுவர். நிர்வாகத்தின் சலுகையும், பாராட்டும் கிடைக்கும். பணி இடங்களில் அதிக வாக்குவாதம், பகைமை எண்ணம் உருவாக வாய்ப்பிருக்கிறது. தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் வருடமுற்பகுதியில் பணியில் சிறப்புப் பெறுவர்.

**மாணவர்கள்:** தகவல் தொழில்நுட்பம், சட்டம், பொறியியல், விவசாயம், ஆசிரியர் பயிற்சி, இலக்கியம், பத்திரிகையியல், ஆராய்ச்சி படிப்பு, ஓவியம், போட்டோ, விளம்பரத்துறை அச்சுதொழில்நுட்பம் பெறும் மாணவர்கள் பொறுப்புடன் படித்து தரத்தேர்ச்சி அடைவர். வேலை வாய்ப்பு எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். படிப்புக்கான செலவு அதிகரிக்கும்.

**பெண்கள்:** அரசு, தனியார் துறையில் பணிபுரியும் பெண்கள், பணியிடங்களில் இருந்த சிரம சூழ்நிலை விலகப்பெறுவர். தேங்கி நின்ற வேலைகள் எளிதில் முடிந்து விடும். பதவி உயர்வு, விரும்பிய பணியிட மாற்றம் மே, ஜூன், ஜூலை மாதங்களில் கடும் முயற்சியின் பேரில் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. குடும்பப் பெண்கள் வீட்டுச்செலவுக்கு சிரமப்பட வேண்டியிருக்கும். சுயதொழில் புரியும் பெண்கள் அதிக விற்பனையும் நிறைவான பணவரவும் பெறுவர்.

**அரசியல்வாதிகள்:** உங்களின் சேவையால் பலன் பெற்றவர்கள் விசுவாசத்துடன் நடந்து கொள்வர். இருப்பினும் அரசியல்பணியில் ஆர்வக்குறைவான மனநிலையைப் பெறுவீர்கள். பதவிகளை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு கிடைப்பது சிரமமே. புத்திரர்களின் செயல்பாடுகள் உங்களின் வளர்ச்சிக்கு இடையூறு தருவதாக அமையும். அரசியலுடன் தொழில் நடத்துபவர்களுக்கு லாபம் நன்றாக இருக்கும்.

**விவசாயிகள்:** பயிர் வளர்க்க தேவையான அனைத்து உதவிகளும் தடங்கலின்றி கிடைக்கும். தாராள மகசூல் உண்டாகும். கால்நடைகளுக்கு மருத்துவச் செலவு அதிகரிக்கும். நிலம் தொடர்பான விவகாரங்களில் உள்ள சட்ட சிக்கல்கள் தீர கால தாமதமாகும். சுபநிகழ்ச்சிகளை எளிய முறையில் நடத்துவதால் நற்பலன் பெறலாம்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் ஏகோபித்த பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை உறுதிப்படுத்தியுள்ள தேர்தல்!

**நாடாளுமன்றத் தேர்தல் முடிவுற்ற நிலையில் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக 'புதினப்பலகை' இணையத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வழங்கிய பேட்டி இங்கு பிரசுரமாகின்றது.**



புலம்பெயர்ந்த எமது மக்கள் தந்த பின்புல ஆதரவும் பலமும் தான் தேர்தலுக்கு முன் நாம் எதிர்கொண்ட உட்கட்சி முரண்பாடுகளை துணிவுடனும் தெளிவுடனும் கையாள்வதற்கு உதவியது என தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

கேள்வி: இம்முறை வாக்களித்த தமிழ்மக்களின் அளவு எதிர்பார்த்ததைவிட குறைவாக இருந்துள்ளது? இந்நிலைமை குறிப்பாக யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தமிழ்க்கூட்டமைப்பின் தேர்தல் முடிவுகளில் வெளிப்பட்டிருந்தது. இதற்கு குறிப்பான காரணங்கள் எதனையும் கூறமுடியுமா?

பதில்: நீங்கள் கூறுவதில் வெளிப்படையான உண்மை உண்டு.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை மாவட்டத்தின் மக்கள் முழுமையாக மீண்டும் அங்கு வந்து குடியமரவில்லை. இது மிகமுக்கியமான விடயமாகும்.

இதற்கு மேலாக நடந்து முடிந்த தேர்தலின்போது அதிக எண்ணிக்கையான கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தெளிவான அரசியல் கொள்கைகளோ, வேலைத்திட்டங்களோ இல்லாமல் போட்டியிட்டமையும், ஏற்படுத்தப்பட்ட குழப்பகரமான பரப்புரைகளும் மக்களை விரக்தி நிலைக்குத் தள்ளி தேர்தலிலிருந்து தூர நிற்பதற்கு தூண்டியுள்ளதாகவே உணர்கின்றோம்.

திருகோணமலையைப் பொறுத்தவரை தமிழ்மக்கள் தங்களது அடிப்படை ஜனநாயக உரிமையான வாக்குப் பிரயோகத்தைப் பயன்படுத்துவதற்கு எதிராக மிகத்திட்டமிட்டு செயற்பாடுகள் மேற்கோள்ளப்பட்டிருந்தன.

குறிப்பாக ஆளுங்கட்சியின் முக்கிய அரசியல் பிரமுகரும், அவரது குண்டர்கள் அணியும் மிகமோசமான அச்சுறுத்தல்களிலும் தடைகளை ஏற்படுத்துவதிலும் தமிழ்மக்களை வாக்களிக்கச் செய்யவிடாமல் தடுப்பதிலும் ஈடுபட்டனர்.

தமிழ்மக்களின் அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டன. திருகோணமலை வடக்கில் சலப்பையாற்றுப் பகுதியில் தமிழ்மக்களிடமிருந்து வாக்காளர் அட்டைகள் பறித்துக் கிழிக்கப்பட்டன.

வாக்காளர்களின் போக்குவரத்திற்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொதுப்போக்குவரத்து வாகனங்கள் சேவையில் ஈடுபடமுடியாமல் தடுக்கப்பட்டன. அதன் சாரதிகள் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டனர்.

திருகோணமலையின் தொலைதூர கிராமங்களுக்கு இடையில் ஏற்கனவே காணப்படும் போக்குவரத்து தொடர்பாடல்களின் மட்டுப்பாடுகளுக்கு மேலாக மென்மேலும் திட்டமிட்டு சிரமங்கள் உருவாக்கப்பட்டன.

மூதூர், ஈச்சிலம்பற்று, நிலாவெளி, குச்சவெளி, திரியாய் ஆகிய இடங்களில் வாழ்ந்திருந்த மக்கள் இன்னமும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்மாறியும் சிதறியும் வாழுகின்றார்கள்.

அவர்கள் மிகுந்த சிரமங்களைத் தாண்டி வாக்களிக்க வேண்டிய நிலை இங்கு காணப்பட்டது.

இத்தகைய நிலைமைகளினைத்தான் அம்பாறை மாவட்ட தமிழ் வாக்காளர்களும் எதிர்நோக்கவேண்டி இருந்தது.

வன்னி மாவட்டத்தைப் பொறுத்தவரை ஏற்கனவே இடம்பெயர்ந்து பலதிக்குகளிலும் தற்காலிக இடங்களிலும் முகாம்களிலும் தங்கியுள்ள மக்களை ஒருங்கிணைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதில் குறைபாடுகள் அதிகம் காணப்பட்டன.

குறிப்பாக உரிய வாக்குச் சாவடிகளுக்கு மக்களை பஸ்களில் அழைத்துச் செல்வதில் ஏற்பட்ட குளறுபடிகள் காரணமாக மக்கள் ஆர்வம் கொண்டிருந்தும் உரியநேரத்திற்குள் அவர்களால் வாக்குகளை அளிக்க முடியவில்லை. இதனை தற்செயல் நிகழ்ச்சியாக நாங்கள் கருதமுடியாது.

இவற்றுக்கு மேலாக பெருமளவில் பணபலமும் அதிகாரபலமும் பிரயோகிக்கப்பட்டன. பலமுனைகளிலிருந்தும் விடுவிக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் மத்தியிலேயே மக்கள் வாக்களிக்க வேண்டியிருந்தது.

இம்முறை நடந்த தேர்தல் நேர்மையானதும் சுதந்திரமானதுமான தேர்தலாக எம்மால் கொள்ளமுடியாது.

எனினும் நாம் தெளிவான குறிக்கோள்களுடனும் உறுதியான தீர்மானத்துடனும் எம்மக்களுக்காக எவ்வித தடுமாற்றமுமின்றி செயற்பட்டோம்.

தேர்தலை அண்டிய காலங்களில் சில கட்சிகளும் குழுக்களும் மிகத்தவறான முறையில் மக்களை திசை திருப்புவதற்கு முற்பட்டன.

பொய்யான தகவல்களையும், பிழையான வாதங்களையும் மக்கள் மத்தியில் பரப்பி மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தின. இது ஏற்கனவே துன்பத்தில் வாழுகின்ற மக்களை மேலும் குழப்புவதற்கும் தேர்தலில் பங்கேற்கும் ஆர்வத்தைக் குறைப்பதற்கும் முக்கிய காரணமாக இருந்தது.

கே: புலம்பெயர் தமிழர்கள் நடந்துமுடிந்த தேர்தல் தொடர்பாக எத்தகைய செல்வாக்கை அல்லது தாக்கத்தைச் செலுத்தியிருந்தனர்?

ப: முதலில் உங்களுடைய கேள்விக்கு செல்வதற்கு முன்பு புலம்பெயர் மக்களுக்கு எமது நன்றியைத் தெரிவிக்கும் பாரிய கடமை எனக்குண்டு.

மிகப் பெரும்பான்மையான புலம்பெயர் தமிழ்மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மிகநெருக்கமாகவும் ஆதரவாகவும் செயற்பட்டனர்.

அவர்கள் தந்த பின்புல ஆதரவும் பலமும் தான் தேர்தலுக்கு முன் நாம் எதிர்கொண்ட உட்கட்சி முரண்பாடுகளைத் துணிவுடனும் தெளிவுடனும் கையாள்வதற்கு உதவியது.

அவர்களுக்கு எங்கள் மக்கள் சார்பான நன்றிகள்.

பலமுனைகளிலும் நெருக்கடியை உருவாக்கியிருந்த இந்த தேர்தலைப், வெற்றிகரமாக கையாளுவதற்கு புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழ்மக்கள் தனியாட்களாகவும் குழுக்களாகவும் அமைப்புக்களாகவும் உதவி செய்தனர்.

புலம்பெயர் சமூகத்து பொதுசனத் தொடர்பு ஊடகங்களும் மக்களுக்கு உண்மைகளைத் தெரிவிப்பதிலும் ஆரோக்கியமான விவாதங்களை உருவாக்குவதிலும் துணைநின்றன.

அவைகளின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட என்னால் முடியாது. ஆனால் அவர்களின் பணி முடிந்துவிட்டது என திருப்திப்பட இயலாது.

குறிப்பாக தாயகத்தின் கிராமங்களும் மக்களின் வாழ்வும் யுத்தத்தாலும் சிங்கள ஆட்சியாளரின் தொடர்ந்த தமிழின விரோத செயற்பாடுகள் காரணமாகவும் சிதைந்து போயுள்ளன.

மீள்கட்டமைப்பும் இயல்பு வாழ்க்கையும் கூட அம்மக்களுக்கு மிகப்பாரிய சவால்களாக உள்ளன.

எல்லா விடயங்களுக்கும் அரசையும், அரசசாரா தொண்டர் நிறுவனங்களையும் நம்பிக் காத்திருக்க முடியாது. அதுவும் ஒருவிதமான அடிமைத்தன நிலைக்கே இட்டுச்செல்லும்.

இத்தகைய நெருக்கடியிலிருந்து தாயகத்து மக்களையும் அவர்களது கிராமங்களையும் மீட்டெடுக்க புலம்பெயர் தமிழர்களின் பொருள்வளமும், மனிதவளமும் மூளைவளமும் அவசியமாக உள்ளது.

கடந்த காலத்தில் அவர்கள் செய்த பங்களிப்பு அளப்பரியது. எனினும், வேறுபட்ட பரிமாணத்தில் தேசியப் போராட்டத்தை முன்னெடுத்து செல்வதற்கு புதிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

புலம்பெயர் தேசத்து தமிழ்மக்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து தாயகத்து மக்களால் இன்று உறுதிப்படுத்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையுடன் கைகோர்த்து ஆக்கபூர்வமாக செயற்படுவார்கள் என்பதில் எங்களுக்கு துளியளவும் சந்தேகம் இல்லை.

கே: நடந்து முடிந்த தேர்தலினூடாக சிறீலங்கா நாடாளுமன்றத்தின் மூன்றாவது தனிப்பெரும் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கப்போகின்றது. இந்நிலையில் தமிழ்மக்களின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக எதிர்காலத்தில் எவ்வாறு செயற்படப் போகின்றீர்கள்?

ப: இங்கு நாங்கள் இரண்டு விடயங்களைக் கவனிக்கவேண்டும்.

சிறீலங்கா நாடாளுமன்றத்தில் மூன்றாவது தனிப்பெருங்கட்சி என்பதனைவிட முக்கியமானது. வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தனிக்கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ்மக்கள் தெரிந்தெடுத்து ஆணைப்படுத்தியிருக்கின்றார்கள்.

இதுவே மிகமிக முக்கியமான விடயமாகவுள்ளது.

தேர்தலில் போட்டியிட்ட ஏனைய சகல தமிழ்க்கட்சிகளும் சுயேச்சைகளும் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்மக்களின் அரசியல் எதிர்காலத்தைச் சரியான திசையில் பொருத்தமான அணுகுமுறைக்கு ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் தலைமையும் முன்னெடுக்கும் என்ற தங்களுடைய அசையாத நம்பிக்கையை மக்கள் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

எங்களது தேர்தல் அறிக்கையில் 'விஞ்ஞாபனத்தில்' தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு எதிர்காலத்தில் செயற்படும் என்பது மிகத்தெளிவாக பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

எமது தமிழ்த் தேசியவிடுதலையின் அடிப்படைகளிலிருந்து எவ்விதத்திலும் பிறழாமல் உறுதியாக நின்றுகொண்டு நாங்கள் செயற்படுவோம்.

அதன்பொருட்டு நிலைமைகளை புரிந்துகொண்டு எங்களுடன் இணைந்து செயற்படவிரும்பும் சகல தமிழ் சக்திகளையும் அணைப்பதில் எங்களுக்கு எவ்வித தயக்கமுமில்லை.

அமையப்போகும் புதிய அரசும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தமிழர்கள் பிரச்சினை தொடர்பாக பேசவேண்டிய ஒரேயொரு தரப்பாக நமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது.

விரைவில் எங்களுடன் தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகளை திருப்திப்படுத்துவது தொடர்பான பேச்சுக்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பிப்பார் என எதிர்பார்க்கின்றோம்.

ஆரம்பிக்கவேண்டும்.

சர்வதேசநாடுகளினதும், குறிப்பாக இந்தியாவினதும் ஆதரவுடன் தமிழ்மக்களின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சிகளினை முன்னெடுக்க இருக்கின்றோம்.

கே: தாங்கள் குறிப்பாக புலம்பெயர் தமிழ்ச் சமூகத்திற்கு கூறவிரும்புவது....?

தமிழ்த் தேசியத்தின் உயிர்நாடியே வடக்கு, கிழக்கு இணைந்த தாயகத்தின் அரசியல் அடையாளமும், சமூக இருப்பும், பொருளாதாரச் செழுமையுமாகும். இது மூன்று பரிமாணங்களில் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது.

தமிழ்மக்களை அரசியல் தெளிவுள்ளதும் விழிப்புடன் தொடர்ச்சியாக ஜனநாயக செயற்பாடுகளில் ஈடுபடத் தூண்டக்கூடியதுமான பலம் வாய்ந்த மக்கள் கட்டமைப்பாக தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் வளப்படுத்த வேண்டியுள்ளது.

இரண்டாவது, தமிழ்த் தேசிய விடுதலைக்கான முயற்சிகளில் முழுமையான பலத்துடனும் தீர்க்கமான பார்வையுடனும் உறுதியான முன்னெடுப்புக்களை சாத்தியமான நெகிழ்வுகளுக்கூடாக சகல தளங்களிலும் முன்னெடுப்பது.

மூன்றாவதும் முக்கியமானது தமிழர் தாயகத்தின் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு அபிவிருத்தி ஆகியவிடயங்களைச் சிறப்பாகவும் உரித்துடனும் முன்னெடுத்துச் செல்லக்கூடிய வழிமுறைகளினைக் கண்டறிந்து செயற்படுத்துவது.

இவற்றை மேற்கொள்வதற்கு வேண்டிய தலைமைத்துவத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வித கேள்விக்கும் அப்பாற்பட்ட வகையில் வழங்கும்.

அதனோடு இணைந்து தோள் கொடுக்கவேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும் புலம்பெயர் தேசத்து மக்களுக்கும் குறிப்பாக அறிவாளிகள், வல்லுனர்கள், தொழில் முனைவோர்கள், முதலீட்டாளர்கள், அரசியற் செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரினதும் தவிர்க்க முடியாத கடமையாகும்.

அதனை அவர்கள் எவ்வித தயக்கமுமின்றி நிறைவேற்ற வேண்டும்.

*நன்றி: இணையத்தளம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றாகச் சேதமடைந்த பளை உ.அ.அ.அலுவலகத்தை உடன் புனரமைத்துத் தருமாறு அதிகாரிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்.ஏப்.13

கடந்தகால போர் அனர்த்தங்களின் காரணமாக பளை-பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பணிமனை முற்றாகச் சேதமடைந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் செயலகத்தின் கீழ் உள்ள மேற்படி பணி மனையை உடன் புனரமைத்து தரவேண்டும் என அப்பகுதி அரச உயரதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது அப்பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்தும் பணி துரிதகதியில் இடம்பெற்று வருகின்றது.

இப்பணிகள் சிறப்பாக இடம்பெறவும் ஏனைய பிரதேச அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்கவும் பளை-பிரதேச உதவி அரசாங்க அதிபர் பணிமனை உடன் மீளப் புனரமைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

பளை உதவி அரசாங்க அதிபர் பணி மனைக்கு அருகில் உள்ள பளைப் பிரதேச சபை, பளை மத்திய கல்லூரி, பளை கமநல சேவை நிலையம் என்பனவும் போர் அனர்த்தத்தினால் முற்றாக அழிவடைந்து அபிவிருத்தியின்றி உள்ளன.

எனவே கல்வி மற்றும் உள்ளூராட்சி, விவசாயத் தேவைகளை நிறைவு செய்ய மேற்படி அழிவடைந்த கட்டடத் தொகுதிகள் மீளப் புனரமைக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(50-302)

# நெழுவினி விநாயகர் தேர் புத்தாண்டு தினத்தன்று

நெடுந்தீவு. ஏப். 13

நெடுந்தீவு மேற்கு, நெழுவினி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா சித்திரைப் புத்தாண்டு தினமான நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கும், தீர்த்த உற்சவம் அன்றைய தினம் மாலை 4 மணிக்கும் நடைபெறவிருக்கின்றன.

(க-111)

## இன்னும் மூன்று மாதங்களில் மகோற்சவம்;

# நயினை அம்மனை நாடி வரும் பக்தர்களைச் சமாளிப்பது எப்படி?

நல்லூர், ஏப்.13

எதிர்வரும் ஆனி மாதத்தில் -இன்னும் மூன்று மாதங்களில் - நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகும்போது குறிகாட்டுவான் இறங்குதுறையில் பெரும் நெருக்கடி ஏற்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தென்பகுதி மக்களும் பெரும் எண்ணிக்கையில் நயினாதீவுக்கு வருகை தருவதால் குறிகாட்டுவான் இறங்கு துறையில் நெருக்கடியான நிலை நிலவுகின்றது- ஆலய உற்சவம் ஆரம்பிக்கும்போது இது மேலும் அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டு.

இதனைத் தவிர்ப்பதற்கு தென்பகுதியிலிருந்து வரும் உல்லாச பயணிகளை இறுப்பிட்டி, கழுதைப்பிட்டி இறங்கு துறைகளுக்கு ஊடாகவும் ஏனையவர்களை வழக்கம் போல குறிகாட்டுவான் இறங்குதுறை மூலமாகவும் பயணம் செய்ய ஒழுங்குகளை மேற்கொண்டால் -

அம்பாள் ஆலயத்துக்கு வரவிருக்கும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீண்ட நேரம் படகிற்காகக் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படாது தவிர்க்கலாம் என்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளும், ஆலய நிர்வாகிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஒ-க-111)

# கொழும்புத்துறையில் சித்திரைக் கொண்டாட்டம் பாரம்பரிய விளையாட்டு, கலை நிகழ்வுகளுடன்

யாழ்ப்பாணம். ஏப். 13

கொழும்புத்துறை சனசமூக நிலையம், விநாயகர் விளையாட்டுக்கழகம் இணைந்து நடத்தும் சித்திரைக் கொண்டாட்டம் இன்றும் செவ்வாய்க்கிழமையும், நாளை புதன்கிழமையும் கொழும்புத்துறை வித்தியாலய மைதானம், சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை ஒரு மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில் பாலர் பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளும், இருபாலாருக்கான தடைதாண்டல், கயிறு இழுத்தல், திருமணமான ஆண்களுக்கான வண்டில் ஓட்டம், ஆண்களுக்கான தலையணை அடித்தல், முட்டியடித்தல், வழுக்குமரம் ஏறுதல் என்பனவும் இளம் தம்பதியனருக்கான விசேட நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

நாளை புதன்கிழமை வருடப்பிறப்பன்று நடைபெறும் நிகழ்வுகளில் சிலம்பாட்டம், பெண்களின் கராத்தே நிகழ்வு, பரிசளிப்பு நிகழ்வுகள் என்பனவும்'பரிசு கெட்ட சீவியம்' நாடகமும், இன்னிசை நிகழ்வும் இடம்பெறவிருக்கின்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை மேயர்திருமதி யோ. பற்குணராஜாவும், சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர சபை உதவி மேயர் து.இளங்கோவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(50-6)

## தொழிற் பயிற்சிநெறிகள்

யாழ்ப்பாணம். ஏப். 13

ஊற்று நிறுவனமும் கனேடிய உலக பல்கலைக்கழக சேவையும் இணைந்து நடத்தும் கணனி வன்பொருள் திருத்துதல், மரவேலைகள் ஆகிய பயிற்சிநெறிகள் வடமராட்சி பிரதேசத்தில் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளைப் பயில விரும்புவோர் மாலுசந்தி, அல்வாய் கிழக்கு, அல்வாயில் அமைந்துள்ள ஊற்று நிறுவன அலுவலகத்தில் தொடர்பு கொண்டு, பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(50-224)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# அகில இலங்கை ரீதியிலான ஜெபமாநாடு; 1,300 மெதடிஸ்தர்கள் யாழ். வருகை

## ஆரம்பவைபவம் இன்று பரியோவான் கல்லூரி மண்டபத்தில்

வடமராட்சி, ஏப்.13

இலங்கை மெதடிஸ்த திருச்சபையினால் முதன்முறையாக யாழ். மண்ணில் அகில இலங்கை ரீதியிலான ஜெபமாநாடு கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமாகி நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

ஜெபவாழ்வில் புத்துணர்ச்சியடைய திருச்சபையின் வாழ்விலும், பணியிலும் சிறக்க, இன, மொழி, கலாசார வேறுபாடுகளைக்கடந்து ஒற்றுமை வாழ்விற்கு அடையாளமாகத் திகழ இடம்பெற்று வரும் இம்மாநாட்டில் இந்தியா மற்றும் துபாய் நாடுகளிலிருந்து நற்செய்தியாளர்கள் வருகைதந்து கலந்துகொண்டுள்ளார்கள்.

மாநாட்டில் முக்கிய நிகழ்வாக நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சமாதானப்பேரணி நடைபெறும்.

மாநாட்டில் முதலாவது நிகழ்வாக ஞாயிறுநாள் பாடசாலை ஆசிரியர்களுக்கான இருநாள் பயிற்சி புத்தூர் பரி.லூக்கா தேவாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நேற்றுத் திங்கள் வரை நடைபெற்றது. கண்டியில் இயங்கும் சிறுவர்கள் மத்தியில் சிறப்புப் பணியாற்றும் 'KIDS REACH' என்ற சிறுவர் ஆய்வு நிறுவனம் நடத்தும் இப்பயிற்சியில் 50 ஆசிரியர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை இலங்கை முழுவதிலும் உள்ள மெதடிஸ்த திருச்சபைகளிலிருந்து வந்துள்ள தமிழ், சிங்கள மெதடிஸ்தர்கள் 1,300 பேர் பரி. யோவான் கல்லூரியில் நடைபெறும் கூட்டங்கள், நிகழ்வுகளில் கலந்து கொள்வார்கள்.

இன்று செவ்வாய்க்கிழமை ஜெப மாநாட்டிற்கான ஆரம்ப வைபவம் யாழ். பரி.யோவான் கல்லூரி மண்டபத்தில் மாலை 6.45 மணிக்கு நடைபெறும். அதில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம், இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் பேரருட்திரு டபிள்யு. பி. எபநேசர் ஜோசப், யாழ். பரி.யோவான் கல்லூரியின் அதிபர் அருட்திரு என். ஜே. ஞானபொன்ராஜா, மற்றும் திருச்சபைத்தலைவர்கள், பொலிஸ், பாதுகாப்புப்படைப் பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

இன்று செவ்வாய்க்கிழமையும்,நாளை புதன்கிழமையும் பி.ப. 5 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் பகிரங்கக் கூட்டம் நடைபெறும். இக்கூட்டங்களில் அனைவரும் பங்குபற்ற வசதியாக விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை புதன்கிழமை சமாதானப் பேரணி பி.ப 3.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி சந்தியிலிருந்து ஆரம்பித்து நகரவீதியைச் சென்றடைந்து மீண்டும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தை சென்றடையும். இச்சமாதானப்பேரணியில் சிங்கள மக்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பார்கள். பேரணியில் பன்மைக் கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும். (ஒ-236)

# யாழ்.ஆஸ்பத்திரி வீதி நடைபாதையை ஆக்கிரமித்துள்ள அங்காடி வியாபாரிகள்

## பாதசாரிகள் நடந்து செல்வதில் சிரமம்

யாழ்ப்பாணம்.ஏப்.13

யாழ்.நகரில், ஆஸ்பத்திரி வீதியில் நடைபாதையை அங்காடி வியாபாரிகள் ஆக்கிரமித்துள்ளனர்..

நடைபாதையில் வியாபாரிகள் உடுபுடைவைகள் மற்றும் பொருள்களைக் குவித்துவைத்து விற்பனை செய்து வருகின்றனர். இதனால் பாதசாரிகள் நடைபாதையைவிட்டு பிரதான வீதியில் நடந்து செல்லவேண்டியுள்ளது. இதன் காரணமாகப் போக்குவரத்து நெரிசலும், விபத்துக்களும் ஏற்படுகின்றன. இது குறித்து எந்தத் தரப்பினரும் நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பது குறித்து பொது மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர். தேர்தல் முடிந்துவிட்டதால் சம்பந்தப்பட்டவர்கள் இனிமேலும் பாராமுகமாக நடந்துகொள்ளமாட்டார்கள் என்று பொது மக்கள் நம்புகின்றனர்.

(ஒ-224)

# விஞ்ஞான வினாவிடைப் போட்டியில் நான்கு பாடசாலைகள் தெரிவு

யாழ்ப்பாணம்.ஏப்.13

யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட முதலாவது கட்ட விஞ்ஞான வினாவிடைப் போட்டியில் அதிகபுள்ளிகளைப் பெற்ற நான்கு பாடசாலைகள் இரண்டாவது கட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமரர்கள் கிருபாகர், ஜெயக்குமார் ஆகியோரின் ஞாபகார்த்தமாக இலங்கை வங்கியின் அனுசரணையுடன் விவசாயபீட மாணவர் ஒன்றியத்தினால் இந்தப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

முதலாவது கட்டப் போட்டியில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, சென். ஜோன்ஸ் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆகியன இரண்டாவது கட்டப் போட்டிற்கு தெரிவாகியுள்ள நான்கு பாடசாலைகள் ஆகும்.

இரண்டாம் கட்டப் போட்டிகள் மே மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளன.

(ஒ-க)



வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் நூலகத் திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களான வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.இளங்கோவன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வரத்தினம், வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோர் பான்ட் வாத்திய அணித் தலைவியால் கைலாகு கொடுத்து வரவேற்கப்படுதை முதலாவது படத்திலும், நூலகத்தை ஆளுநர் திறந்து வைப்பதையும், மாணவர்களிடையே அவர் உரையாடுவதை அடுத்த இருபடங்களிலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# கணக்கீடு - 01 | பகுதி - I

01. கணக்கீட்டின் அடிப்படை நோக்கம்,
   1) எல்லாக் கொடுக்கல்வாங்கல்களையும் கணக்குப்புத்தகங்களில் பதிவுசெய்தல்.
   2) தீர்மானமெடுத்தலுக்கான தகவல்களை பாவனையாளர்களுக்கு வழங்குதல்.
   3) நிதிக் கொடுக்கல்வாங்கல்களைத் திரட்டலும் வகைப்படுத்தலும்.
   4) நிறுவனமொற்றுக்கான நிதிக்கணக்குகளைத் தயாரித்தல்.
   5) முகாமையாளர்களுக்கான விவரமான கிரயப் பகுப்பாய்வை வழங்கல்.

02. பின்வருவனவற்றுள் மெய்க்கணக்கு, பெயரளவுக் கணக்கு என்பவற்றுக்கு உதாரணமாகக் கூறக்கூடியவை,

| | மெய்க்கணக்கு | பெயரளவுக் கணக்கு |
|---|---|---|
| 1) | காசுக் கணக்கு | சிவா கணக்கு |
| 2) | மோட்டார் கணக்கு | குமார் கணக்கு |
| 3) | காசுக் கணக்கு | மூலதனக் கணக்கு |
| 4) | பரதன் கணக்கு | காசுக் கணக்கு |
| 5) | காசு கணக்கு | வாடகை கணக்கு |

03. வணிகமொன்றில் கையிருப்புக்கள் 2009 ஜனவரி 01 இல் 12,000 ரூபாவும், டிசம்பர் 31இல் 20,000 ரூபாவும் ஆகும். விற்பனைகள் ஆண்டில் 150,000 ரூபாவாகும். தாபனம் விற்பனைகளில் 30% மொத்தலாபத்தைப் பேணுகின்றது ஆயின், கொள்வனவுகளின் தொகை யாது?
   1) 73,000/=  2) 97,000/=  3) 106,000/=
   4) 110,000/=  5) 113,000/=

04. வியாபாரமல்லா அமைப்பொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆயுட்சந்தா நிதியறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட வேண்டியது,
   1) வருமானமாக.  2) செலவீனமாக.  3) சொத்தாக.
   4) பொறுப்பாக.  5) உரிமையாக.

05. வணிகமொன்றின் தொழிற்படு மூலதனத்தைப் பாதிக்காத கொடுக்கல்வாங்கல் எனக் கருதக்கூடியது,
   1) கடனுக்கு நிலையான சொத்துக் கொள்வனவுகள்.
   2) தொகுதிக் கடன்களின் வழங்கல்.
   3) கடனுக்கு கையிருப்புக் கொள்வனவுகள்.
   4) காசுக்கு நிலையான சொத்து விற்பனைகள்.
   5) அட்டுறு செயற்பாட்டுச் செலவுகள்.

06. வணிகமொன்றினது தேறிய இலாபம் 60,000 ரூபாவாகும். வணிகம் தனது விற்பனைப் பகுதி முகாமையாளருக்கு தரகு உள்ளடங்கலாகத் தேறிய இலாபங்களில் 20% தரகினை வழங்கச் சம்மதித்திருப்பின் தரகுத்தொகை யாது?
   1) 13,200/=  2) 11,000/=  3) 12,200/=
   4) 1,320/=  5) 1,220/=

07. இலங்கைக் கணக்கீட்டு நியமம்- 5இன்படி சரக்கிருப்பு மதிப்பிடலுக்கான விதியாகக் கருதக்கூடியது,
   1) சரக்கிருப்பு கிரயத்தில் மதிப்பிடப்படும்.
   2) சரக்கிருப்பு தேறிய கிரயத்தில் மதிப்பிடப்படும்.
   3) சரக்கிருப்பு மதிப்பிடப்பட்ட விற்பனை விலையில் மதிப்பிடப்படும்.
   4) கிரயம், தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைவான பெறுமதியில் மதிப்பிடப்படும்.
   5) சரக்கிருப்பு கிரயம், தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் கூடிய பெறுமதியில் மதிப்பிடப்படும்.

08. சரியான கணக்கீட்டுச் சமன்பாட்டைத் தெரிவுசெய்க.
   1) மூலதனம்+ செலவு+ பொறுப்பு = சொத்து+வருமானம்.
   2) மூலதனம் + சொத்து + செலவு = பொறுப்பு + வருமானம்.
   3) மூலதனம் + வருமானம் +செலவு = சொத்து - பொறுப்பு.
   4) மூலதனம் + வருமானம் + பொறுப்பு = சொத்துக்கள் +செலவு
   5) மூலதனம் + வருமானம்+-பொறுப்பு = சொத்துக்கள் - செலவு

09. அனுமதித்த கழிவுகள் 850 ரூபா தவறுதலாக வருமதியாளரது கணக்கின் தவறான பக்கத்தில் 250 ரூபாவெனப் பதியப்பட்டதாயின் திருத்தப் பதிவுகளாவன,
   1) தொங்கல் கணக்கு வரவு 850/=, வருமதியாளர் கணக்கு செலவு 850/=
   2) அனுமதித்த கழிவுக் கணக்கு வரவு 850/=, வருமதியாளர் கணக்கு செலவு 850/=
   3) அனுமதித்த கழிவுக்கணக்கு வரவு 1,100/=, வருமதியாளர் கணக்கு செலவு 1,100/=
   4) தொங்கல் கணக்கு வரவு 250/=, அனுமதித்தக் கழிவுக் கணக்கு வரவு 850/=, வருமதியாளர் கணக்கு செலவு 1,100/=
   5) தொங்கல் கணக்கு வரவு 1,100/=, வருமதியாளர் கணக்கு செலவு 1,100/=

10. பண்டங்களை விற்கும்போது கொள்விலை மீது 25% இலாபமொன்று உள்ளதாயின் இந்த இலாபம் விற்பனை விலையின் ஒரு சதவீதமாகக் கூறப்படுமிடத்து எவ்வாறு அமையும்?
   1) 25%  2) 20%  3) 33%  4) 66%  5) 12.5%

11. கடந்த மாதத்திற்கான வங்கிக்கணக்கிணக்கக்கூற்றில் உள்ள சமர்ப்பிக்கப்படாத காசோலையொன்று கொடுப்பனவுக்காக இம்மாதமும் வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை. எனில், இம்மாத வங்கிக்கணக்கிணக்ககூற்றைத் தயாரிக்கும்போது அக்காசோலை,
   1) கவனத்துக்கு எடுக்கப்படமாட்டாது.  2) கவனத்திற்கு எடுக்கப்படும்.
   3) காசேட்டில் வரவு வைக்கப்படும்.
   4) காசேட்டில் செலவு வைக்கப்படும்.
   5) வங்கிக்கூற்றில் வரவு வைக்கப்படும்.

12. பங்குடைமை வணிகங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய சட்டங்களுடன் தொடர்புடைய ஆண்டுகள்,
   1) 1938,1982,1995.  2) 1890,1844,1982,1990.
   3) 1890,1907,1972,1940.  4) 1796,1815,1982.
   5) 1982,1990,2005.

13. பின்வரும் நடவடிக்கைகளில் ஒரு கடன்பட்டோன் கணக்கில் செலவு மீதியை ஏற்படுத்தக்கூடியது,
   1) விற்பனை பட்டியல் இருதடவைகள் பதியப்பட்டிருத்தல்.
   2) விற்பனைத் திரும்பல் நபர்க் கணக்கில் பதியப்படாதிருத்தல்.
   3) கடன்பட்டோரால் வழங்கப்பட்ட காசோலை மதிப்பிழத்தல்.
   4) வாடிக்கையாளரிடம் முற்பணத்தொகை பெறப்பட்டிருத்தல்.
   5) வாடிக்கையாளர் மீதியின் மீது வட்டியை விதித்தல்.

14. நடைமுறையல்லாச்சொத்து வகைக்குள் அடங்கும் சொத்து வரிப்படிகள்,
   1) உருவச்சொத்து, அருவச்சொத்து, நிதிச்சொத்து.
   2) நடைமுறைச்சொத்து, நிதிச்சொத்து, கற்பனைச்சொத்து.
   3) நிலையானச்சொத்து, அருவச்சொத்து, நடைமுறைச்சொத்து.
   4) நன்மதிப்பு, இறுதி இருப்பு, காசுமீதி.
   5) முதலீடுகள், அருவச்சொத்துக்கள், கற்பனைச்சொத்து.

## SPECIAL GUIDE FOR 2010 A/L COMMERCE STUDENTS

15. வங்கிக்கூற்றுமீதி 50,000 ரூபாவாக இருக்குமாயின், இதுவரை வழங்கப்படாத காசோலைகள் 20,000 ரூபா, தேறாத வைப்புக்கள் 15,000 ரூபா. காசேட்டில் பதியாத நிலையானக் கட்டளைக்கொடுப்பனவு 5,000 ரூபாவாயின் செம்மையாக்கம் செய்யும் முன்மீதி,
   1) 50,000/=  2) 45,000/=  3) 65,000/=
   4) 55,000/=  5) 60,000/=

16. பங்குடைமையொன்றில் அமலன், கமலன் என்போர் 5:3 என்றபடி இலாபநட்டங்களைப் பகிருகின்றனர். 1/10 பங்கு இலாப உரித்துடன் விமலன் என்பவர் பங்காளியாக அனுமதிக்கப்பட்டார். எனின், புதிய இலாபநட்ட விகிதம் என்ன?
   1) 5:3:1  2) 45:27:8  3) 40:15:8
   4) 12:5:3  5) மேற்கூறிய எதுவுமில்லை.

17. வணிகமொன்றில் 31.12.2009இல் காணப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி 75,000 ரூபாவாகும். இக்காலப்பகுதியில் கடன்பட்டோர் நிரலை ஒழுங்குபடுத்தும்போது வரவு மீதி 5,000 ரூபா தவறவிடப்பட்டும் உட்திரும்பல் நாளேட்டின்கூட்டுத்தொகை 10,000 ரூபா குறைவாகவும் கூட்டப்பட்டிருந்தது. இத்தகவலின் அடிப்படையில் கடன்பட்டோர் பட்டோலை மீதியானது,
   1) 60,000 ரூபா (வரவு)  2) 90,000 ரூபா (வரவு)
   3) 70,000 ரூபா (செலவு)  4) 65,000 ரூபா (வரவு)
   5) 105,000 ரூபா (வரவு)

18. நிறுவனம் ஒன்று 16 வருட பயன்படுகாலத்தையும், 20,000 ரூபா இறுதிப்பெறுமதியுடையதுமான பொறி ஒன்றைக்கொள்வனவு செய்தது. முதல் ஐந்து வருடத்தில் நேர்க்கோட்டு மறையில் பதிவழிக்கப்பட்ட தேய்வு 10,000 ரூபா எனின், அப்பொறி வாங்கப்பட்ட கிரயம் யாது?
   1) 200,000 ரூபா  2) 180,000 ரூபா  3) 120,000 ரூபா
   4) 250,000 ரூபா  5) 150,000 ரூபா

19. ஐயக்கடன் ஏற்பாட்டில் உறுதிப்படுத்தும் கணக்கீட்டு எண்ணக்கரு,
   1) பண அளவு எண்ணக்கரு.  2) பொருண்மை எண்ணக்கரு.
   3) முன்னெச்சரிக்கை எண்ணக்கரு.
   4) தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கரு.
   5) இரட்டை விளைவு எண்ணக்கரு.

20. நிறுவன ஊழியர் ஒருவரிற்கு அவரது ஊழியச்சேமலாப பங்களிப்புத்தொகையான 10%ஐ கழித்து செலுத்திய தொகை 14,400 ஆகும். நிறுவனம் 15% பங்களிப்பையும் செலுத்துகின்றது எனின், இலாபநட்டக் கணக்கில் சம்பளத்தொகையாகக் காட்டப்படும் தொகை, ஐந்தொகையில் பொறுப்பாக காட்டப்படும் மொத்த ஊழியர் சேமலாபநிதித்தொகை ஆகியன முறையே,
   1) ரூபா 16,000, ரூபா 4,000  2) ரூபா 16,000, ரூபா 1,600
   3) ரூபா 14,400,ரூபா 4,000  4) ரூபா 14,400, ரூபா 1,600
   5) ரூபா 12,000, ரூபா 4,000

*** 21-30 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

21. வணிக அலகுகளின் கூறுகளை உதாரணத்துடன் விளக்குக.

..........................................................................................

22. கணக்கீட்டு நியமம்-18இன்படி நிலையான சொத்துக்களின் சிக்கன வாழ்க்கையைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை?

..........................................................................................

23. உற்பத்திக்கூலிக் கணக்கிற்கான மூடும் பதிவைத் தருக.

..........................................................................................

24. சாதாரண சந்தா முறையுடன் ஒப்பிடும்போது ஆயுட்கால சந்தாவின் நன்மைகள் இரண்டு தருக.

..........................................................................................

25. நிதிக்கூற்றுக்களில் இலங்கைக் கணக்கீட்டு நியமம் 18 இன்படி ஆதனம் பொறி உபகரணம் தொடர்பான வெளிப்படுத்தல்கள் இரண்டைக் குறிப்பிடுக.

..........................................................................................

26. நிகழத்தக்கப்பொறுப்பு, ஏற்பாட்டினை வேறுபடுத்துக.

..........................................................................................

27. இலங்கை கணக்கீட்டு நியமம்- 18, நடைமுறையல்லாச்சொத்துக்களை மறுபடி விலைமதிப்பினால் வரும் நட்டம் மற்றும் இலாபங்களை எங்ஙனமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும் எனக் கூறுகின்றது?
   1) நட்டம் ..........................................................................
   2) இலாபம் ..........................................................................

28. மதன், ராகுல் ஆகியோர் பங்குடைமையொன்றின் பங்காளர்கள். இவர்களின் மூலதனக் கணக்கு நிலுவைகள் முறையே ரூபா 300,000, ரூபா 420,000 ஆகும். பங்குடைமையின் தேறியச்சொத்துக்களின் ஏட்டுப்பெறுமதி ரூபா 720,000 ஆகும். இவ்வியாபாரத்தில் மூன்றில் ஒரு பங்கினைப் பெறும்பொருட்டு ராஜ் என்பவர் ஒரு பங்காளனாக அனுமதிக்கப்பட்டார். பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.
   1) ராஜ் மூலதனமாகக் கொண்டுவர வேண்டிய காசு எவ்வளவு?

   ..........................................................................

   2) ராஜ் சேர்ந்த பின்னர் பங்குடைமையின் புதிய இலாபநட்ட விகிதாசாரத்தினைக் குறிப்பிடுக.

   ..........................................................................

29. பங்குடைமையில் பற்றுக் கணக்கு தனியாகப் பேணப்படுவதன் அவசியம் யாது?

..........................................................................................

30. தொழிற்படு மூலதனத்திற்கான சமன்பாட்டினைத் தருக.

..........................................................................................

*** 31-36 வரையான வினாக்களின் இடைவெளிகளில் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.**

31. கணக்கு அறிக்கையில் உள்ளடக்கக்கூடியதும் பணத்தினால் அளக்கக்கூடியதுமான நிகழ்ச்சிகள் .............................. எனப்படும்.

32. ...................... வியாபார அமைப்பிலும் ...................... வியாபாரமல்லா அமைப்பிலும் அட்டுறு முறை பிரயோகிக்கப்படாதவைகளாகும்.

33. ......................, ...................... என்பன இருப்பு கிரய அளவீட்டு நுட்பங்களாகும்.

34. ......................, ......................, ...................... என்பன மாற்றல் கிரயத்தின் கூறுகளாகும்.

35. அறிவுச்சார்ந்த முழுமனதுடனான கட்சியினருக்கு சொத்தொன்றினைப் பரிமாற்றிக் கொள்ளக்கூடியத்தொகை ...................... எனப்படும்.

*** 36-40 வரையானக்கூற்றுக்கள் ''சரி'' அல்லது ''பிழை'' எனக் கூறுக.**

36. பண்டங்கள் கொள்வனவு செய்யப்படும்வேளையில் செலவாகக் கருதப்படுகின்றன.

(...............)

(13ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்: திரு.R.ஜனதன் B.BA (Hons)
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13.
உதவி: R.ருஷாந்தி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கணக்கீடு -01, பகுதி I: தொடர்ச்சி....

37. கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுவதானது புதியமுறைகள் தோன்றுவதற்கும் புதிய சிந்தனைகள் உருவாக்குவதற்கும் தடையாக அமைகின்றன.

(...............)

38. ஏற்பாடு என்பது ஒரு பொறுப்பாகும். ஆனால், அதனைக் கொடுத்துத் தீர்க்க வேண்டிய காலமும், பெறுமதியும் உறுதிப்படக் கூறமுடியாது.

(...............)

39. பொதுவாக ஒரு நிறுவனம் இலாபத்தினை உழைக்கும்பொழுது, குறிப்பிட்ட இலாப அளவிற்கு நிறுவனத்தின் காசு மீதியும் அதிகரிக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படலாம்.

(...............)

40. பெரும்பாலான பங்குடைமை அமைப்புக்களில் பங்காளர் ஒப்பந்தப்படியே பங்குடைமை வியாபாரத்தினால் உழைத்த இலாபம் அல்லது நட்டம் பகிர்வு செய்யப்படும்.

(...............)

## கணக்கீடு - 01 | பகுதி - II

* **எல்லா வினாக்களுக்கும் விடைதருக.**

01. ராம், கிரிஷ் பங்குடைமையொன்றின் பங்காளர்கள். அவர்களுக்கிடையிலான உடன்படிக்கை பின்வருமாறு:
   1) இலாபநட்டங்கள் சமமாகப் பகிரப்படும்.
   2) மூலதனங்களுக்கு ஆண்டுக்கு 10% வட்டி வழங்கப்படும்.
   3) பங்காளர் சம்பளம் ராம் வருடாந்தம் 18,000 ரூபா, கிரிஷ் வருடாந்தம் 24,000 ரூபா பெற உரித்துடையவர்கள்.

   31 டிசம்பர் 2009 இல் பரீட்சைமீதி பின்வருமாறு:

| விவரம் | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதனம் | | |
| - ராம் | | 300,000 |
| - கிரிஷ் | | 200,000 |
| - பிரியா | | 200,000 |
| நடப்புக்கணக்குகள் | | |
| - ராம் | | 15,000 |
| - கிரிஷ் | 10,000 | |
| இவ்வருட மொத்த இலாபம் | | 180,000 |
| சம்பளம் - கூலி | 61,000 | |
| காணிக்கட்டடம் - கிரயம் | 400,000 | |
| மோட்டார் வாகனங்கள் - கிரயம் | 350,000 | |
| உபகரணங்கள் - கிரயம் | 200,000 | |
| மின்கட்டணம் | 7,500 | |
| காப்புறுதி | 16,000 | |
| விநியோகச்செலவுகள் | 32,000 | |
| இருப்பு 31.12.2009 | 30,000 | |
| பெறுமானத்தேய்வு ஏற்பாடு 01.01.09 இல் | | |
| காணிக்கட்டடம் | | 100,000 |
| மோட்டார் வாகனம் | | 80,000 |
| உபகரணம் | | 50,000 |
| கிரிஷ் கடன் 20% | | 50,000 |
| கடன்வட்டி | 5,000 | |
| காசும் வங்கியும் | 63,500 | |
| | 1,175,000 | 1,175,000 |

மேலதிக தகவல்கள்

01) 01 ஜூலை 2009இல் பிரியா 200,000 ரூபா மூலதனத்துடன் 1/5 பங்காளராக இலாபப்பங்குடன் சேர்க்கப்பட்டிருந்தார். பிரியா வருடாந்தம் 28,000 ரூபா சம்பளம் பெறுவதோடு ஏனைய பங்காளர் தொடர்ந்தும் பழைய சம்பளத்தைப் பெறுவார். மூலதனவட்டி வழங்கப்படமாட்டாது.

02) நன்மதிப்பு 80,000 ரூபா மதிப்பிடப்பட்டு மூலதனக் கணக்குகளில் செம்மையாக்கப்படல் வேண்டும்.

03) சொத்துக்கள் பின்வருமாறு மீள்மதிப்பிடப்பட்டன.

| | |
|---|---|
| காணிக்கட்டடம் | 400,000 |
| மோட்டார்வாகனம் | 200,000 |
| உபகரணம் | 100,000 |

04) பிரியாவுக்கு ஆகக் குறைந்த வருடாந்த வருமானத்திற்கு ரூபா 20,000இற்கு ராமினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தது.

05)

| 31.12.2009 இல் | முற்செலுத்திய செலவு | அட்டுறுச் செலவு |
|---|---|---|
| விநியோகச்செலவுகள் | 3,000 ரூபா | 7,000 ரூபா |
| மின்கட்டணம் | ........... | 2,500 ரூபா |
| காப்புறுதி | 2,000 ரூபா | ................ |

06) செலவுகள் வருமானங்கள் யாவும் கால அடிப்படையில் பகிரப்படல் வேண்டும்.

07) சம்பளம் கூலி என்பதனுள் பங்காளர்களின் சம்பளங்களும் உள்ளடங்கும்.
   ராம் 9,000 ரூபா
   கிரிஷ் 12,000 ரூபா

08) நிலையானச் சொத்துக்களுக்கு கிரயத்தில் 10% தேய்விடுக. மதிப்பீட்டின் பின்னர் மதிப்பீட்டுப் பெறுமதியில் 20% தேய்விடுக.

09) இறுதி இருப்பினுள் வழிச்சரக்கு 20,000 ரூபா கவனத்தில் கொள்ளப்படவில்லை.

10) பிரியாவின் மூலதனத்தை அடிப்டையாகக் கொண்டு பங்காளர் தமது மூலதனங்களை இலாபநட்ட விகிதத்தில் வைத்துக் கொள்வதெனவும் இதற்குரிய சீராக்கங்கள் நடப்பு கணக்குகளில் செய்யப்படுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

**வேண்டப்படுபவை:**
1) 31 டிசம்பர் 2009 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்ட பகிர் க/கு.
2) 31 டிசம்பர் 2009 இல் ஐந்தொகை.
3) மீள்மதிப்பீட்டு கணக்கு, பங்காளர் நடப்புக் கணக்குகள், பங்காளர் மூலதனக் கணக்குகள்.

02. அ. பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் சமன் வியாபாரத்தில் 2009 மார்ச் மாதத்தில் இடம்பெற்றவையாகும்.
   1) உரிமையாளர் கொண்டுவந்த காசு 20,000 ரூபா, மோட்டார் வாகனம் 10,000 ரூபா.
   2) நிறுவன பயன்பாட்டிற்காக கட்டடம் வாங்கியது 60,000 ரூபா. பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்கள் ஆகும்.
   3) மீள்விற்பனைக்கான பொருட்கள் கொள்வனவு 10,000 ரூபா காசிற்கும் 15,000 ரூபா கடன் கொள்வனவாகும்.
   4) விற்பனைகள் 28,000 (கிரயம் 13,000)
   5) வாடகை கட்டணமாக 3 மாதங்களுக்குரிய பணம் 7,500/= செலுத்தப்பட்டது.
   6) விளம்பர நோக்கத்திற்காக 500/= பெறுமதியான பொருட்கள் பயன்படுத்தப்பட்டன.
   7) உரிமையாளர் நிறுவனத்திலிருந்து 1,500/= காசினையும், 750/= பொருட்களையும் சொந்த உபயோகத்திற்காக எடுத்துக்கொண்டார்.

   **வேண்டப்படுபவை:**
   1) இக்கொடுக்கல்வாங்கல்களை பின்வரும் சமன்பாட்டில் பதிக.
   2) நிலையான சொத்து + இருப்பு + கடன்படுநரும் முற்பணமும் + காசு + செலவீனம் = மூலதனம் + பொறுப்பு

ஆ. ABC நிறுவனம் பெறுமதிசேர் வரிக்காக பதிவுச்செய்யப்பட்ட நிறுவனமாகும். பின்வரும் தகவல்கள் நிறுவனத்தின் ஏடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டவை. VAT வரி வீதம் 15% எனக்கொள்க.

| | |
|---|---|
| மொத்த விற்பனைகள் (15% வரி உள்ளடங்களாக) | 360,000 |
| கொள்வனவுகள் (தேறியது) | 220,000 |
| நிறுவனம் கொள்வனவு செய்த மோட்டார் வாகனம் (தேறிய பெறுமதி) | 80,000 |
| நிறுவன உபயோகத்திற்கென வைத்திருந்த கட்டடமொன்றை விற்றது. (15% வரி உள்ளடங்களாக) | 230,000 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு நிறுவனம் செலுத்திய காசு | 4,000 |

**வேண்டப்படுவது:**
பெறுமதிசேர் வரிக்கணக்கு.

03. 30 நவம்பர் 2009 இல் பாலா நிறுவனத்தின் பண்டகசாலையில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக இருப்புக்களின் ஒரு பகுதி அழிக்கப்பட்டது. 31 டிசம்பர் 2009இல் மிகுதிச்சரக்கிருப்புக்கள் 10,000 ரூபா எனப் பெறுமானம் இடப்பட்டன. இவை தீவிபத்தில் இருந்து காப்பற்றப்பட்டவையாகும். பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.

| | ரூபா |
|---|---|
| கையிருப்புக்கள் 01.01.2009 இல் | 28,000 |
| கொள்வனவுகள் 01.01.2009 - 30.11.2009 வரை | 472,000 |
| கொள்வனவுகள் 12.12.2009 - 31.12.2009 வரை | 32,000 |
| கடன்பட்டோர் 01.01.2009 இல் | 70,000 |
| கடன்பட்டோர் 30.11.2009 இல் | 63,000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்றக்காசு (01.01.2009 - 30.11.2009 வரை) | 518,000 |
| விற்பனைகள் 01.01.2009- 30.12.2009 | 566,000 |

மேலதிக தகவல்கள்:

நிறுவனத்தின் வழமையான சகல விற்பனைகளும் விற்பனைகளில் 20% இனை இலாபமாகக் பெறக்கூடியவாறு மேற்கொள்ளப்படுகின்றன. எனினும், ஜூன் மாதத்தில் விசேட விலை கழிவில் கிரயத்தில் 10,000 ரூபா பெறுமதியானப் பொருட்கள் கிரயத்தில் 10% இலாபம் வைத்து விற்கப்பட்டன. அத்துடன் காப்பாற்றப்பட்ட பண்டங்கள் 5,000 ரூபா இலாபம் வைத்து 15,000 ரூபாவாகவும், டிசம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்துப் பண்டங்களும் வழமையான இலாபவீதத்திலும் காசிற்கு விற்பனை செய்யப்பட்டு பணம் பெறப்பட்டது. சரக்கிருப்புக்கள் தீவிபத்திற்கு எதிராக காப்புறுதி செய்யப்பட்டிருந்தன. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தீயால் அழிந்த இருப்பின் 60% இனை நட்ட ஈடாக வழங்க ஒப்புதல் அளித்தது.

**வேண்டப்படுபவை:**
1) 31 டிசம்பர் 2009 இல் முடிவடைந்த காலத்திற்கான வியாபாரக் கணக்கு.
2) 31 டிசம்பர் 2009 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வியாபார இலாபநட்டக் கணக்கு
3) தீயால் அழிந்த இருப்புக்கும், காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தால் கொடுக்கப்பட்ட நட்ட ஈட்டிற்குமான ஒரு கூற்று.

04. கமல் என்னும் வியாபாரியின் நிறுவனத்தின் கடன்படுநர் பேரேட்டில் ஏற்கனவே பெயர்த்தெடுக்கப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35,700 ஆகும். இது ஒழுங்குபடுத்தும் கணக்குமீதிக்கு சமனாகாது இருப்பதனால் பின்வரும் தவறுகளும் விடுபடுதல்களும் தெரியவந்தன. இவற்றைத் திருத்தி அமைக்கும்போது மீதிகள் சமப்பட்டன.
   1) உள்முக கடன்படுநரின் பட்டியல் தவறவிடப்பட்ட வரவு மீதி ரூபா 800 உம், செலவு மீதி ரூபா 60 உம் ஆகும்.
   2) கடன்படுநரின் பட்டியலில் செலவுமீதியாக பதியப்பட்டுள்ள வரவு மீதி ரூபா 350.
   3) விற்பனை நாட்குறிப்பேட்டினைக் கூட்டும்போது ரூபா 1,000 குறைவாக கூட்டப்பட்டிருந்தது.
   4) கடன்படுநரான நிஸாரினால் திருப்பியனுப்பப்பட்ட ரூபா 450 பெறுமதியான சரக்கு துணையேடுகளில் பதிவு செய்யப்பட்டிருப்பினும் காசேட்டின் கழிவு நிரலில் சேர்க்கப்படவில்லை.
   5) கடன்படுநர் ஒருவரான நாதன் கணக்கின் மீதி 500 ரூபா நட்டக் கணக்காக பதிவழித்து, ஒழுங்குப்படுத்தும் கணக்கிலும் நட்டக்கடன் கணக்கிலும் பதிவு செய்யப்பட்டிருப்பினும் வேறு எப்பதிவும் மேற்கொள்ளப்படவில்லை.
   6) கடன்படுநரில் ஒருவரான சேந்தனிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட காசோலை ஒன்று மறுக்கப்பட்டது. அப்போது மறுப்புக்கழிவு ரூபா 250 உரிய கணக்குகள் இரண்டிலும் பதிவு செய்யப்பட்டிருப்பினும் காசேட்டின் கழிவு நிரலில் சேர்க்கப்படவில்லை.
   7) கடன்படுநர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட்ட தண்ட வட்டி ரூபா 150 அவரது கணக்கில் உரிய முறையில் சேர்க்கப்பட்டது. அனால் ஒழுங்குபடுத்தும் கணக்கில் அது தொடர்பான பதிவு எதுவும் இடம்பெறவில்லை வருமதிகளின் நாட்குறிப்பேட்டின் கூட்டுத்தொகை ரூபா 100 இனால் குறைந்து காணப்படுகின்றது.

   **வேண்டப்படுவது:**
   கடன்படுநரின் திரட்டு பதிவுகளிலிருந்து ஏற்கனவே பெயர்த்தெடுக்கப்பட்ட மீதியை ஒழுங்குபடுத்தும் கணக்குடன் பொருந்தக்கூடிய இறுதி மீதியுடன் ஒப்பிட்டு கூற்று ஒன்று தயாரிக்குக.

05. 1) கொள்ளல் கொடுத்தல் கணக்கிற்கும் வருமானச்செலவுக் கணக்கிற்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   2) 31.12.2009 இல் முடிவடைந்த வருடத்திற்கான றோயல் விளையாட்டுக் கழகத்தின் வருமானச்செலவுக் கணக்கு வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| செலவுகள் | 10,000 | சந்தா | 45,000 |
| தளபாட பெறுமானத் தேய்வு | 5,000 | விளையாட்டுப் போட்டி வருமானம் | 5,000 |
| விளையாட்டு உபகரண பெறுமானத்தேய்வு | 8,000 | மதுபான வி/னை இலாபம் | 7,000 |
| மிகை | 34,000 | | |
| | 57,000 | | 57,000 |

மேலதிக தகவல்கள்:
1) 01.01.2009 இல் ரூபா 4,000 சந்தா நிலுவையாக உள்ளது.
2) 01.01.2009 இல் முற்பணச்சந்தா ரூபா 1,000
3) 31.12.2009 இல் வருமதிச்சந்தா ரூபா 5,000
   31.12.2009 இல் முற்பணச்சந்தா ரூபா 1,500
4) 01.01.2009 இல் தளபாடம் 52,000 ரூபா
   விளையாட்டு உபகரணம் 71,000
   மதுபானச்சாலை இருப்பு 5,000
5) இறுதி இருப்பு ரூபா 4,000
   விற்பனை ரூபா 32,000
6) 01.01.2009 இல் காசு மீதி 25,000
7) 31.12.2009 இல் தளபாடம் 55,000
   விளையாட்டு உபகரணம் 72,000

**வேண்டப்படுபவை:**
31.12.2009 ஆம் ஆண்டிற்கான கொள்ளல்கொடுத்தல் கணக்கு.
31.12.2009 இல் உள்ளவாறான ஐந்தொகை.

(நிறைவுற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Institute of computer Studies

யாழ் மண்ணில் புத்தூரில் புதிய உதயம்
I.C.S கணனியியல் கல்வி நிறுவனம்
தரம் : 01- A\L வரை மற்றும் ஏனைய மாணவர்களுக்கான
கணனியியல் கற்கை நெறி மிக நவீன முறையில்
ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
பாட விதானம்
Computerized English courses
D.T.P.
computing hard ware
I.T
அனைத்து விதமான Diploma கணனியியல் கற்கை
நெறிகளும் ஆரம்பமாகியுள்ளன.
உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்
பதிவுக்கட்டணம் இலவசம்
மாதக்கட்டணம் 400/= மட்டும்
சர்வதேசத் தரத்திலான சான்றிதழ்கள் வழங்கப்படும்.
முழு நேர or பகுதி நேர கணனி பெண் ஆசிரியர் தேவை
M.S Office, D.T.P, I.T தெரிந்த ஆசிரியர்கள் தேவை.
சுய விவரக் கோவையுடன் நேரில் வரவும்.

**Puttur west,**
**Chunnagam Road, Puttur.**
T.P.0213211982, FAX¦ 0214591625 E.mail:icsjaffna@gmail.com



# Spoken English Classes

100% ஆங்கில உரையாடல்
ஆரம்பம் 17.04.2010 பி.ப 3 மணி
தொடர்பு: 115, சட்டநாதர் வீதி, நல்லூர்.
**T.P.0212229769**
(96848)



## வீடும் காணியும் விற்பனைக்கு

சங்கானை கிழக்கு,சங்கானை அரச ஆஸ்பத்திரிக்கு தெற்குப் பக்கமாக உள்ள றோட்டில் 300 யார் தூரத்தில் 13 பரப்பு- 16 குளிகாணியும் வீடும் வீட்டுடன் கூடிய கிணறும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: கௌரி - 0778828534
Shanthi- 0776568355
கொழும்பு- 0112737755
(96905)



நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி,
தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு,
கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி
கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும்
சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

## சித்தாரா பொன்னாங்காணித் தைலம்

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
(C/564561)



# ALLIANCE FRANCAISE DE JAFFNA

61,Kachcheri -Nallur Road, Jaffna
Phone- 0212228093
E -mail alliancejaffna@yahoo.com
*Learn French the French Way*
**French Classes**

சர்வதேச மொழியான French மொழி வகுப்புக்கள் French Embassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாகக் கற்பிக்கப்படுகின்றது.
பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரே ஒரு கலாசார, பிரெஞ்சு மொழி பயில்வதற்கான ALLIANCE FRANCAISE ஒரு மையமாகும்.
தொடர்ச்சியான கற்கைகளை மேற்கொள்வதன்மூலம் உள்ளக பரீட்சைக்கும் மேலும் ஐரோப்பிய டிப்ளோமா பரீட்சையான DELF பரீட்சைக்கும்தோற்றமுடியும்.
விரிவுரையாளர்கள்: பிரான்சியரும், பிரெஞ்சில் தகைமை பெற்றோர்களும்.
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (96850)


### ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.13

வரணி மகா வித்தியாலயத்தின் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் ஆசிரியர்கள் யுனிசெவ் நிலையறி பரீட்சையின் விடைத்தாளினையும், பகுப்பாய்வையும் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(50-204)

### சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.13

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா சித்திரைப் புத்தாண்டு தினமான நாளை புதன் கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுநாள் வியாழக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

* * *

நல்லூர்,ஏப்.13

வேலணை மண்கும்பான் வெள்ளைப் புற்றடி விநாயகர் ஆலயத்தின் தேர்த் திருவிழா சித்திரைப் புத்தாண்டு தினமான நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (க-111)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.13

மாவிட்டபுரம், வீணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் புதுவருட தினமான நாளை புதன் கிழமை காலை 7 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் உற்சவம் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் பத்தர்கள் தமது சொந்த வாகனத்தில் ஆலயத்துக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (50-204)


நியூ கேம்பிறிச் அளவெட்டி
**O\L Day - A\L 2012**
ஆரம்பம்- 15.04.2010
புதன்காலை- 7மணி
வழமையான ஆரம்பம்
(96873)


## 2 nd Anniversary
# Mrs Queenie Ariyamalar Thevarajah

*(Retired Teacher Methodist Girls' High School, Point Pedro)*

Born: 09 . 10. 1939



Entered Glory: 13 . 04 . 2008

The smile that met our new born cry and kissed our tiny feet
The voice that soothed our deep despair, those words so very sweet
The prayer that held us in the storm, so strengthened in life' s gale
The heart that beat for every child, those rhythms never fail.

Your precious love we knew each day; devotion, cost and pain
Unchanging, pure, so genuine;no words could e' er explain
While others may' ve forsaken us, your patient love forgiving
And whether up or whether down, your arms always embracing.

*'Bethel',*
*Puloly West,*
*Puloly, Pointpedro.*

(96892)

**Fondly remembered & dearly missed by Children & Families.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு: 16 ★ 04 ★ 1965



உதிர்வு: 17 ★ 03 ★ 2010

## அமரர் காசிப்பிள்ளை தியாகலிங்கம்
(புங்குடுதீவு-4)

அன்னாரது மரணச் செய்தியறிந்து எமது துயரில் நேரில் பங்கு கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த 17.03.2010 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புச் சகோதரன் காசிப்பிள்ளை தியாகலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 16.04.2010 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். அத்துடன் அன்றையதினம் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரையும் அன்பு டன் அழைக்கின்றோம்.

விளையாட்டரங்கு வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்:
சேதுராசா மீனாம்பாள் (சகோதரி).

(96904)

# ஆறாத் துயரில் ஆண்டு ஒன்றில்



## கந்தையா இராசேந்திரம்

மலர்வு
23★05★1967

உதிர்வு
23★04★2009

வருடமொன்று ஆனதப்பா-நீர்
வாரியுனைத்து நாளாச்சு
விரதமிருந்து காத்திருப்போம்-சேர்ந்திருந்து
விருந்துண்ண வாரீரோ

நீ.மு-சிவன் வீதி, உருத்திரபுரீச்சரம்.
த.மு-மீசாலை வடக்கு, வேம்பிராய்,
மீசாலை.

பிரிவின் ஆற்றாமையில்
குடும்ப உறவுகள்.

(96812)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 05 . 12 . 1946



மறைவு: 14 . 03 . 2010

அமரர்
## வேரம்பலம் இராசரத்தினம்
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

கடந்த 14.03.2010 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குலவிளக்கின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (13.04.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்துக் கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.

(96840)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் ஏகோபித்த அரசியல் சக்தி தமிழ்க் கூட்டமைப்பு என்பது நிரூபணம்

## அரியநேத்திரன் எம்.பி.தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஏப்.13

''தமிழ் மக்களின் ஏகோபித்த அரசியல் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் என்பதை மக்கள் மீண்டும் இந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் நிரூபித்துள்ளார்கள். தமிழ்த் தேசிய சக்தியைச் சிதைக்க மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சக்திகளுக்கு மத்தியிலும் வடக்கு, கிழக்கு மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தங்களின் ஆணையைத் தந்துள்ளமைக்கு முதலில் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் சார்பில் போட்டியிட்டு, வெற்றியீட்டிய மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மகிழவெட்டுவான், துறைநீலாவணை, மகிழூர் பகுதிகளில் மக்களால் அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் என்னுடன் சேர்த்து மூன்று பிரதிநிதிகளைத் தெரிவு செய்த மக்களுக்கும், எங்களது கட்சியில் இணைந்து போட்டியிட்ட எட்டு வேட்பாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த வெற்றியில் எம்முடன் போட்டியிட்டு தெரிவாகாத ஏனைய ஐந்து வேட்பாளர்களினது பங்கும் மிகவும் அளப்பரியது. அந்தவகையில் அவர்களுக்கு வாக்களித்த ஆதரவாளர்களுக்கும், மற்றும் அனைத்து மக்களுக்கும் என்னால் கூடிய பட்சம் சேவை செய்யப் பாடுபடுவேன்.

மட்டக்களப்பு மக்கள், தமிழ்த் தேசியத்தில் பற்றுடனும், உறுதியுடனும் உள்ளனர். இம்முறை, வடக்கு, கிழக்கில் அதிகளவான வாக்குகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் வழங்கியுள்ளார்கள். எமது மக்கள் தங்களின் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வை வேண்டி தங்களின் கோரிக்கையை மீண்டும் பறைசாற்றியுள்ளனர்.

எனவே, எமது மக்களின் கோரிக்கையைக் கவனத்தில் எடுத்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தங்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அவலங்கள் அற்ற நிம்மதியான, ஆரோக்கியமான வாழ்வுக்குத் தொடர்ந்தும் உழைக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து, எமது மக்களின் தியாகங்களை, கோரிக்கைகளை ஏற்காது செயற்பட்ட சில தமிழ் அரசியல்வாதிகளுக்கு மக்கள் சரியான பாடம் புகட்டியுள்ளனர்.

மட்டக்களப்பில் எமக்குக் கிடைக்க வேண்டிய நான்கு ஆசனங்களில், மூன்று ஆசனங்கள் கிடைத்துள்ளன. ஒரு ஆசனத்தை விட்டுக் கொடுத்தமைக்கான முழுப்பொறுப்பும் ஆளும் கட்சியில் இணைந்து போட்டியிட்ட வேட்பாளர்களையே சாரும் - என்றார். (ளி)

## அம்பாறை மாவட்டத் தமிழ்ப் பிரதிநிதி இனிப்பு வழங்கி மகிழ்ச்சி தெரிவிப்பு

அம்பாறை,ஏப்.13

அம்பாறை தமிழ்ப் பிரதேசத்தின் பிரதேசசபையொன்றின் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படுவது இதுவே முதல் முறையாகும். ஆலையடிவேம்பு பிரதேச சபையின் தவிசாளராக இரு தடவைகள் பியசேன பணியாற்றியுள்ளார். வாகனப் பேரணியோ, பொதுக்கூட்டமோ, குடிபானமோ வழங்காமல் தேர்தலில் போட்டியிட்டவர் பியசேன மட்டுமே. அக்கரைப்பற்று - ஆலையடி வேம்பின் முதல் நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன ஆவார். தேர்தல் தினத்தன்று தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் இருந்த போதும் வெற்றிச் செய்தி கேள்விப்பட்டதும் தன்னந்தனியாகத் திறந்த ஓட்டோவில் சொந்தக் குரலில் பேசி இனிப்புப் பண்டம் வழங்கி பிரசாரத்தில் ஈடுபட்டார்.

அனைத்திற்கும் மேலாக கடந்த 20 வருடகாலமாக அம்பாறை மாவட்டத் தமிழ்க் கிராமங்களிலுள்ள பாடசாலைகள், மரண வீடுகளில் கலந்துகொண்டு இயலுமான உதவிகளைச் செய்த ஒரேயொரு சமூகசேவையாளரும் இவரே. பணிவும், அடக்கமும், ஒழுக்கமும் உள்ளவரும், குடிப்பழக்கம் இல்லாதவரும் 49 வயதுடையவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மாணவர்களுக்கு வாய்ப்பாட்டு அட்டை, அடிமட்டம், பென்சில், இறேசர், கழுத்துப்பட்டி, குடை முதலான பொருள்களை வழங்கிய ஒரேயொரு சமூக சேவையாளன். குறிப்பாக தேர்தல் காலத்தில் உதவி வழங்காத மனிதனுமாவார். (ளி)

## மட்டு., அம்பாறை மாவட்டங்களில் புத்தாண்டு ஏற்பாடுகள் மும்முரம்

மட்டக்களப்பு,ஏப்.13

கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ், சிங்கள மக்கள் சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடுவதற்குத் தயாராகி வருகின்றனர்.

புத்தாண்டு மலர்வதற்கு 2 தினங்களே உள்ள நிலையில், மக்கள் புத்தாண்டைக் கொண்டாடுவதற்கான முன் ஆயத்த நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

நாடாளுமன்றத் தேர்தல் பரபரப்புகள் தணிந்துள்ள வேளையில், புத்தாண்டுக் கொண்டாங்களுக்கான பொருள் கொள்வனவுகளில் மும்முரமாகக் காணப்படுகின்றனர்.

இதனால், தேர்தலின் பின்னர் வியாபார நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன எனவும், கிழக்கு மாகாண நகரங்களில் மக்கள் கூட்டம் செறிந்து காணப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரத்துடன், ஒப்பிடும்போது தற்போது வியாபார நடவடிக்கைகள் சூடுபிடித்துள்ளன. மக்கள் மிகுந்த ஆர்வத்துடன், இறுதிக்கட்டப் பொருட் கொள்வனவில் ஈடுபட்டு வருவதால் வியாபாரம் களைகட்டியுள்ளது என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

கிழக்கில் தற்போதுள்ள அமைதியான சூழ்நிலை காரணமாக மக்கள் அச்சமின்றி நகர்ப்புறப் பிரதேசங்களுக்குச் சென்று புத்தாண்டுக் கொள்வனவுகளில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது. (ளி)

## கிழக்கில் பின்தங்கிய பாடசாலைகளின் அபிவிருத்தியை மேம்படுத்தத் திட்டம்

மட்டக்களப்பு,ஏப்.13

கிழக்கு மாகாணத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டம் ஒன்றை மாகாணக் கல்வியமைச்சு அமுல்படுத்தவுள்ளது.

அபிவிருத்தியில் பின்தங்கிய நிலையிலுள்ள பாடசாலைகளின் பௌதீகவளத் தேவைகளை நிறைவுசெய்து கொடுப்பதன் மூலம் இப்பகுதி மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், இந்தத் துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது என மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் உபுல் வீரவர்த்தன தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் 15 கல்வி வலயங்களிலும் இருந்து முதற்கட்டமாகச் சுமார் 150 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

இதேவேளை, இவ்வாறான பாடசாலைகளில் கல்வி பயிலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களின் கல்விக்கான தேவைகளை நிறைவு செய்யும் வகையில் பாடசாலை உபகரணங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன எனக் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ளி)

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விஷேட பஸ் சேவைக்கு ஏற்பாடு

மட்டக்களப்பு, ஏப்.13

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தத்தமது ஊர்களுக்குச் செல்கின்ற மக்களின் வசதிகருதி மேலதிகமாகச் சுமார் 400 பஸ்களை சேவையில் ஈடுபடுத்தவுள்ளது எனப் போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது.

இந்த பஸ் சேவைகள் இன்று வரை நடைபெறவுள்ளன என இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளர் லிவில் பொமுனுபொல ஆராச்சி தெரிவித்துள்ளார்.

இச்சேவை எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை வெளிமாகாணங்களிலும் விஷேட பஸ் சேவைகளை நடத்தப்படவுள்ளன.

காலி, மாத்தறை, அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், ஹட்டன், பதுளை பகுதிகளுக்கான அரைச்சொகுசு பஸ்சேவை நடத்தப்படவுள்ளதுடன், புறக்கோட்டையில் அமைந்துள்ள அலுவலகத்தில் ஆசன ஒதுக்கீடுகளைச் செய்துகொள்ள முடியும் எனவும் பமுனபொல ஆராச்சி தெரிவித்துள்ளார்.

அத்துடன், கட்டுநாயக்க, ஜா-எல, பியகம, யக்கல ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ளி)




## அம்பாறையில் 3 தொகுதிகள் ஆளும் தரப்பினர் வசம்

அம்பாறை,ஏப்.13

அம்பாறை மாவட்ட நாடாளுமன்றத் தேர்தலில் மூன்று தொகுதிகள் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வசமாகியுள்ளன. கல்முனைத் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி வசமாகியுள்ளது.

அம்பாறைத் தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 51ஆயிரத்து 777 வாக்குகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 29ஆயிரத்து 812வாக்குகளையும் பெற்றுள்ளன. சம்மாந்துறைத் தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 28ஆயிரத்து 252வாக்குகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 10ஆயிரத்து 184வாக்குகளையும் பெற்றுள்ளன. பொத்துவில் தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 32ஆயிரத்து 603வாக்குகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 27ஆயிரத்து 189வாக்குகளையும் பெற்றுள்ளன.

கல்முனைத் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி 20ஆயிரத்து 457வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 8ஆயிரத்து 332வாக்குகளையும் பெற்றுள்ளன. இதன்படி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 13லட்சத்து 20ஆயிரத்து 96வாக்குகளுடன் 4பிரதிநிதிகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 90ஆயிரத்து 757வாக்குகளுடன் 2பிரதிநிதிகளையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 26ஆயிரத்து 895வாக்குகளுடன் ஒரு பிரதிநிதியையும் பெற்றுக் கொண்டுள்ளன.

42 லட்சத்து 835வாக்குகளைக் கொண்ட இந்த மாவட்டத்தில் 2 லட்சத்து 72ஆயிரத்து 462வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 51.41 வீதமும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 35.32வீதமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 10.47வீதமும் என்ற அடிப்படையில் வாக்குகள் கிடைக்கப்பெற்றுள்ளன. (ளி)

## அம்பாறையில் தெரிவானோர்

அம்பாறை, ஏப்.13

அம்பாறை மாவட்டத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் சிங்களவர்களில் மூவரும், முஸ்லிம்களில் இருவரும், தமிழர்களில் ஒருவரும் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஒரு லட்சத்து 32ஆயிரத்து 96வாக்குகளைப் பெற்று 4பிரதிநிதிகளைப் பெற்றுள்ளது.

சரத் பியனந்த வீரசேகர, ஷிரியாணி, விஜேவிக்ரம, பி.தயாரட்ண, ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோரே தெரிவாகினர். ஐக்கிய தேசியக் கட்சி 90ஆயிரத்து 757 வாக்குகளைப் பெற்று 2பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துள்ளது. எச்.எம்.எம்.ஹரீஸ், எம்.சி.எம்.காசிம் ஆகிய முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளே தெரிவாகியுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 26ஆயிரத்து 895 வாக்குகள் கிடைத்துள்ளன.

பொடியப்பு பியசேனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 11ஆயிரத்து 132 வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பிரதிநிதியாவார். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஆயிரத்து 490 வாக்குகளையும், ஜனநாயகத் தேசிய முன்னணி 2ஆயிரத்து 917வாக்குகளையும் பெற்றுக்கொண்டுள்ளன. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பேரியல் அஷ்ரப், ஏ.எம். நௌசாட், [illegible] ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர். (ளி)

## அம்பாறை தமிழ்ப் பிரதேசங்களில் இம்முறை வாக்களிப்பு மந்தகதி

காரைதீவு,ஏப்.13

அம்பாறை மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலின் போது இம்முறை 62 வீதம் வாக்குப் பதிவு இடம்பெற்றுள்ளது என அறியமுடிகின்றது.

அவற்றில் சிங்கள மக்கள் 65வீதமும், முஸ்லிம் மக்கள் 58வீதமும், தமிழ் மக்கள் 38வீதமும் வாக்களித்துள்ளனர் என மாவட்டச் செயலக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தமிழர் பிரதேசங்களில் வாக்களிப்பு காலையிலிருந்தே மந்தமாகக் காணப்பட்டது. மக்கள் அரசியலில் குறிப்பாக நாடாளுமன்றப் பிரதிநிதிகள் தொடர்பாக வைத்துள்ள அனுபவ அபிப்பிராயமே, மக்களின் இந்த அலட்சியப் போக்குக்குக் காரணமாகும் என அறியமுடிகின்றது.

கடந்த காலங்களில் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் செய்த சேவைகளின் மகத்துவமும், ஒரே அணிக்குள் முட்டி மோதி, வாக்கு வேட்டையாடியமையும் தமிழ் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளன என்பதும் சிலரது கருத்தாகும். அனைத்து வேட்பாளர்களும் ஒரே மேடையில் தோன்றிப் பொதுவான வாக்குறுதியை அளித்த நிகழ்வு இம்முறை இடம்பெறவில்லை. தேவையற்ற போஸ்டர்கள், பிரசுரங்கள், தனித்தனியாக ஆதரவுக்கள் தேடிக்கொண்டமை, வன்முறைகள், அழுத்தங்கள் எனப் பல காரணங்களைக் கூறுகின்றனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009 ஆம் ஆண்டின் செலிங்கோ லைஃப் சாதனையாளர்கள்




செலிங்கோ லைஃபின் தலைசிறந்த சாதனையாளர்கள் அண்மையில் மிக மகத்தான முறையில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். 2009 ஆம் ஆண்டிலும் காப்புறுதித்துறையில் செலிங்கோ லைஃப் உச்ச நிலையில் இருப்பதற்குக் காரணமாக இருந்தவர்களே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

இவ்வாண்டின் இந்தவிழா "ஒரே குடும்பம் ஒரே இலக்கு நாங்கள் செலிங்கோ லைஃப்" என்ற தொனிப் பொருளில் இடம்பெற்றது. கம்பனியின் 5000 பேர் கொண்ட மிக உறுதியான விற்பனைப் படையில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 225 பேர் கௌரவிக்கப்பட்டனர். செலிங்கோ லைஃப் கடந்தாண்டில் தனது சந்தா வருமானத்தை 7.5 பில்லியன் ரூபாவாக ஈட்டுவதற்கு காரணமாகவும், தொடர்ந்து ஆறாவது வருடமாக காப்புறுதித்துறையில் தலைமை வகிப்பதற்கு காரணமாகவும் இருந்தவர்களே இவர்கள் ஆவர்.

இந்த வைபவத்தில் பேசிய செலிங்கே லைஃப் பிரதித் தலைவர் ஆர்.ரெங்கநாதன் 2009 ஆம் ஆண்டு இதுவரை இந்தக் கம்பனி முகம்கொடுத்த மிகவும் சவால்மிக்க ஆண்டு என்று கூறினார். "2009 ஆம் ஆண்டு எல்லா விதத்திலும் எமக்கு சோதனைகளும், சவால்களும் மிக்க ஆண்டாக இருந்தது. எமது ஊழியர்களின் ஆற்றல், எமது தகவல் தொழில்நுட்பம், உற்பத்திகள், வாடிக்கையாளர் சேவைகள் என எல்லாமே சாவால்களை எதிர்கொண்டது. இருந்தாலும் நாம் அவற்றை வெற்றிகரமாகக் கடந்துள்ளோம்" என்றார். "எவ்வாறாயினும் இப்படிப்பட்ட சவால்கள் எம்மை எதிர் நோக்கி இருக்காவிட்டால் இன்று நாம் இந்த வெற்றியை அனுபவிக்கவும் முடியாது" என்று கூறிய ரெங்கநாதன் சவால்கள் தான் கம்பனிகளிடமிருந்தும், தனிநபர்களிடம் இருந்தும் மிகச்சிறந்த ஆற்றல்களை வெளிக்கொண்டுவரக் கூடியது-என்றார்.

இந்த ஆண்டு சாதனைகளுக்கும், வெற்றிகளுக்கும் குறிப்பிடத்தக்க ஒரு ஆண்டாகும் என்றும் அவர் கூறினார். இந்த சவால்களுக்கு மத்தியில்தான் கம்பனி புதிய தலைமையகத்தின் புதிய் கட்டடப்பணிகளை ஆரம்பித்து அதனைப் பூர்த்தி செய்தும் உள்ளது. அத்தோடு இவற்றின் மத்தியில்தான் கம்பனியின் கடன்தீர்வு எல்லையும் மிக வேகமாக அதிகரித்துள்ளது.

இந்த வைபவத்தில் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டு பேசிய முகா மைத்துவப் பட்டப்படிப்பு நிலையத்தின் பணிப்பாளர் டாக்டர்.உதித லியனகே கம்பனியின் விற்பனை நிபுணர்களை வி.ஐ.பி என வர்ணித்தார். ஏனெனில் இவர்கள் தான் விற்பனையை உருவாக்கிய தோடு கம்பனியை நிலைத்திருக்கச் செய்யும் ரூபாய்களையும் கொண்டு வந்தவர்கள் என்று குறிப் பிட்டார்.

ஐம்பது ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின் முடிவின்படி வெற்றிகரமான விற்பனைக் குழு வாக ஒரு குழு இரண்டு அடிப்படைக் காரணிகளால் அடை யாளம் காணப்படுகின்றது என்றார். ஊக்கம் மற்றும் அழுத்தம் என்பனவே அவை என்று குறிப்பிட்டர். எல்லா விற்பனை நிபுணர்களும் ஊக்கமுடையவர்களாகக் காணப் படுகின்றனர். அதனால்தான் அவர்களால் தங்களுடைய ஆற்றலையும் மீறிச்சென்று சாதனைகளைப் படைக்க முடிந்துள்ளது என்றார்.

இலங்கையின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த கிளைகளின் விற்பனைப் பொறுப்பாளர்கள், பிரிவுகளின் பொறுப்பாளர்கள், விற்பனை நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் விற்பனை ஆலோசகர்கள் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு வைபவத்தில் இந்த மாபெரும் விருது வழங்கும் விழா இடம்பெற்றது. இதில் கௌரவிக்கப்பட்டவர்கள் பட்டியலில் யாழ்.குடாநாடு மற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கிளை உறுப்பினர்களும் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தமை ஒரு முக்கிய அம்சமாகும்.

கிண்ணங்கள், தங்கப்பதக்கங்கள், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள், சான்றிதழ்கள், வெளிநாட்டுச் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்கள் என்பன இந்த சாதனையாளர்களுக்கான பரிசில்களாக வழங்கப்பட்டன.

சிறந்த விருதுகளைப் பெற்றவர்கள்:- சிறந்த கிளைப் பொறுப்பாளர், பிளேட்டினம் வகை டீ.நிரோஜன் (நெல்லியடி கிளை), தங்கவகை எச்.எம்.ஜே பண்டா (கதுருவல கிளை), சிறந்த பிரிவுப் பொறுப்பாளர் பிளேட்டினம் வகை எஸ்.தர்ஷன் (கொழும்பு வடக்கு), தங்கப்பிரிவு யூ.பீ.ஆர்.என்.பிரசாத் (கதுருவெல கிளை), சிறந்த விற்பனை ஆலோசகர் பிளேட்டினம் வகை ஏ.கேசவன் (கொழும்பு வடக்கு), தங்க வகை ஜீ.சீ.கே.விஜேசிங்க (கஹடகஸ்திகிலிய கிளை).

விளம்பர வரணம்

# இளம் சந்ததிக்கு சிறந்த வழிகாட்டலை வழங்கும் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

தற்போதைய உலகம் கைத்தொழில் மயமாக மாறி வளர்ச்சி பெற்று வருகின்ற நிலையில் எமது யாழ். குடா நாடும் இவ்வளர்ச்சிக்கு உரிய வகையில் முகம்கொடுத்து அதற்கு ஈடாக வளர்ச்சிகாண வேண்டிய கட்டாய சூழல் இன்று காணப்படுகின்றது.

தற்போது யாழ். மாவட்டத்தில் நலிவடைந்திருக்கும் கைத்தொழில் துறையினை மேம்படுத்தி வேலையற்றிருக்கும் பல்லாயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி அவர்களுக்குரிய வழிகாட்டலை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு எமது வர்த்தக தொழிற்றுறையினரையே சாரும்.

அந்த வகையில் காலத்தின் தேவை அறிந்து அவர்கள் எமது இளம் சந்ததியினருக்கு உரிய வழிகாட்டலை வழங்கும் பொருட்டு சர்வதேச கைத்தொழிற்றுறையினரை இப்பகுதிக்கு வரவழைத்து எமது இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்தி வைப்பதற்காக பல்வேறு வர்த்தக கண்காட்சிகளை ஒழுங்குசெய்து நடத்தி வருகின்றனர்.

இப்படியாக ஒழுங்கு செய்து நடத்தப்படுகின்ற கண்காட்சிகளைப் பார்வையிட்டு சர்வதேச கைத்தொழில்நுட்பங்களை அறிவதற்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை - வரப்பிரசாதத்தை எமது வருங்கால சந்ததியினர் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அந்தவகையிலே யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில் மன்றமும், வரையறுக்கப்பட்ட இலங்கைக்கண்காட்சி மற்றும் மாநாடுகள் சேவைகள் தனியார் நிறுவனமும் இணைந்து யாழ். மாவட்டத்தில் நலிவடைந்திருக்கும் கைத்தொழிற்றுறையினை மேம்படுத்தவதனூடாக வேலையற்றிருக்கும் பல்லாயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும் என்ற பிரதான நோக்கத்துடன் " யாழ்ப்பாணத்துக்கான உங்கள் நுழைவாயில்" எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2010 எதிர்வரும் 18ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

சுமார் 200 காட்சிக்கூடங்கள் கொண்டதாக அமைக்கப்படவுள்ள இக்கண்காட்சியில் இந்தியாவைச்சேர்ந்த முன்ணனி கைத்தொழில் சேவைகளை வழங்கும் நிறுவனங்களும், இயந்திர சாதன உற்பத்தி சேவைகளை வழங்கும் நிறுவனங்களும் பங்கேற்பது குடாநாட்டு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும்.

அத்துடன் விவசாயம்,உணவு பதனிடல் மற்றும் பொதியிடல், கட்டுமானத் துறை,மீன்பிடி, தகவல் தொழில்நுட்பம்,சுற்றுலாத்துறை, மோட்டார் உபகரணங்கள், அழகுக்கலை மற்றும் சிறிய நடுத்தர உற்பத்திதுறை போன்ற முக்கிய துறைகளில் நவீன இயந்திர சாதனங்களையும், சேவைகளையும் இந்திய மற்றும் மலேசிய நிறுவனங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளமை சிறப்பம்சங்களாகும்.

மேலும் இலங்கையின் தென்பகுதியைச் சேர்ந்த பல்வேறு தேசிய மற்றும் பல்தேசிய கைத்தொழில் நிறுவனங்களும் தமது உற்பத்திப் பொருள்கள் மற்றும் இயந்திர சாதனங்களை காட்சிப்படுத்துவதுடன் மேற்படி இயந்திர சாதனங்களை எவ்வாறு கையாளுவது என்பது தொடர்பான முழுமையான விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் இக்கண்காட்சியைப் பார்வையிடுவதனூடாக சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சிகளுக்குத் தேவையான இயந்திர சாதனங்களையும் தொழில்நுட்ப அறிவினையும் பெற்றுக் கொள்வதோடு, குடாநாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி குறைந்த முதலீட்டுடனான கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதோடு, தற்போது செயற்பட்டுவரும் கைத்தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்தியினை மேம்படுத்துவதற்கான மேலதிக நவீன அறிவினையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

அத்தோடு புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான சாத்தியமான நிதி மூலங்களை இனங்காண முடிவதோடு நீண்டகாலத் தொழில் முயற்சிகளுக்குத் தேவையான இயந்திரங்களையும் , கட்டுமான வேலைகளையும் எவ்வாறு இறக்குமதி தீர்வையில்லாது பெற்றுக்கொள்வது தொடர்பான ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளமுடியும். அத்துடன் ஏற்றுமதி செய்வதற்கான உற்பத்திப் பொருட்களை எவ்வாறு சிறந்த தரக்கட்டுப்பாட்டுடன் மேற்கொள்வது என்பது தொடர்பான வழிகாட்டல்களையும் ஏற்றுமதி நடைமுறைகளையும் அறிந்துகொள்ள முடியும். மேலும் இக்கண்காட்சியில் பார்வையாளர்களைக் கவரும் வகையில் தென்னிலங்கை இசைக் குழுவினரின் இன்னிசை கதம்ப நிகழ்வுகளும் , சிறுவர்களுக்கான களியாட்ட நிகழ்வுகளும் மற்றும் அனைத்துத் தரப்பினரையும் கவரும் வகையிலான பல்வேறு பொழுது போக்கு அம்சங்களும் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே குடாநாட்டு மக்களுக்கு வரப்பிரசாதமான இக்கண்காட்சியை அனைத்துத் தரப்பினரும் தக்கமுறையில் பயன்படுத்திப் பயனடைவார்களென நம்பப்படுகின்றது.

*(தொகுப்பு: சுகந்தன்)*

# 'மைக்ரோ சொப்'ரின் தமிழ்மொழி இடைமுகப் பொதி அறிமுகம்

Vista, XP, Office 2007 மற்றும் Office 2003 ஆகியன தற்போது தமிழ்மொழியிலே கிடைக்கப்பெறுகின்றன.

மைக்ரோசொப்ட் நிறுவனத் தினால் மிகவும் உயர்வாக எண் ணப்படுகின்ற கிராமத்திற்கு தக வல் தொழில்நுட்பம் (Gamata IT) என்ற முயற்சிக்கு அமைவாக கடந்த வருடத்திலே சிங்களமொழி இடை முகப்பொதியினை மிகவும் வெற்றி கரமாக அறிமுகம் செய்து வைத் துள்ளதனைத் தொடர்ந்து மைக்ரோ சொப்ட் ஸ்ரீலங்கா நிறுவனமானது யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற இன்போடெல் கண்காட்சியிலே தமிழ்மொழி இடைமுகப் பொதியினை அறிமுகம் செய்து வைத் துள்ளதன் மூலமாக அமோக வரவேற்பினைப் பெற்றுள்ளது. அரசாங்கத்தினால் முன் னெடுக்கப்பட்டு வருகின்ற "வடக்கின் வசந்தம்" நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆதர வளிக்கின்ற மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் முயற்சிகளின் ஒரு பகுதியாகவும் இப் பொதி அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இதனை அறிமுகப்படுத்துவது தொடர்பிலே கருத்துக்கூறிய மைக்ரோசொப்ட் ஸ்ரீலங்கா தொழிற்றுறை மற்றும் பொதுத்துறைப் பிரிவுகளின் பணிப்பாளரான சண்ண டி சில்வா வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய பகுதிகளிலே வாழ்வோரின் வாழ்க்கைகளிலே மென்பொருள் ஏற்படுத்தக்கூடிய சாதகமான தாக்கத்தினையிட்டு மைக்ரோ சொப்ட் ஸ்ரீலங்கா குதூகலமடைந்துள்ளது - என்றார். "மக்கள் தங்களது தாய்மொழியிலேயே கணினியினை இயக்குகின்ற ஆற்றலை அவர்களுக்கு வழங்குவதே எமது நோக்கமாகும். ஆசியா பூராகவும் உள்ள நாடுகள் உள்ளூர் மொழியில் மென் பொருளை உபயோகிப்பதனூடாக தங்களது தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப ஊடுருவலை மேம்படுத்திக்கொண்டு அதன் மூலமாக ஆங்கிலமொழி போட்டித் திறன் தாழ்நிலை காரணமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஊடுருவலிலே காணப்பட்ட தடைகளை அகற்றியுள்ளன. எமது கிராமப்புற சமூகங்கள் தொழில்நுட்ப மாற்றங்களை மேற்கொள்கின்ற வீதத்தினை அதிகரித்துக்கொள்ள வேண்டுமெனில் அவர்கள் அவற்றினை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளிலேயே உபயோகிக்கச் செய்வதே மிகச் சிறந்த வழிகளில் ஒன்று என நாம் நம்புகின்றோம். வழி முறைகளுக்கு எல்லைகள் கிடையாது என்பதற்கு அமைவாக நாம் அவற்றினை உபயோகிப்பதன் மூலமாக அவர்கள் ஆங்கிலத்தினைக் கற்றுக்கொள்ள முயல்வதற்கும் அவர்களை உற்சாகப்படுத்தியுள்ளோம்".

யாழ்ப்பாணத்திலே அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டுள்ள தமிழ்மொழி இடைமுகப்பொதியானது இந்தியாவிலே அபிவிருத்தி செய்யப்பட்ட நிலையிலே அதனை இன்னும் உள்ளூர் சூழ்நிலைகளுக்கு இசையக் கூடியவாறு வடிவமைக்கும் பணியினை முன்னெடுப்பதற்காக ICTA ஆனது ஏற்கனவே நிபுணர்களை ஒன்று திரட்டியுள்ளது. இந்த மென்பொருளை அபிவிருத்தி செய்து விநியோகிப்பதிலே இந்த அணியிலே மைக்ரோசொப்ட் பிரதான பங்கு வகிக்கும்.

தொழில்நுட்பத்தினால் கிடைக்கக்கூடிய பயன்களை யும் அதன் மூலமான எதிர்காலம் தொடர்பாகவும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் அமைப்பினது (ICTA) நிகழ்ச்சித்திட்டத் தலைமையாள ரான பயாஸ் ஹுடா குறிப்பிட்டார். "தனிநபர்கள் தம்மைச் சார்ந்துள்ள சமூகங்களின் அபிவிருத்திக்கும், தேசிய பொருளாதாரத்திற்கும் பங்களிப்பு வழங்க வேண்டு மென்ற நீண்டகால நோக்கத்திற்கு தொழில்நுட்பப் பாவனை இன்றியமையாதது. வடக்கு மற்றும் கிழக்கிலே வசிப்போருக்கு தொழில்நுட்பத்தினை அடைந்து கொள் ளும் வாய்ப்பினை ஏற்படுத்துவதும், தமிழ்மொழியிலே தொழிற்படுத்துவதற்குரிய மென்பொருளை வழங்குவதும் இதன் முடிவினை நோக்கி எடுத்துவைக்கின்ற பாரியதொரு காலடியாகும். உபயோகிக்கப்படுகின்ற மொழிகளின் வேறுபாடின்றி வளர்ச்சி யினை ஏற்படுத் தக்கூடிய வாய்ப்பினை தொழில்நுட்பமானது அனைவருக்கும் ஏற்படுத்துகின்றது".

இவற்றினை தமிழ்மொழியிலே தொழிற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தினை விஞ்ஞான மற்றும் தொழிற்நுட்ப அமைச்சினது தகவல் தொழில்நுட்ப ஆலோசகரான ஜெயரஞ்சன் யோகராஜ் வலியுறுத்தினார். "சிங்களமொழி இடைமுகப் பொதியின் அறிமுகமானது இலங்கையெங்கும் உள்ள பலர் தங்களுக்கு ஆங்கிலமொழி யிலே தொழிற்படுத்த இயலாமை காரணமாக இருந்த தயக்கத்தினை அகற்றி அவர் களை ஊக்குவித்திருந்தது. Vista, XP, Office 2007 மற்றும் Office 2003 ஆகியவற் றினை தமிழிலே கொண்டிருப்பதன் மூலமாக அவர்கள் ஆங்கிலம் பேசக்கூடிய வர்களோ அல்லது பேசமுடியாதவர்களோ என்பதற்கு அப்பாலே தொழில்நுட்பத்தின் உச்சப் பயனைப்பெற்று அந்த வாய்ப்பின் மூலமாக பிரத்தியேக நன்மைகளைப் பெற்றுக்கொள்வர். இதன் மூலமான பயன்கள் அவர்களின் வாழ்வின் ஒவ்வொரு பாகத்திலும் கிடைக்கப்பெற்று தற்போதும் எதிர்காலத்திலும் இன்னும் அதிகமானவற்றினை சாதித்துக் கொள்வதற்கும் வழிவகுக்கின்றது".

Vista, XP, Office 2007 மற்றும் Office 2003 ஆகியவற்றின் தமிழ்மொழி மூல அறிமுகமானது இலங்கையிலுள்ள பல சமூகங்களுக்கு உலகத்தரம் வாய்ந்த மிகச் சிறந்த தொழில்நுட்பத்தினை கொண்டுவருவதுடன், ஒவ்வொருவரும் தமது பூரண வாய்ப்பினை எட்டுவதற்கு அவர்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணங்களை அடைதல் தேவையாகவுள்ளது என்பதனை உறுதிசெய்யும் வகையிலே மைக்ரோசொப்ட் ஸ்ரீலங்காவினது உறுதிமொழியினையும் நிறைவேற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.06.1990

* விடுதலைப் புலிகளின் உயர் மட்டத் தலைவர்களுக்கும் அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீதுக்கும் இடையேயான பேச்சுகள் பலனளிக்காததால் இரு தரப்பினரும் தத்தம் தலைமைப் பீடங்களுடன் கலந்தாலோசித்தபின் மீண்டும் பேசுவதென முடிவு.

* விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் பலாலியில் மோதல் ஏற்பட்டதையடுத்து விமானப் படையினர் பலாலியைச் சூழவுள்ள பகுதியில் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பொதுமக்கள் உயிரிழப்பு.

17.06.1990

* மாகாண சபைகள் திருத்தச் சட்டம் அரசியல் யாப்புக்கு முரணானதல்ல என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாகச் சபாநாயகர் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

* நேற்று மாலை ஆறு மணி முதல் விடுதலைப் புலிகளும் அரச படையினரும் யுத்த நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கான இணக்கம் நேற்று யாழ்ப்பாணத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் முடிவில் எட்டப்பட்டதாகத் தெரிவிப்பு.

* யுத்த நிறுத்தமொன்றுக்காக விடுதலைப் புலிகள் விதித்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு அவற்றை உடன் அமுல்செய்ய அரசு உறுதியளித்துள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல்.

18.06.1990

* வடக்கு கிழக்கில் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தபின்னர் பல இடங்களில் பரவலாக அரச படையினர் யுத்த நிறுத்த மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக விடுதலைப் புலிகள் தரப்பு குற்றச்சாட்டு.

* இலங்கை விமானப் படையினர் தமது கட்டுப்பாட்டின்கீழ் இல்லாமல் தமது இஷ்டப்படி செயற்படுவதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க ஒப்புக்கொண்டிருப்பதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் மாத்தையா தெரிவிப்பு.

19.06.1990

கடந்த சனிக்கிழமை அமுலுக்கு வந்த யுத்த நிறுத்தம் உத்தியோக பூர்வமாகக் கைவிடப்படுவதாகவும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக முழு அளவிலான யுத்தமொன்று பிரகடனப்படுத்துவதாகவும் இலங்கை அரசு அறிவிப்பு.

* தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் மாத்திரமே இனிமேல் அரசு அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் எனப் பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

20.06.1990

* ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் செயலாளர்நாயகம் பத்மநாபா உட்பட 13 ஈ.பி.ஆர்.எல்.எவ் பிரமுகர்கள் சென்னை.கோடம்பாக்கம் குடியிருப்புப் பகுதியொன்றில் வைத்துச் சுட்டுப் படுகொலை.

* வடக்கு - கிழக்கில் யுத்தச் சூழ்நிலை நிலவுவதால் அதற்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ள மேலும் 500 கோடி ரூபா நிதி தேவைப்படுவதாக ஜனாதிபதி பிரேமதாசா தெரிவிப்பு.

21.06.1990

* ஈழத்தமிழ்ப் போராளிகளுக்கு இனிமேல் தமிழகத்தில் இடமளிக்கப்படமாட்டாதெனவும், அங்கு தங்கியுள்ள போராளிகள் அனைவரையும் கைது செய்து அவர்களிடமிருக்கும் ஆயுதங்களைக் கைப்பற்றுமாறு தமிழக முதலமைச்சர் கருணாநிதி பொலீஸாருக்கு உத்தரவு.

* சென்னை கோடம்பாக்கம் தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யாழ்.மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பான நாடாளுமன்ற உறுப்பினர் யோகசங்கரி சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழப்பு.

22.06.1990

* யுத்தத்தை உடனடியாக நிறுத்தி அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு இந்திய அரசு இலங்கை அரசிடம் வேண்டுகோள்விடுப்பு.

* கடந்த வாரம் திருகோணமலையில் இடம்பெற்ற மோதல்களின் பின்னான சம்பவங்களில் அங்குள்ள முக்கிய பிரமுகர்கள் சிலர் உட்பட பல தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

23.06.1990

* வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்தம் நடைபெற்று வரும் நிலையில், மலையகத்திலும் தென்பகுதியிலும் மூண்ட இனக்கலவரத்தின் விளைவாக நூற்றுக்கும் அதிகமான தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிப்பு.

* திருமலை மாவட்டம் சீனன் குடாவில் மூன்று நாள்களுக்கு முன்னர் அரச படையினர் 14 தமிழ்ப் பொது மக்களைத் தாக்கி அவர்களை உயிருடன் எரித்துள்ளனர் என விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவிப்பு.

24.06.1990

தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் யாழ். போதனா வைத்தியசாலையைப் பொறுப்பேற்றுத் தொடர்ந்து இயங்க வைக்கத் தமக்கு அனுமதியும் ஒத்துழைப்பும் வழங்குமாறு விடுதலைப் புலிகள் மற்றும் அரசு ஆகிய இரு தரப்புக்களிடமும் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு கோரிக்கை விடுப்பு.

* விடுதலைப் புலிகள் தொடர்ந்து நடத்தி வரும் தாக்குதல்கள் காரணமாக யாழ்.கோட்டை இராணுவ முகாமில் விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கியுள்ள படையினருக்கு உணவு வழங்க தம்மால் எடுக்கப்படும் முயற்சி தோல்வி கண்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு.

25.06.1990

கொழும்பிலிருந்து உணவு மற்றும் மருந்து வகைகள் உட்பட அத்தியாவசியப் பொருள்களின் முதற்தொகுதி தமது ஏற்பாட்டில் இன்று யாழ்.குடாநாட்டுக்கு எடுத்து வரப்படுமென செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு தெரிவிப்பு.

* வடக்கு - கிழக்கில் உள்ள படை முகாம்களை அண்டியுள்ள பகுதிகளில் வாழும் பொதுமக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயருமாறு கேட்டுக் கொள்ளும் துண்டுப் பிரசுரங்கள் படையினரால் விமானத்திலிருந்து காங்கேசன்துறை, யாழ்.கோட்டை, காரைநகர்ப் பகுதிகளில் போடப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

26.06.1990

* யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியிலும், பெரியகடைப் பகுதியிலும், அவற்றை அண்டிய நகரப் பகுதிகளிலும் நேற்று நாள் முழுவதும் பல போர் விமானங்கள் ஒரே கூட்டமாக வந்து உக்கிரக்குண்டு வீச்சு.

* விடுதலைப் புலிகளின் முற்றுகைக்கு உட்பட்டிருக்கும் யாழ்.கோட்டையை விடுவிப்பதற்கான இராணுவ -விமானப் படைகளின் கூட்டு நடவடிக்கையை அரசு ஆரம்பித்திருப்பதாகப் பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கொழும்பில் தெரிவிப்பு.

27.06.1990

* இலங்கைக்கு பாகிஸ்தான் நாடு துருப்புக்களை அனுப்பக்கூடுமென இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி எச்சரிக்கை. இது குறித்து தாம் பிரதமர் வி.பி.சிங்கிடம் கூறியிருந்த போதும் அவர் அதனை அசட்டை செய்வதாகக் குற்றச்சாட்டு.

* திருகோணமலை நிலாவெளியில் செல்வம் அரிசி ஆலையில் அகதிகளாகத் தங்கியிருந்தவர்கள் மீது பொம்பர் விமானமொன்று மேற்கொண்ட தாக்குதலில் 35 பொதுமக்கள் உயிரிழப்பு.

28.06.1990

* நேற்று மாலை நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஹெலிகொப்டர்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களில் பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளதாகத் தெரிவிப்பு.

* இன்றைய நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக அரசு எவருடனும் பேச்சுக்கள் நடத்தத் தயாராக உள்ளது. இதனை அரசின் பலவீனம் என்று எவரும் கருதிவிடக் கூடாது என ஜனாதிபதி பிரேமதாசா தெரிவிப்பு.

29.06.1990

* இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையே நடைபெறும் யுத்தத்தை நிறுத்தவும், அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் உயிரிழப்பதைத் தடுக்கவும் இந்தியா புதிய முயற்சிகளை மேற்கொள்ளும் என இந்தியப் பிரதமர் வி.பி.சிங், தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதியிடம் உறுதி தெரிவிப்பு.

* வடக்கு - கிழக்கில் இடம் பெறும் விமானத் தாக்குதல்களின்போது சில சமயங்களில் பொதுமக்கள் பாதிக்கப்படுவதற்கு விமானிகளின் தவறே காரணம் என பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

30.06.1990

* நான்கு நாள்கள் இடைவெளியின் பின்னர் நேற்று மாலை மீண்டும் யாழ்.நகரின்மீது போர் விமானங்கள் கடும் தாக்குதல். வங்கி, கல்லூரி மற்றும் பல வீடுகள் சேதம்.

* 'தமிழீழ மீட்பு நிதி' ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவிப்பு.

* இலங்கைக்கு மீண்டும் படையை அனுப்பும் வழியில் இந்தியா சிந்திக்கவில்லை என இந்திய வெளிவிவகார அமைச்சர் குஜ்ரால் தெரிவிப்பு.

# மும்மூர்த்திகளில் ஒருவரே புதிய பிரதமர் ஜனாதிபதியிடம் கட்சியினர் வலியுறுத்து

கொழும்பு, ஏப்.13

புதிய பிரதயராக யாரை நியமிப்பது என்பது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களான தி.மு.ஜயரத்ன, மைத்திரிபால சிறிசேன மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோரில் ஒருவரையே பிரதமராக நியமிக்க வேண்டுமென்று கட்சியின் முக்கியஸ்தர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனவும் நம்பகமான செய்திகள் தெரிவிக்கின்றன.

கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற பஸில் ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க வேண்டுமென கட்சியின் முக்கியஸ்தர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனவும் அவ்வாறு வழங்கப்படாவிடின் வெளிவிவகார அமைச்சுப் போன்ற முக்கிய அமைச்சுப் பொறுப்பு ஒன்றினை அவருக்கு வழங்க வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கம்பஹா மாவட்டத்தில் 4 இலட்சத்து 25 ஆயிரத்து 861 அதிகூடிய விருப்பு வாக்குகளை பஸில் ராஜபக்ஷ பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற வேட்பாளர்களில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவர் என்ற பெருமையும் இவரையே சாரும்.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இதே மாவட்டத்தில் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 4 லட்சத்து 64 ஆயிரத்து 588 வாக்குகளைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் மீண்டும் இவ்வாரம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# ஆஸியின் முடிவு இலங்கை அகதிகளின் வருகையை குறைக்கப் போவதில்லை

## 'த மோர்னிங் ஹெரால்ட்' பத்திரிகை தெரிவிப்பு

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அகதிகளுக்கு எதிராக ஆஸ்திரேலிய அரசு கொண்டுவந்துள்ள கொள்கை மாற்றம் அகதிகளின் வருகையை குறைக்கப்போவதில்லை - என்று ஆஸ்திரேலியாவில் வெளியாகும் 'த மோர்னிங் ஹெரால்ட்' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கை அகதிகள் தொடர்பிலான ஆஸ்திரேலிய அரசின் கொள்கை மாற்றம் பலதரப்பினரையும் அதிருப்தி அடையச் செய்துள்ளது.

இனிவரும் காலங்களில் இலங்கை மற்றும் ஆப்கான் நிலவரங்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு அகதி அந்தஸ்தை உறுதிப்படுத்துவதற்கான கால அவகாசம் வழங்கப்படாது என ஆஸி. அறிவித்தது.

இதேவேளை, இந்த கொள்கை மாற்றம், தற்போது கிறிஸ்மஸ் தீவில் உள்ள இலங்கை அகதிகளுக்குப் பொருந்தாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய அகதிகளை மீண்டும் படகுகளின் ஊடாக வராமல் இருக்கும் பொருட்டே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது எனக் கூறப்படுகிறது. எனினும் அந்த எண்ணம் தோல்வியைக் கண்டுள்ளது என அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், மேலும் படகுகள் வராதிருந்தால், கிரிஸ்மஸ் தீவில் உள்ள இலங்கை உள்ளிட்ட அதிகளின் அந்தஸ்து வழங்கல் குறித்து நடவடிக்கை எடுக்க முடியும் என அகதிகள் பேரவை தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் கடந்த ஜூன் மாதம் ஆஸ்திரேலியாவுக்கு சென்ற இலங்கை அகதிகள் நான்கு பேர் இந்த சட்டத்துக்கு எதிராக உணவுத்தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். மேலும் அவர்களுடன் வந்த மற்றுமொரு அகதி, சுருக்கிட்டு தற்கொலைக்கு முயன்ற நிலையில் காப்பாற்றப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# இம்முறை நாடாளுமன்றத்திற்கு 10 பெண் உறுப்பினர்களே தெரிவு

கொழும்பு, ஏப்.13

புதிய நாடாளுமன்றத்திற்காக பத்து பெண் உறுப்பினர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். குறிப்பாக கடந்த நாடாளுமன்றத்தில் 12 பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர் எனவும், தற்போது அந்த எண்ணிக்கை குறைவடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையில் வெளியிடப்பட்டுள்ள இருபது தேர்தல் மாவட்டங்களுக்கான முடிவுகளின் அடிப்படையில் பத்து பெண் வேட்பாளர்களே வெற்றியீட்டியுள்ளனர்.

ரோஷி சேனாநயக்க, தலதா அத்துகோரள, உபேஷா ஸ்வர்னமாலி, விஜய கலா மகேஸ்வரன், சந்திரானி பண்டார, நிருபமா ராஜபக்ஷ, சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, பவித்ரா வன்னியாராச்சி, சுமேதா ஜயசேன உள்ளிட்ட பத்து பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், இந்த எண்ணிக்கை திருப்தி அளிக்கும் வகையில் அமையப் பெறவில்லை என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக கடந்த நாடாளுமன்றத்தில் 12 பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர் எனவும், தற்போது அந்த எண்ணிக்கை குறைவடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# ஐ.தே.கவில் உயர் பதவிகள் தரப்பட்டால் அவற்றை ஏற்றுக் கொள்வதற்குத் தயார்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.13

கட்சியில் உயர் பதவிகள் வழங்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்ளத் தயார் - என முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் புதல்வர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு பொதுத் தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கூடுதலான விருப்பு வாக்கு சதவீதத்தை வென்ற ஒரே வேட்பாளர் தாமே என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் சஜித் பிரேதாஸ அம்பாந்தோட்டை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி வாக்குகளில் 90 வீதமான வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் பதவியை தாம் எதிர்பார்க்கவில்லை என்ற போதிலும் கூடுதலான பொறுப்புக்களை வகிக்கத் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# சிசுவைக் கொன்று புதைத்த தாயார் மாத்தளையில் கைது

மாத்தளை வரக்கம்புரப் பகுதியில் தாய் ஒருவர் தனது சிசு ஒன்றை கொலைசெய்து புதைத்துள்ள சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதுதொடர்பாக கிடைக்கப்பட்ட தகவலுக்கமைய சந்தேக நபரான தாய் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் கூறினர்.

தாயிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்தே வரக்கம்புரப் பகுதியில் மரம் ஒன்றுக்கு அடியில் சிசு புதைக்கப்பட்டதை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார் எனவும் -

[illegible] சிசுவின் உடலை நீதிமன்ற உத்தரவின்பேரில் தோண்டி எடுக்க எண்ணியுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்கும் சமூகத்திற்கும் பல்வேறு வகைகளிலும் பணியாற்றிய பண்பட்ட கலைஞர் சா.பி.துரையப்பா

யாழ்ப்பாணத்திலே அச்சிடுவதற்கான 'புளொக்', சிற்ப உருவாக்கம் என்பவற்றில் தன் கற்பனையின் துணைகொண்டு கலைவண்ணம் படைத்தவர் அமரர் சலமோன் பிரான்சிஸ் துரையப்பா. இந்தக் கலைஞரின் படைப்புகள் பற்றிய நுட்பத்தையும் வரலாறையும் நமது இளைய சந்ததியினர் அறியும் பொருட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது. அமரர் சலமோன் பிரான்சிஸ் துரையப்பாவின் 104 ஆவது பிறந்த தினம் நாளை என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண நகரத்தின் கரையோரப் பகுதிகளான குருநகர், பாஷையூர், சுண்டிக்குழி, ஈச்சமோட்டை, கொழும்புத்துறை, நாவாந்துறை ஆகியவை கலைஞர் பலரை உருவாக்கி ஈழ அன்னைக்கு அணிசேர்த்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். நாட்டுக்கூத்து, இசைநாடகம், சித்திரம், சிற்பம் என்பவற்றில் இசைபோக்கிய பலர் இவ்விடங்களில் வாழ்ந்தனர், வாழ்க்கின்றனர். நான் அறிந்த வரையில் சித்திரம், சிற்பம் என்பவற்றோடு தம்மை இணைத்து அரிய சாதனைகள் புரிந்த மூவரை நினைவுகூர்வது இவ்விடத்திற் பொருத்தமானதாகும். அமரர்கள் சலமோன் பிரான்சிஸ் துரையப்பா, பெனடிக்ற் (பென்), மாக் ஆகியோரே இம்மூவருமாவார். இவர்களுள்ளும் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதிவரை தமக்கு இணையில்லாத தனியரசராய்க் கோலோச்சிய முன்னோடிக் கலைஞர் சலமோன் பிரான்சிஸ் துரையப்பா அவர்களே.

இவரின் ஆற்றல்கள் இருதுறைகளிலே மிகமுனைப்பாக வெளியிடப்பட்டன. ஒன்று அச்சிடுதற்கான 'புளொக்' (Printing Blocks) அமைப்பு மற்றது சிற்ப (Sculpture) உருவாக்கம். மிக நுட்பமாகவும் துல்லியமாகவும் ஈயத்திலே தகடு வார்த்து, அச்சிடுவதற்கான புளொக்குகள் செய்வது இவரின் தனித்திறமையாக அக்காலத்தில் விளங்கியது. இதற்கு, முதுபெரும் எழுத்தாளரும், மூதறிஞருமான வரதரின் (தி.ச.வரதராசன்) கூற்று தக்க சான்றாகும். அது வருமாறு:

''மறுமலர்ச்சியின் (1946-1948 வரை வெளியான இலக்கிய சஞ்சிகை) மேலட்டை கவர்ச்சிகரமாக இருக்க வேண்டுமென்று விரும்பினேன். 'டிசைன்' வரைவிப்பது, 'புளொக்' செய்விப்பது எல்லாம் தெரியாத வித்தைகள். நாவற்குழியூர் நடராசன், துரையப்பா என்ற கலைஞரை அறிமுகப்படுத்தினார். துரையப்பா ஒரு பிறவிக் கலைஞர். ஏதாவது ஒரு படத்தைக் கொடுத்து அதைப் 'புளொக்' செய்து தரும்படி கேட்டால், தானே ஈயத்தில் தகடுவார்த்து அந்தத் தகட்டில் படத்தை 'காபன்' பிரதி செய்து, பின்னர் சிறுசிறு ஆயுதங்களின் உதவியோடு அருமையான புளொக் செய்து விடுவார். சில நுட்பமான ரேகைகள் கொண்ட படத்தைக் கூட அவர் அச்சொட்டாகப் புளொக் செய்து தந்தது நினைவிருக்கின்றது . (வரதர்-'மறுமலர்ச்சியும் நானும்'- மல்லிகை வெள்ளி விழா மலர், பக்.27)

சொக்கன்

புளொக் செய்வது ஒரு தொழில் நுட்பக்கலை. அதற்கான இயந்திரம் கொண்டு மரப்பலகையிலே குறித்த சித்திரத்தை ஈயப்பிரதி செய்து ஒட்டி புளொக் செய்யும் முறைமை, யாழ்ப்பாணத்தில் அரிதாகவே கைகொள்ளப்பட்ட காலம் அது. அக்காலத்திலே தமது மதிநுட்பத்தைக் கொண்டு 'ஈயப்புளொக்' செய்து அச்சாளர் பலரின் தேவைகளை அமரர் துரையப்பா நிறைவேற்றி வந்தார் என்பது, மிகுதியும் பாராட்டத்தக்கதே. (நல்லூர், திருவள்ளுவர் அச்சகத்தின் முன்னாள் உரிமையாளர் அமரர் செல்லையா தங்கராஜாவும் இத்தகைய புளொக்குகளை தமது அச்சகத் தேவைக்காக, அவ்வப்போது செய்ததை நான் நேரில் கண்டிருக்கின்றேன்.)

'புளொக்' அமைக்கும் கலைக்குத் துரையப்பாவின் சித்திரத்திறன் உதவியது. அதேதிறன் கொண்டு சிற்பம் செதுக்கும் ஆற்றலையும் அவர் வளர்த்துக் கொண்டார். சிறந்த கத்தோலிக்கராய் விளங்கிய அவர் யாழ், புனித சூசையப்பர் அச்சகத்தில் நீண்டகாலம் பணியாற்றியதோடு கிளாலிப்பதியில் புனித வியாகுல மாதாவின் சிலையினை உருவாக்கியும் உதவியுள்ளார்,

இந்தச் சிலை உருவான வரலாறு மிகவும் சுவையானது, புனிதமானது, மகத்தானது.

''கலைஞன் துரையப்பாவின் மூத்த புத்திரனும், ஞானதிருஷ்டி வைத்தியரும், இளங்கலைஞனும், புனித வியாகுல மாதாவின் ஊழியருமான பிரான்சிஸ் மைக்கல் புனித வியாகுல அன்னையின் மேல் அளவிறந்த பக்தி கொண்டவர். அன்னை மரியின் அற்புத தரிசனத்தாலும், ஏவுதலினாலும் அன்புத் தந்தை கலைஞர் துரையப்பாவிடம் புனித வியாகுல மாதாவின் சிலையை உருவாக்கித் தரும்படி உருக்கமாக வேண்டினார். மகனின் அன்பின் வேண்டு கோளுக்கு இணங்க 40 நாள்கள் உபவாசம் இருந்து அவரின் கடைசிச்சிலையான புனித வியாகுல மாதா சிலையை இற்றைக்கு 40 வருடத்திற்கு முன் உருவாக்கினார். அதனைத் தொடர்ந்து பிரான்சிஸ் மைக்கலின் அயராத முயற்சியினாலும், தியாகத்தினாலும் கிளாலிப் பதியில் அமரர் வண.A.S. சிங்கராயர் O.M.I சுவாமியினால் புனித வியாகுல மாதா சிலை ஆசீர் வதிக்கப்பட்டு 1961.04.28 இல் புனித வியாகுல மாதா செபக்கூடம் உருவாக்கப்பட்டது. கலைஞர் துரையப்பாவிற்கு ஆன்ம சாந்தி பெற நினைவுச்சின்னமாக இச்சிலை மிளிர்வதோடு அமைதியான கிளாலியில் இருந்து அருள்மிகு புனித வியாகுல அன்னையின் நேரடி அற்புதங்கள் அனைவருக்கும் கிடைக்க வழிவகுக் கப்பட்டது. வருடாவருடம் பெரிய வெள் ளிக்கிழமை அங்கு பங்குறும் பக்தர்கள் கூட்டமே இதற்கு தகுந்த சான்று பகரும்''. (சுத்துரு சங்கார மாலை: கலைஞர், அமரர் சலமோன் பிரான்சிஸ் துரையப்பா அவர்களுக்குச் சமர்ப்பணம். பக்கம்-5)

இறையியல் சார்ந்த சிற்பக்கலை, இந்து சமயத்திற் போலவே கிறிஸ்தவ சமயத்திலும் புனிதமான ஒன்றாகப் பேணப்பட்டது என்பதும், அந்தக் கலைப்பரம்பரையில் வந்த ஒருவர் 40 நாள் உபவாசம் இருந்து மிகுந்த பக்தி சிரத்தையுடன் அருள்மிகு வியாகுல மாதாவை உருவாக்கினார் என்பது வியப்புக்குரியன அல்ல என்றே சொல்லத்தோன்றுகின்றது. அமரர் துரையப்பா தமது கலைத்திறத்தினை இறை சமர்ப்பணம் ஆக்கியமையை நினைக்கையில், அவருக்கு மதிப்பை மட்டு மல்ல அஞ்சலியையும் செலுத்தியே ஆகவேண்டும்.

யாழ்.புனித வளன் கத்தோலிக்க அச்சுக்கூடத்தில் கலைஞர் ச.பி.துரையப்பா பல வருடங்கள் புளொக் மேக்கராக சிறப்புப் பணியாற்றிபின், சில வருடங்கள் தெல்லிப்பழை அமெரிக்கன் மிஷன் அச்சகத்தில் மனேஜராக திருமிகு I.P துரைரட்ணம் M.A காலப்பகுதியில் கலைஞர் துரையப்பா சீரும் சிறப்புமாக புளொக் மேக்கராகப் பணிபுரிந்தார். அங்கும் அவர் புகழாரம் பெற்றார்.

1940களில் கலைஞர் துரையப்பா யாழ்.சுண்டிக்குழி இல.11, கோயில் வீதியில் உள்ள யாக்கோப்பு மனையில் (Jacob House) தனிப்பட்ட 'லங்கா ஆட்டிஸ்ரிக் வேக்ஸ்' (Lanka Artistic works) என்ற தொழிலகத்தை நிறுவினார். இவர் இதன் உரிமையாளரும், இயக்குநருமாக இருந்தும் கூட தானும் ஒரு தொழிலாளியாகவும் இருந்து பலருக்கு கைத்தொழில் வேலைகள் அளித்தார். இவரது தொழிலகத்தைப் பற்றிச் சுருக்கமாகக் கூறின் அச்சுக்கூட புளொக் வேலைகள், சகல விதமான கைநுட்ப சித்திர வேலைப்பாடுகள், பூமாலைகள், சோடினைகள் கோயில்களுக்கு வாடகைக்கு கொடுத்தல், தச்சுப்பட்டறை முதலிய இங்கு நடைபெற்றன. இலங்கையின் பல பாகங்களிலும் சிறப்பாக யாழ்.குடாநாட்டிலும் கலை சம்பந்தமான சித்திர வேலைகள் இவரினால் அபரிதமாக கிடைக்கப் பெற்றன. இவரது கலைநுட்ப வேலைகளுக்காக பலபரிசுகளும், பதக்கங்களும் பெற்றார். 'ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம்' போல இங்கு சில வற்றைக் குறிப்பிடுகின்றேன்.

1938இல் அகில இலங்கைக் கைத்தொழில் சமாசத்தின் களியாட்ட காணிவல் விழாவின்போது, யாழ்.சம்பத்திரிசியார் கல்லூரியின் அந்நாள் அதிபர் அதி.வணக்கத்துக்குரிய பிதா.ரி.எம். எவ்.லோங் O.M.I, M.A. தலைமையிலே கலைஞர் துரையப்பாவிற்கு, (Solomon Francis Thuriappa) அவரது நிழற்பட புளொக் (Photo Graphic Blocks) அமைக்கும் திறமையைப் பாராட்டி வெள்ளிப் பதக்கமும் சான்றிதழும் வழங்கப்பட்டமை சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும். இவ்விழாக் குழுவிலே அந்நாள் யாழ். அரசாங்க அதிபர் ஹட்சன், யாழ்ப்பாண நகரசபைத் தலைவர் அமரர் R.R. நல்லையா, சுகாதாரப் பேராசான் C.W.D அல்வீனஸ் ஆகியோர் அங்கம் வகித்தமையும் சிறப்பித்துக் கூற வேண்டியதே.

'' கலைஞர் ச.பி.துரையப்பா கலைக்கு மட்டுமன்றி சமூகத்திற்கும் பல்வேறு வகைகளில் பணியாற்றிய பண்பாளர். ஏழைகளின் தோழர், கலைச் சிற்பி, இலை மறை காய் போல வாழ்தவர். பலரது இழப்பு அவர்களது குடும்பம் என்ற சிறிய வட்டத்தை மட்டுமே பாதிக்கும். இவரது இழப்பு குடும்பம் என்ற எல்லையைக் கடந்து நிற்கும். தம்மோடு பழகிய வரையும் தன்னை அறிந்தவரையும் ஒவ்வொரு செயலிலும் சிந்தையிலும் தன்னை நினைக்கும்படியாக மறைந்தும் மறையாத கலைஞர் (கலைப் பிரியர்- ஈழநாடு 1984.03.18).



"கலைஞர் ச.பி.துரையப்பா அவர்களின் வண்ணமிகு அலங்கார வேலைப்பாடுகளால் சுண்டுக்குழி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயம் அவ்வப்போது அலங்கரிக்கப்பட்டு மெருகூட்டப்பட்டது. ஆசீர்வதிக்கிற ''சஞ்சுவாம்'' மரச்சிலை இவரினால் உருவாக்கப்பட்டது -இன்றும் இவரது கலைப்படைப்புக்குச் சான்றாகத் திகழ்கிறது'' (யாழ். சுண்டிக்குழி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய நூற்றாண்டு மலர் பக்.26).

*தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்''*

என்ற வள்ளுவர் வாய் மொழிக்கு நிதர்சன சாட்சியாக, ஆன்மிகமும், சமூகநேயமும் நிறைந்தவராய் அமரர் தம் மைந்தர் துரை ஆரோக்கியதாசன் (முன்னாள் துணை அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை) விளங்குகின்றார் என்பது மகிழ்ச்சி தருவதாகும்.


*வாழ்க அமரர் சலமோன் பிரான்சிஸ் துரையப்பா அவர்களின் கலைஞான பரம்பரை!-*

*நன்றி: (யாழ்.மாநகராட்சிமன்றம் வெளியீடான ''பொன்விழாமலர்'' சிறப்பு இதழிலிருந்து)*

தந்துதவியவர்:
துரை. ஆரோக்கியதாசன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரைப் புத்தாண்டு வியாபாரம் யாழ்.நகரில் களைகட்டியுள்ளது. நகருக்கு வரும் பொதுமக்கள் புத்தாண்டுக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டுள்ளதைப் படங்களில் காணலாம். (படம் : நந்தன்)

# புதிதாக அனுமதிக்கப்பட்ட இடங்களுக்குச் செல்ல இராணுவ அனுமதி பெற்றுக் கொள்வது அவசியம்

யாழ்ப்பாணம்,ஏப்.13

யாழ். மாவட்டத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்ட தமது சொந்த இடங்களுக்குச் செல்ல விரும்புபவர்கள் இர்ராணுவத்தினரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக யாழ். மாவட்டத்தில் அனுமதிக்கப்படாத பல பாதைகள் திறந்து விடப்படுகின்றன. இவ்வாறு புதிதாக அனுமதிக்கபட்ட இடங்களில் இருக்கும் சொத்துக்களின் சொந்தக்காரர்கள் தமது நிரந்தர இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டுமென இராணுவத்தினர் அறிவித்துள்ளதாகவும் அவ்வாறான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமெனவும் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமது சொத்துக்குரிய உரிமையினை நிரூபிப்பதற்கான சட்டபூர்வ ஆவணங்களைச் சம்பந்தப்பட்ட பிரிவின் கிராம அலுவலரிடம் சமர்ப்பித்து அவரது சிபாரிசுடன் பிரிவு பிரதேச செயலர் அல்லது உதவி அரசாங்க அதிபரின் மேலொப்பத்தைப் பெற்று நேரடியாக தத்தமது பிரிவு இராணுவ சிவில் நிர்வாகப்பிரிவில் ஒப்படைக்க வேண்டும்.

தற்போது யாழ். மாவட்டத்தில் நிரந்தரமாக வதியாது வெளியிடங்களில் குடியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களும் தமது சொத்துக்களை மீளவும் பெற்றுக் கொள்வது சம்பந்தமாக மேற்கூறிய நடை முறையைப் பின்பற்ற வேண்டும் என்று அதிகாரிகளின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கரவெட்டி பிரதேச செயலகத்தில் அறநெறிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.13

கரவெட்டி பிரதேச செயலகத்தினால் அறநெறிக் கருத்தரங்கொன்று நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் ஆரம்பமாகவிருக்கும் இந்த நிகழ்வுக்கு கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமை வகிப்பார்.

இதில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், அதிபர் ஆ.சிவநாதன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கவிருக்கின்றார்கள்.

நன்றி உரையை கலாசார உத்தியோகத்தர் செல்வி செல்வசுகுணா ஆற்றுவார். (க)

## அதிகரித்த வாகனப் போக்குவரத்தால் தொலைபேசி இணைப்பு வயர்களுக்குச் சேதம்



யாழ்ப்பாணம்,ஏப்.13

வாகனங்கள் முட்டுவதால் தொலைபேசி இணைப்பு வயர்கள் அறுந்துவிழும் சம்பவங்கள் யாழ்.நகரில் அதிகரித்துள்ளன.

முக்கியமாக கே.கே.எஸ்.வீதி, நாவலர் வீதி, முற்றவெளிப் பகுதிகளில் தொலைபேசி இணைப்பு வயர்களின் அதிகரித்த சுமை காரணமாகவும், வாகனங்கள் தொலைபேசிக் கம்பங்களில் மோதி அவை சரிந்த நிலையில் உள்ளதாலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அதிகரித்த வாகனப் போக்குவரத்தும், அதிக கனரக வாகனங்களின் வருகையும் இதற்கு முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றன. (க-224)

## யாழ். நகரில் நேற்று முன்தினம் சைக்கிள் திருடன் வசமாக மாட்டினான்

யாழ்ப்பாணம்,ஏப்.13

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட நபரொருவர் பொதுமக்களால்கையும் களவுமாக பிடிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் நவீன சந்தைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த பெண்கள் பாவிக்கும் புதிய சைக்கிளொன்றை நபரொருவர் கள்ளத் திறப்பு போட்டு திறக்க முற்பட்டபோது, இதை அவதானித்த நடைபாதை வியாபாரி ஒருவர் உடனடியாகச் செயற்பட்டு அவரைப்பிடித்ததுடன் திருடன் என சத்தமிட்டுள்ளார்.

இதனைக் கேட்ட ஏனைய பொது மக்களும் அங்கு கூடி திருடனைப் பிடித்ததுடன் அவரிடமிருந்து பல சைக்கிள் திறப்புக்களையும் மீட்டுள்ளார்கள்.

இதையறிந்து வீதிக் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸார் விரைந்து வந்து அந்த நபரைப் பொறுப்பேற்று பொலிஸ் நிலயத்துக்கு கொண்டு சென்றனர்.

இவருடன் வந்த வேறு இரு நபர்களை பொதுமக்கள் பிடிக்க முற்பட்டபோதும் அவர்கள் தப்பியோடி விட்டதாகத் தெரிய வருகின்றது. (க-86)

## மட்டுவில் கண்ணகி அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் நிறைவு உற்சவம்

கோப்பாய்,ஏப்.13

மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகி அம்பாளின் பங்குனித்திங்கள் உற்சவ நிறைவுவிழா நேற்றுத் திங்கட்கிழமை பக்திபூர்வமாக இடம் பெற்றது.

இந்த நிகழ்வுகளில் குடாநாட்டின் பலபாகங்களிலிருந்தும் பக்தர்கள் கலந்து கொண்டு தமது வழிபாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

நேற்று செடில் காவடி, துலாக்காவடி, மற்றும் கற்பூரச்சட்டி எடுத்தல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகளில் சுமார் 10-12 வயது மதிக்கத்தக்க சிறுமியொருத்தி செடில் காவடி எடுத்து வந்தது பக்தர்களை மெய்சிலிர்க்கவைத்தது குறிப்பிடத்தக்கது. (50-72)




## மார்ச் மாதத்துக்கான உலருணவு நிவாரண விநியோகம் ஆரம்பமானது

யாழ்ப்பாணம்,ஏப்.13

குடா நாட்டில் 11.08.2006 ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெயர்ந்தவர்களுக்கான மார்ச் மாதத்துக்கான இலவச உலருணவு நிவாரண விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு நாட்டரிசி, மா, சீனி, பருப்பு போன்ற பொருள்கள் நிவாரணத்துக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிவாரணத்திற்கு விநியோகிக்கப்படும் பொருள்களின் அளவு விவரங்கள் வருமாறு-

| | | 1 அங்கத்தவர் | | 2 அங்கத்தவர் | | 3அங்கத்தவர் | | 4அங்கத்தவர் | | 5அங்கத்தவர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொருள் | விலை (ரூபா) | அளவு (கிலோ) | பெறுமதி (ரூபா) | அளவு (கிலோ) | பெறுமதி (ரூபா) | அளவு (கிலோ) | பெறுமதி (ரூபா) | அளவு (கிலோ) | பெறுமதி (ரூபா) | அளவு (கிலோ) | பெறுமதி (ரூபா) |
| சிவப்பு நாட்டரிசி | 58.60 | 2.375 | 139.18 | 5.025 | 294.47 | 6.550 | 383.83 | 7.775 | 455.62 | 10.375 | 607.98 |
| கோதுமை மா | 49.78 | 1.500 | 74.67 | 2.000 | 99.56 | 4.000 | 199.12 | 5.000 | 248.90 | 5.500 | 273.79 |
| சீனி | 93.90 | 1.000 | 93.90 | 2.000 | 187.80 | 2.300 | 215.97 | 2.500 | 234.75 | 3.000 | 281.70 |
| பருப்பு | 136.50 | 0.200 | 27.30 | 0.250 | 34.13 | 0.300 | 40.95 | 0.500 | 68.25 | 0.700 | 95.55 |

## பஸ் மிதிபலகையில் பயணம் செய்தவர் தூக்கி வீசப்பட்டுப் படுகாயமடைந்தார்

வலி.வடக்கு,ஏப்.13

மிதிபலகையில் நின்று பயணம் செய்த அரச ஊழியர் ஒருவர் பஸ் திரும்பிய வேளையில் வெளியே தூக்கி எறியப்பட்டு படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் இருந்து கிளிநொச்சிக்குச் சென்ற பஸ்ஸில் சென்ற அரச ஊழியர் ஒருவரே பஸ்ஸில் இருந்து வீழ்ந்து காயமடைந்தராவார்.

கிளிநொச்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் க.அரவிந்தன் என்பவரே பஸ்ஸில் இருந்து விழுந்து காயமடைந்தவராவார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி சென்ற பஸ் இயக்கச்சி சந்தியில் திரும்பிய வேளையில் மிதிபலகையில் நின்ற அரச ஊழியர் தூக்கி வீசப்பட்டுப் படுகாயமடைந்தார். அவர் உடனடியாகப் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார். (50-86)

## ஆலயக் கொடியேற்றதினத்தில் நகைகள், சைக்கிள்கள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.13

நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்த கொடியேற்ற தினத்தில் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாக தெரியவந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை காலையில் இந்த ஆலயத்தில் நடைபெற்ற கொடியேற்ற வைபவத்தில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு நெருக்கமாக நின்ற சமயம், பெண் ஒருவரின் தங்கச்சங்கிலியை திருடர்கள் அறுத்துச் சென்றுள்ளனர். மேலும் கோயில் சுற்றாடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு சைக்கிள்கள் களவு போயுள்ளன.

திருவிழா ஆரம்பமான தினத்தன்றே இந்தத் திருட்டுச் சம்பவங்கள் நடை பெற்றிருப்பதால் ஆலயத்திற்கு வருகைதரும் பக்தர்கள் தங்க நகைகள் அணிவதைத் தவிர்க்குமாறும் தமது மிதிவண்டிகளுக்கு மேலதிக பூட்டு இடுமாறும் ஆலய நிர்வாகிகள் அறிவுறுத்தியுள்ளனர். (க-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறைசார் ஆற்றல் உள்ள விழா நாயகனின் பணிகள் ஏதோ ஒரு வகையில் பயன் தருபவையே

## மணிவிழாவில் பாராட்டு

யாழ்ப்பாணம், ஏப்.13

அன்பு, அடக்கம், பணிவு, கருணை இத்தனையும் இணைந்தவர் வில்லிசைக் கலைஞர் இராசையா ஸ்ரீதரன். இவர் ஓர் ஆன்மீக எழுத்தாளர். அவரது உருவத் தோற்றமே ஆன்மீகம் நிறைந்தது.

அத்தியடிப் பிள்ளையார் கோயிலில் நடைபெற்ற சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரனின் மணிவிழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கிய முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''வில்லிசைச் செல்வர்'' என்ற பட்டமளித்துத் தங்கப் பதக்கம் சூட்டிப் பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து வாழ்த்திய அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

விரதங்களையும், விழாக்களையும், பண்டிகைகளையும், குருபூசைகளையும், பெரியோர்களையும் தமது எழுத்தாற்றல் மூலம் வெளிப்படுத்தி பத்திரிகை மூலமாக நினைவூட்டுகின்ற இராசையா ஸ்ரீதரன் வில்லிசை மூலம் தானும் சிரித்து மக்களையும் சிரிக்க வைக்கும் தன்மையில் ''வில்லிசைச் செல்வர்'' என்ற விருது அவருக்கு வழங்கிச் சிறப்பளிப்பது பொருத்தமானதும் பாராட்டப்பட வேண்டியதும்என்றார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் செ.திருநாவுக்கரசு தமது பாராட்டுரையில் - மக்கள் மனதில் ஆன்மீகச் சிந்தனை களை விதைத்து நல்லெண்ணங்களை உருவாக்கி அவர்களின் நல் வாழ்வுக்கு உறுதுணையான செயற்பாடுகளை முன்னெடுத்துப் பணி செய்கின்ற இராசையா ஸ்ரீதரன் ஓர் சிறந்த கலைஞர். அவர் ஆற்றுகின்ற ஒவ்வொரு செயலும் ஏதோ ஒரு வழியில் நன்மை பயக்கக் கூடியதான கட்டமைப்பைக் கொண்டதாக இருக்கும். அவரது பணி சிறக்க அவரைப் பாராட்டிப்பட்டமளிப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று- என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பராமாச்சாரி சுவாமிகள் மற்றும் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதன், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ப.கணேசலிங்கம் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர். (அ-16)

# நெடுந்தீவு பாலத்தின் விஸ்தரிப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதி ரத்தானது

யாழ்ப்பாணம்,ஏப்.13

நெடுந்தீவு துறைமுகப் பால விஸ்தரிப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

பாலத்தின் விஸ்தரிப்பு மற்றும் புதிய படகுக் கொள்வனவு என்பனவற்றிற்காக 300 மில்லியன் ரூபா நிதி ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் இந்தப் பாலத்தைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் தற்போது பால விஸ் தரிப்புக்காக ஒதுக்கப்பட்ட 150 மில்லியன் நிதி ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. (50-111)


## காணி விற்பனைக்குண்டு

கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு (200 M) மிக அண்மையில் வீதியோரமாக 9 பரப்புத் தென்னங்காணி (கிணற்றுடன்) உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : சி. பத்மநாதன்,
கல்லூரி ஒழுங்கை,
சங்கத்தானை.
0773161675

(சி/566535)

## யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி க.பொ.த. உ/த அனுமதி (2012)

நலமே

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் 2012 க.பொ.த. (உ/த) வகுப்பு அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று 30.04.2010 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

(சி/566536) அதிபர்.

## தவறிவிட்டன

கோண்டாவில் வடக்கு, கோகுல வீதியைச் சேர்ந்த திருமதி இராஜேந்திரன் குமுதினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (688221200V), சாரதி அனுமதிப் பத்திரம், முக்கிய ஆவணங்கள், கையடக்கத் தொலைபேசி என்பன கொண்ட கைப்பை யாழ். ஆரியகுளம் சந்திக்கும் கோண்டாவில் பஸ் டிப்போவுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும். (சன்மானம் வழங்கப்படும்)

திருமதி குமுதினி இராஜேந்திரன்
C/0 : M.அமுதலிங்கம்
கோகுலவீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
தொ.பே: 0789118687

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளைப்பெற்ற எமது கௌரவ அமைச்சர் **கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களைப் பாராட்டி அவர்களது சேவை மேன்மேலும் வளர வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
மானிப்பாய்.

(சி/566530)


## அலங்கார உற்சவம்

கொழும்புத்துறை,ஏப்.13

கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீமகா முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு அலங்கார அபிஷேக விழாவுடன் ஆரம்பமாகிறது.

இம்மாதம் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெற்று வீதியுலா இடம்பெறும். (ஒ-135)

## மாற்று வலுவுள்ளோருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கைதடி, ஏப். 13

சமூக சேவைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாற்று வலுவுள்ளோருக்கான கணனிப்பயிற்சி நெறியில் பங்குபற்றிய மாற்று வலுவுள்ளோருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதி கைதடி அரச முதியோர் இல்லத்தில் மு.ப. 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறைத் திணைக்களத்தின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் ஜே.எஸ். அருள்ராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கவுள்ளார். (ஒ-288)

## மாதாந்த ஒன்றுகூடல்

கைதடி, ஏப். 13

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் சமூகசேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்லத்தில் மாவட்ட சமூக சேவை அலுவலர் ஆ. ஞானவேல் தலைமையில் நடைபெறும். (ஒ-288)


## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**சோமசுந்தரம் குலேந்திரம்**

திதி : அபரபட்ச சதுர்த்தசி

எம் குடும்பத்தின் ஒளி விளக்கே நீர் மறைந்து ஆண்டுகள் ஏழுதான் சென்றாலும் உன் நினைவுகள் நெஞ்சைவிட்டு அகலாதையா.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
இணுவில் தெற்கு. பேரப்பிள்ளைகள்.

## புறொயிலர் கோழி தேவை

புறொயிலர் கோழி தேவை. கூடிய விலை
61, இராமநாதன் வீதி, கலட்டி. தொ.பே.: 021 7912783

## வலி.கிழக்கு பிரதேச சபை, புத்தூர் கேள்வி அறிவித்தல் - 2010

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைக்கு இக்ராட் M9, C8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கு பதிவு செய்யப்பட்ட வற்வரி செலுத்தும் ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 20.04.2010 - 29.04.2010 மு.ப. 11 மணிவரை
கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 29.04.2010 நண்பகல் 12 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 29.04.2010 பி.ப. 2 மணி
(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும்போது கேள்விப்பத்திரதாரரும் சமுகமளிக்கலாம்)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை ''செயலாளர், வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்'' என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கும் எதிர்வரும் 29.04.2010 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

குறிப்பு : கீழ்க்குறிப்பிடப்பட்ட வீதி வேலைக்குரிய தார் பிரதேச சபையால் வழங்கப்படும்.

| வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரப்பணம் | வரி வற் 12 % NBT 3% |
|---|---|---|---|
| 01. அச்சுவேலி ஜோன் ராஜா வீதித் திருத்தம். | 7950.00 | 1000.00 | 153.60 |
| 02. அச்சுவேலி சந்தைக் கடைகள் திருத்தம். | 1950.00 | 1000.00 | 153.60 |
| 03. புத்தூர் அலுவலக வாகன தரிப்பிடம் அமைத்தல் களஞ்சிய பகுதி திருத்தம் | 4275.00 | 1000.00 | 153.60 |

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வலி.கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
புத்தூர்.
12.04.2010

தம்பையா நடராசா
(செயலாளர்).

(சி/566531)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இலட்சுமி சுப்பிரமணியம்



யாழ். நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் M.C சுப்பிரமணியத்தின் பாரியார் திருமதி இலட்சுமி சுப்பிரமணியம் 11.04.2010 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் சந்திரபோஸ், நிர்மலாதேவி, சந்திரதாஸ், ரவீந்திரதாஸ், கலாதேவி, ஜெயந்தி, ராகுலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 15.04.2010 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு இடம்பெற்று பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு :
011 2515983,
077 8460275

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/566802)

### முத்தையா பரமசிவம்



தாவடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முத்தையா பரமசிவம் நேற்று (12.04.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - கண்மணி தம்பதியரின் மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் சதீபன், தர்மசீலன் (ஆசிரியர், கிளி/கனகபுரம் ம.வி., கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கஸ்தூரியின் அன்பு மாமனாரும் ஜனோசா, வினோஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் நடராசா, வேலாயுதம், மனோன்மணி, காலஞ்சென்ற சொர்ணாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.04.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் லேன்,
ஐந்துவேம்படி,
தாவடி தெற்கு, கொக்குவில். (96926)

தகவல்:
குடும்பத்தினர்
ப.சதீபன், ப.தர்மசீலன்
(மகன்மார்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ரஷ்யாவில் சனியன்று கோரமாக நடந்த

# விமான விபத்திற்கு விமானியே காரணமாம்; தேடுதலில் கறுப்புப்பெட்டி கண்டுபிடிப்பு

மாஸ்கோ, ஏப். 13

போலந்து ஜனாதிபதி லெக் கெச்சின்சிகி விமான விபத்தில் பலியானதால், அந்நாட்டில் ஒருவார காலம் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. விமான விபத்திற்கு விமானியின் தவறே காரணம் என்று கூறப்படுகிறது. மேலும் முக்கிய தகவல்களை உள்ளடக்கிய கறுப்புப் பெட்டி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாம் உலகப் போரின்போது, ரஷ்யாவில் 22 ஆயிரம் போலந்து சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இவர்களின் 70 ஆவது நினைவு தினம் ரஷ்யாவின் கதின் நகரில் சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக போலந்து ஜனாதிபதி லெக் கெச்சின்சிகி (வயது - 60) தனது மனைவி மரியா, இராணுவத் தளபதி, மத்திய வங்கித் தலைவர், போலந்து அரசின் முக்கிய அதிகாரிகள் உள்ளிட்டோருடன் சனிக்கிழமை விமானத்தில் ரஷ்யா புறப்பட்டார்.

ரஷ்யாவின் ஸ்மோலென்ஸ்க் விமான நிலையத்தில் இந்த விமானம் தரை இறங்க முயற்சித்தது. அப்போது விமானத்தின் விமானியுடன் தொடர்புகொண்ட விமான நிலையக் கட்டுப்பாட்டு அதிகாரிகள், ''ஸ்மோலென்ஸ்க் விமான நிலையத்தில் கடும் பனி மூட்டம் உள்ளது. இங்கு விமானத்தை தரை இறக்குவது ஆபத்தை ஏற்படுத்தும். இதனால் மாஸ்கோ உள்ளிட்ட வேறு விமான நிலையங்களில் விமானத்தை தரை இறக்கவும்'' என எச்சரித்தனர்.

இந்த எச்சரிக்கையை விமானி பொருட்படுத்தவில்லை. கடும் பனி மூட்டத்துக்கு இடையே விமானத்தை அங்கு தரையிறக்க முற்பட்டார். ஆனால், விமானம் விமான நிலையத்தில் தரையிறங்குவதற்குப் பதிலாக அருகிலுள்ள வனப்பகுதியில் இறங்கியது.

அப்போது மரக்கிளைகளில் பலமாக மோதி தீப்பிடித்து பல துண்டுகளாகச் சிதறியது. இதில் விமானத்திலிருந்த ஜனாதிபதி லெக் கெச்சின்சிகி உட்பட 132 பேரும் பலியாயினர். இந்த விபத்துக்கு விமானியே காரணம் எனக் கூறப்படுகிறது.

இதற்கிடையே போலந்து ஜனாதிபதியின் மறைவுக்காக அந்நாட்டில் ஒருவார கால துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. ஜனாதிபதியின் மாளிகை வாசலில் ஏராளமானோர் மலர் கொத்துக்களை வைத்தும், மெழுகுவர்த்தி ஏற்றியும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

விமான விபத்துக்குள்ளான பகுதியிலிருந்து விமானத்தின் கறுப்புப் பெட்டி கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விபத்துக்கான முழு விவரங்களை ரஷ்ய அதிகாரிகள் ஆய்வுசெய்து வருகின்றனர். விபத்தில் முதலில் ஜனாதிபதியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டு போலந்துக்கு அனுப்பப்பட்டது.

போலந்து ஜனாதிபதி மறைந்ததைத் தொடர்ந்து நாட்டு மக்கள் சோகத்தில் மூழ்கியுள்ளனர். ஜனாதிபதியின் மறைவுக்கு துக்கம் அனுசரிக்க போலந்து தலைநகரான வார்சா நகரத் தெருக்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியவண்ணம் உள்ளனர். பின்னர் அவர்கள் போலந்து ஜனாதிபதியின் அரண்மனை முன்பு கூடினர்.

அரண்மனை முன்பு மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்து அவர்கள் அஞ்சலி செலுத்தினர். மலர்களையும், மலர்வளையங்களையும் அவர்கள் வைத்து தங்கள் தலைவருக்குத் தங்களது மரியாதையைச் செலுத்தினர்.

ஜனாதிபதியின் மறைவுக்குப் போலந்தில் ஒருவார துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. மறைந்த ஜனாதிபதிக்கு ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நாடு முழுவதும் ஒரு நிமிட நேரம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இச்சம்பவம் நடந்தது தொடர்பாக விசாரணை நடத்துமாறு ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ளார். பனிமூட்டம் காரணமாக விமானம் தாழ்வாகப் பறந்து வருகிறது என்று போலந்து விமானிகளுக்கு ரஷ்ய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஆனால், அதை போலந்து விமானிகள் பொருட்படுத்தவில்லை. இதனால்தான் விபத்து நடந்துள்ளது என்று பூர்வாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பாக். ஜனாதிபதியின் கறுப்புப் பணம்: விசாரிக்க சுவிற்ஸர்லாந்து மறுப்பு

இஸ்லாமாபாத், ஏப். 13

பாகிஸ்தான் ஜனாதிபதி மீதான ஊழல் வழக்கை விசாரிக்க முடியாது என சுவிஸ் சர்லாந்து தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் பிரதமராக பெனாஸிர் பூட்டோ இருந்தபோது அவரது கணவரும், தற்போதைய ஜனாதிபதியுமான அஷிப் அலி சர்தாரி, 900 கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் செய்துள்ளார் என்றும் அதை சுவிஸ் வங்கியில் போட்டு வைத்துள்ளார் என்றும் நவாஸ் ஷெரிப் பிரதமராக இருந்தபோது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

பாகிஸ்தான் ஜனாதிபதியாக முஷாரப் இருந்தபோது பாகிஸ்தான் மக்கள் கட்சியின் ஆதரவு தேவைப்பட்டதால் பெனாஸிர் மீதும், சர்தாரி மீதும் தொடரப்பட்டிருந்த ஊழல் வழக்குகளை தள்ளுபடி செய்யும் அவசரச்சட்டம் கொண்டு வந்தார்.

இதேபோல ஆயிரக்கணக்கான ஊழல் வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. இந்த அவசரச்சட்டம் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறாததால் காலாவதியாகி விட்டது. இதையடுத்து, ஜனாதிபதி சர்தாரி உள்ளிட்டவர்கள் மீதான அனைத்து ஊழல் வழக்குகளையும் மீண்டும் விசாரிக்கும்படி பாகிஸ்தான் ஊழல் தடுப்பு அமைப்புக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் அமைச்சர்களாக உள்ளனர். அதனால், சர்தாரி மீதான ஊழல் வழக்கை விசாரிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இதனால் கோபமடைந்த பாகிஸ்தான் தலைமை நீதிபதி இப்திகார் அலி சவுத்ரி, ஜனாதிபதி மீதான ஊழல் வழக்குகளை 5 ஆம் திகதிக்குள் மீண்டும் விசாரிக்கவேண்டும் என உத்தரவிட்டார்.

இதையடுத்து, பாகிஸ்தான் ஊழல் தடுப்பு அமைப்பு சுவிற்சர்லாந்து அரசுக்கு சர்தாரி வழக்கை மீண்டும் விசாரிக்கும்படி கோரி கடிதம் அனுப்பியது. இது குறித்து சுவிற்சர்லாந்து அட்டர்னி ஜெனரல் டேனியல் ஜப்பேலி குறிப்பிடுகையில், ''சர்தாரி மீதான ஊழல் வழக்கை முடித்து விடும்படி 2008 ஆம் ஆண்டு முஷாரப் அரசு முறைப்படி கடிதம் அனுப்பியது. இதையடுத்து, இந்த வழக்கை முடித்து விட்டோம்'' எனத் தெரிவித்துள்ளார்.

''தற்போது பாகிஸ்தான் ஊழல் தடுப்பு அமைப்பிடமிருந்து ஒரு கடிதம் வந்துள்ளது. சர்தாரி வழக்கை மீண்டும் விசாரிக்கும்படி அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்தாரி மீதான ஊழல் வழக்கு பாகிஸ்தான் நீதிமன்றத்திலேயே நிரூபிக்கப்படவில்லை. அப்படி இருக்கும்போது நாங்கள் எப்படி இந்த வழக்கை எடுத்து நடத்த முடியும். அதுமட்டுமல்லாது, ஒரு நாட்டின் ஜனாதிபதியாக உள்ளவரிடம் நாங்கள் விசாரிக்க முடியாது. எனவே, சர்தாரி மீதான வழக்கை மீண்டும் விசாரிக்க இயலாது'' என்றும் அவர் ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

### மைக்கல் ஜக்ஸன் மரண வழக்கில் முன்னாள் மனைவியர் சாட்சியம்

பொப் பாடகர் மைக்கல் ஜக்ஸன் திடீர் மரணம் தொடர்பாக அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கில், ஜக்ஸனின் முன்னாள் மனைவிமார் சாட்சியம் அளிக்க உள்ளனர்.

பொப் இசை உலகில் முடிசூடா மன்னராக திகழ்ந்த மைக்கல் ஜக்ஸன் கடந்த ஆண்டு ஜூன் 25 ஆம் திகதி திடீரென மரணம் அடைந்தார்.

இது தொடர்பாக ஜக்ஸனின் தனி டாக்டராக இருந்த கன்ராட் முரே மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் மைக்கல் ஜக்ஸனின் முன்னாள் மனைவிகளான டெப்பி ரோவோ, லிசா மேரி பிரஸ்லி ஆகியோர் சாட்சியம் அளிக்க உள்ளனர்.

# இஸ்ரேல் பிரதமர் அலுவலகத்தில் தீ விபத்து; உயிர்ச் சேதமில்லை

ஜெருசலம், ஏப். 13

இஸ்ரேல் பிரதமர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை தீ விபத்து ஏற்பட்டது. எனினும், இந்த விபத்தில் உயிர்ச்சேதம் ஏதும் இல்லை. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு. இவரது அலுவலகக் கட்டடம் தலைநகர் ஜெருசலத்தில் உள்ளது.

இந்த அலுவலகக் கட்டடத்தின் கீழ் பகுதியில் மின் கோளாறு காரணமாக ஞாயிற்றுக்கிழமை தீ விபத்து ஏற்பட்டது. இதனால் இந்தக் கட்டடத்தின் சில பகுதிகளுக்குத் தீ பரவியது. தீயணைப்பு வீரர்கள் உடனடியாகத் தீ பரவுவதைக் கட்டுப்படுத்தி முற்றிலும் அணைத்தனர்.

நேதன்யாகுவின் அமைச்சரவைக் கூட்டம் நடக்கும் பகுதியில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதே பகுதியில் இரகசிய ஆவணங்கள் வைக்கப்பட்டிருந்த அறையும் இருந்தது. உடனடியாகத் தீ அணைக்கப்பட்டதால், இந்த அறை தீ விபத்திலிருந்து தப்பியது. இந்த தீ விபத்தினால் யாரும் காயமடையவில்லை.

# பஞ்சாப் இளைஞர் ஆஸியில் மரணம்

மெல்போர்ன், ஏப். 13

ஆஸ்திரேலியாவில் பஞ்சாப் மாநில இளைஞர் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். ஆஸ்திரேலியாவில் இந்தியர்கள் மீதான தாக்குதல் தொடர்கதையாகி விட்டது. கடந்த ஓராண்டில் நூற்றுக்கும் அதிகமான இந்தியர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் பஞ்சாப் இளைஞர் நிதின்கார்க் என்பவர் குத்திக் கொல்லப்பட்டார். இதுவரை இவர் கொலையில் துப்புத் துலங்கவில்லை. இந்நிலையில், சிட்னி நகரில் தர்மேந்தர் சிங் என்ற இளைஞர் மர்மமான முறையில் சாலை ஓரத்தில் இறந்து கிடந்தார்.

இவர் தாக்குதலில் கொல்லப்பட்டாரா என்ற விவரங்கள், பிரேதப் பரிசோதனைக்குப் பின்னர்தான் தெரியவரும். எனினும், இந்த இளைஞர் மரணத்துக்குரிய சூழலை பொலிஸார் ஆய்வு செய்து வருகின்றனர்.

உலக அரங்கில்

# தாய்லாந்தில் அரசியல் வன்முறை; 20 பேர் மரணம்; 800 பேர் காயம்!

## ரொய்ட்டர்ஸ் தொலைக்காட்சி படப்பிடிப்பாளரும் பலி

பாங்கொக், ஏப். 13

தாய்லாந்தில் ஏற்பட்ட அரசியல் வன்முறையில் 20 பேர் உயிரிழந்தனர்; 800 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். 18 ஆண்டுகளுக்குப் பின்னர் தாய்லாந்தில் நடக்கும் மோசமான அரசியல் வன்முறை இது என்று தெரியவந்துள்ளது.

தாய்லாந்து முன்னாள் பிரதமர் தாக்ஷினா வத்ராவின் ஆதரவாளர்கள் கடந்த சில நாள்களாக அரசைக் கண்டித்து மத்திய பாங்காக் நகரின் 2 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களை சிவப்புச் சட்டை ஆர்ப்பாட்டக்காரர்கள் என்று அழைத்து வருகின்றனர்.

இந்நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்களை ஆர்ப்பாட்டம் நடத்திய இடத்திலிருந்து அப்புறப்படுத்த தாய்லாந்து இராணுவச் சிப்பாய்கள் சனிக்கிழமை முயன்றனர். இதனால் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் இராணுவச் சிப்பாய்கள் மீது கல்வீசித் தாக்கினர். இதைத் தொடர்ந்து இராணுவச் சிப்பாய்கள் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர்.

எனினும், ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் கலைந்து செல்லவில்லை. இதைத் தொடர்ந்து வானை நோக்கி துப்பாக்கியால் சுட்டு அவர்களை எச்சரிக்கை செய்தனர். அப்போதும் அவர்கள் கலைந்து செல்ல மறுத்ததையடுத்து இராணுவச் சிப்பாய்கள் துப்பாக்கிச் சூட்டு நடத்தினர். பதிலுக்கு ஆர்ப்பாட்டக்காரர்களும் வெடிகுண்டுகளை வீசினர். இதில் 16 பொதுமக்கள் உட்பட 20 பேர் இறந்தனர். இதில் 4 இராணுவச் சிப்பாய்களும் அடங்குவர்.

வன்முறையில் இதுவரை 800 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். அவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். துப்பாக்கிச் சண்டையின்போது 5 இராணுவச் சிப்பாய்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துக்கொண்டனர். மேலும் ஆயுதங்கள் அடங்கிய இராணுவ வாகனத்தையும் அவர்கள் கைப்பற்றினர்.

சண்டைக்குப் பின்னர் இராணுவச் சிப்பாய்கள் ஆர்ப்பாட்டக்காரர்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் குறித்து அரசு செய்தித் தொடர்பாளர் பணிட்டன் வட்டநயகார்ன் குறிப்பிடுகையில், ''1992 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தாய்லாந்தின் பாங்காக் நகரில் நடைபெறும் மோசமான அரசியல் வன்முறை இதுவாகும். இதுதொடர்பாக விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. அங்கு அமைதியை ஏற்படுத்துவதற்காக அரசு தொடர்ந்து முயன்றுவருகிறது. போராட்டத் தலைவர்களுடன் பிரதமரின் செயலாளர் பேச்சு நடத்தி வருகிறார்'' என்றார்.

இதுகுறித்து சிவப்புச் சட்டை ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிடுகையில், ''நீதிமன்ற உத்தரவின்பேரில் பிரதமர் தாக்ஷினிடமிருந்து ஆட்சியை 2008 ஆம் ஆண்டு பறித்தனர். தற்போதுள்ள அரசு இராணுவத்தின் பலத்துடன் ஆட்சிக்கு வந்துள்ளது. மக்களுக்காக எதையுமே இந்த அரசு செய்யவில்லை'' என்றார்கள்.

''அரசியல் கலவரத்தால் ஏழை மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. ஏராளமானோர் காயமடைந்துள்ளனர். மேலும் வன்முறை நடக்காமல் தடுக்க இந்த விடயத்தில் நாட்டின் அரசர் பூமிபால் அதுல்யதேஜ் தலையிடவேண்டும்'' என்றும் அவர்கள் கூறினர்.

அரசியல் வன்முறையில் இறந்த 20 பேரில் ஜப்பான் தொலைக்காட்சி புகைப்படக்கலைஞர் ஒருவர் என்பது தெரியவந்துள்ளது. ஜப்பானைச் சேர்ந்த ஹிரோ முரோமோட்டோ (வயது - 43). ரொய்ட்டர்ஸ் தொலைக்காட்சிக்காக கடந்த 15 ஆண்டுகளாகப் பணியாற்றி வந்தார். வன்முறைச் சம்பவங்களை பாங்கொக்கில் படம்பிடித்துக் கொண்டிருந்தபோது துப்பாக்கிச் சண்டையில் முரோமோட்டா வும் பலியானார். மார்பில் குண்டு பாய்ந்து அவர் இறந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமேஸ்வரம் மீனவருக்கு அடி, உதை! தொடர்கின்றது இலங்கையரின் தாக்குதல்!!

## வலைகள் அறுப்பு; மீன்கள் கொள்ளை

இராமேஸ்வரம், ஏப். 13

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் அடித்து உதைத்து சித்திரவதை செய்தனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த சனியன்று 300 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது 5 ரோந்துப் படகுகளில் வந்த இலங்கைக் கடற்படையினர் 25 இற்கும் மேற்பட்ட படகுகளையும் அவற்றில் இருந்த மீனவர்களையும் சுற்றி வளைத்தனர்.

கண் இமைக்கும் நேரத்தில் மீனவர்களின் படகுகளில் ஏறி அவர்கள் பிடித்து வைத்திருந்த விலை உயர்ந்த விரால் மீன்களையும் கணவாய் மீன்களையும் இலங்கைக் கடற்படையினர் அள்ளிச் சென்றனர். இதன்மதிப்பு பல லட்சம் ரூபா இருக்கும் என்று கூறப்படுகிறது.

அது மட்டுமல்லாமல் இராமேஸ்வரத்தை சேர்ந்த முனியசாமி, சேசு ஆகியோருக்குச் சொந்தமான படகுகளில் ஏறி அவற்றில் இருந்த மீனவர்கள் சுப்பிரமணி, ரெங்கசாமி, மணி, முனியசாமி, ராஜேந்திரன், மற்றொரு சுப்பிரமணி, சேசுராஜ், ராஜா, கணேசன் ஆகிய மீனவர்களை அவர்களது படகுகளிலேயே வைத்து இலங்கைக் கடற்படையினர் சப்பாத்துக்களால் மிதித்து எட்டி உதைத்தனர்.

மேலும் மீனவர்களை படகில் இருந்த ஐஸ் கட்டிகள் மீது நிற்க வைத்து அடித்து தாக்கினர்கள். அந்தப் படகுகளில் வைத்திருந்த விலை உயர்ந்த ஜி.பி.எப். கருவிகள், செல்போன்கள், கத்தி போன்ற பொருள்களையும் அள்ளிச் சென்றனர். படகுகளில் இருந்த உப்பு மூடைகளையும் கடலுக்குள் வீசி எறிந்தனர்.

பின்னர் தமிழக மீனவர்களை எச்சரித்து விட்டு திரும்பிச் சென்றுவிட்டனர்.

இதனால் குறைந்த அளவு மீன்களுடன் மீனவர்கள் நேற்றுமுன்தினம் காலை கரை திரும்பினர். அவர்களில் கணேசன், ராஜேந்திரன் ஆகியோர் கூறியவை வருமாறு :-

நாங்கள் கச்சதீவு அருகே நடுக்கடலில் இரவு நேரத்தில் மீன்பிடித்த போது ஒரு பெரிய ரோந்துப் படகில் வந்த சிங்களப் படையினர் 6 பேர் எங்கள் படகில் ஏறினர். எங்களை சப்பாத்துக் காலால் மிதித்தனர். படகின் எஞ்சின்கள் உள்ள 'ஸ்டோர் ரூம்' களில் எங்களைப் பூட்டி வைத்து கதவை அடைத்து விட்டார்கள். 'எங்களைக் காப்பாற்றுங்கள், விட்டுவிடுங்கள்' என்று கூக்குரலிட்டோம். ஆனால் அதையெல்லாம் காதில் வாங்காமல் அடித்து தாக்கினர்.

அதன் பின்னர் எங்களை இலங்கை கடற்படையினர் 'ஸ்டோர் ரூம்'களில் இருந்து வெளியே விட்டனர்.

மேலும் வலையில் இருக்கும் கயிறுகள், கத்தி, ஜி.பி.எஸ். கருவிகள், தண்ணீர் கேன், உதிரிப்பாகப் பொருள்கள் ஆகியவற்றை அள்ளிச் சென்று விட்டனர். நாங்கள் அவர்களிடம் இருந்து உயிர் தப்பி வந்ததே பெரிய விடயமாக இருந்தது. போர் நடந்த போது கூட இதுபோன்ற சித்திரவதைகளை நாங்கள் அனுபவித்தது கிடையாது. இப்போதுதான் இலங்கைக் கடற்படையினரின் அட்டூழியம் அதிகரித்து வருகிறது - என்றனர்.

உட்காயம் அடைந்த சுப்பிரமணி, தங்கச்சாமி ஆகிய இருவரும் இராமேஸ்வரம் அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார்கள்.

# இந்தியக் கடலில் இலங்கை கைவரிசை; கண்டித்துப் படகை மீட்டது இந்தியப்படை

இராமேஸ்வரம், ஏப். 13

இந்தியக் கடல் எல்லைக்குள் இலங்கைக் கடற்படையினர் புகுந்து படகை சிறைப்பிடித்தனர். அந்த நேரத்தில் அங்கு வந்த இந்திய கடற்படையினர் இலங்கைக் கடற்படையினரைக் கண்டித்து படகை மீட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சென்னையிலிருந்து கடந்த 5 ஆம் திகதி சாந்தவினா என்ற புதிய மீன்பிடிப் படகு கேரள மாநிலம் கொச்சிக்குப் புறப்பட்டது. தனியாருக்குச் சொந்தமான இந்தப் படகில் இந்தோனேஷியாவைச் சேர்ந்த மாலுமிகள் 5 பேரும், இந்தியர்கள் 6 பேரும் பயணம் செய்தனர். இந்தக் கப்பல் பாக் ஜலசந்தி வழியாக கடந்த 7 ஆம் திகதி மாலை 4 மணிக்கு நாகப்பட்டினத்துக்கும், இராமேஸ்வரத்திற்கும் இடையே இந்தியக் கடல் எல்லைக்குள் வந்து கொண்டிருந்தது.

அப்போது அங்கு இலங்கைக் கடற்படை ரோந்து கப்பல் ஒன்று அதிவேகமாக வந்தது. திடீரென்று அந்தக் கப்பல் இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடிப் படகை வழி மறித்தது. அதில் இருந்த இலங்கை கடற்படையினர் மீன்பிடிப் படகிலிருந்த மாலுமிகளிடம், 'நீங்கள் இலங்கை கடல் எல்லைக்குள் வந்துவிட்டீர்கள். எனவே உங்களை கைது செய்கிறோம்' என்று கூறி அந்தப் படகையும், அதில் இருந்தவர்களையும் சிறைப்பிடித்தனர்.

இதையடுத்து மீன்பிடி படகில் வந்த [illegible] திகைத்து வாக்குவர்கள் செய்வதறியா[illegible] ரோந்து வாதம் செய்தனர். அப்போது அங்கு [illegible] வந்த இந்தியக் கடற்படையினர், இலங்கைக் கடற்படையைக் கண்டித்து இது எங்கள் கடல் பகுதி, நீங்கள்தான் எங்கள் எல்லைக்குள் வந்து படகை வழிமறித்தீர்கள் என்று கூறினர்.

இதனால் அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. சுமார் ஒரு மணிநேரம் இந்த வாக்கு வாதம் நீடித்தது. பின்னர் வரை படம் மூலம் இந்தியக் கடற்படையினர் கடல் எல்லையை சுட்டிக்காட்டியதும் இலங்கைக் கடற்படையினர் அங்கிருந்து சென்று விட்டனர்.

இப்படி பல இன்னல்களைச் சந்தித்த மீன்பிடிப் படகு கடந்த 8 ஆம் திகதி பாம்பனை அடைந்தது. அந்தப் படகு பாம்பன் ரயில் பாலத்தைக் கடக்க பாம்பன் துறைமுக அதிகாரிகள் அனுமதி வழங்கினர்.

# அமெ. ஜனாதிபதி ஒபாமாவுடன் பிரதமர் மன்மோகன்சிங் சந்திப்பு



வாஷிங்டன், ஏப். 13

அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மன்மோகன்சிங், நேற்றுமுன்தினம் இரவு (இந்திய நேரப்படி) ஜனாதிபதி ஒபாமாவை நேரில் சந்தித்துப் பேசினார்.

சர்வதேச அளவில் அணுசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவது குறித்து விவா[illegible] இன்றும் அமெரிக்காவில் திப்பதற்[illegible] மாநாடு நடைபெறுகிறது.

இந்த மாநாட்டில் 42 இற்கும் மேற்பட்ட உலகத் தலைவர்கள் பங்கேற்கின்றனர். இந்தியா சார்பில் பங்கேற்பதற்காக பிரதமர் மன்மோகன்சிங் சென்றிருக்கிறார்.

மாநாட்டுக்கு முன்தினமான நேற்று முன்தினம் ஜனாதிபதி ஒபாமாவை அவர் தனியாக சந்தித்துப் பேசினார். நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை என்பதால் ஒபாமா மற்றும் அவருடைய குடும்பத்தினர் காலையில் தேவாலயத்துக்குச் சென்றனர். மதிய உணவுக்குப் பின்னர் பிற்பகல் 1.45 மணியளவில் (அமெரிக்க நேரப்படி) பிரதமர் மன்மோகன்சிங்கும் ஜனாதிபதி ஒபாமாவும் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது பாகிஸ்தானில் அதிக அளவு அணு ஆயுதங்கள் இருப்பதையும், அவை தீவிரவாதிகள் கையில் சிக்கினால் ஏற்படும் அபாயங்கள் குறித்தும் மன்மோகன்சிங் எடுத்துக்கூறினார். மேலும், பாகிஸ்தானுக்கு இராணுவ உதவியை அமெரிக்க அளிக்கக் கூடாது என்றும் ஒபாமாவிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

கைதான தீவிரவாதி ஹெட்லியிடம் விசாரணை நடத்த இந்தியாவை அனுமதிக்க வேண்டும் என்று மன்மோகன்சிங் வற்புறுத்தினார் எனத் தெரிகிறது.

## இந்தியச் செய்திகள்

### நாளை முதல் 'கப்டன்' டி.வி. ஒளிபரப்பு

சென்னை, ஏப். 13

நடிகரும் தே.மு.தி.க. தலைவருமான விஜயகாந்தின் 'கப்டன்' டி.வி. நாளை 14 ஆம் திகதி முதல் தனது ஒளிபரப்பைத் தொடங்குகிறது.

இதுகுறித்து அதன் நிர்வாக இயக்குநர் எல்.கே.சுதீஷ் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் கூறியவை வருமாறு -

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட கப்டன் டி.வியின் சோதனை ஒளிபரப்பு ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் தொடங்கியுள்ளது. (நாளை) 14 ஆம் திகதி முதல் முழுமையான நிகழ்ச்சிகளுடன் அதிகார பூர்வமான ஒளிபரப்பு தொடங்கும்.

மிகச் சிறப்பான நிகழ்ச்சிகளை சிறந்த வல்லுநர்களின் உதவியுடன் உருவாக்கியிருக்கிறோம். இளைஞர்கள், பெண்கள் ஆகியோரின் மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் அளித்து, அவர்களை முன்னேற்றும் வகையிலான நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கிறோம்.

கல்வி, பொருளாதாரம், அறிவியல், கலை, இலக்கியம், மருத்துவம், விளையாட்டு, சினிமா உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த நிகழ்ச்சிகளை தகுந்த நிபுணர்களைக் கொண்டு சிறப்பாக ஒளிபரப்பவுள்ளோம்.

இதுவரை எந்த சனலும் செய்திராத வகையில் தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளுக்கும் தனித் தனியே ஒரு குழுவை அமைத்து செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் வழங்குகிறோம்.

வரும் மே முதலாம் திகதிமுதல் எங்கள் டி.வியின் செய்திகள் பாரபட்சமின்றி ஒளிபரப்பாகும். அடுத்த ஆண்டு ஜனவரி 14 முதல் கப்டன் டி.வியின் இன்னொரு புதிய சனலும் தனது ஒளிபரப்பைத் தொடங்கவுள்ளது. தேசிய முற்போக்கு திராவிட கழகம் சார்பில் 'கப்டன் முரசு' என்ற வார இதழ் விரைவில் வெளியாகவுள்ளது - என்றார்.

# மத்திய 'அரசின் அடக்குமுறைகள் நீடித்தால் மீண்டும் தாக்குவோம்; நக்ஸல்கள் எச்சரிக்கை

## சத்திஷ்கரில் பலியான 76 பொலிஸாருக்கு நஷ்டஈடு வழங்கத் தயார் என்றும் அறிவிப்பு

புரூலியா, ஏப். 13

மத்திய அரசின் அடக்குமுறை நீடித்தால், சத்தீஷ்காரில் நடந்ததுபோல் மேலும் பல தாக்குதல்களை நடத்துவோம் என்று நக்ஸல்களின் எச்சரித்தனர்.

அத்துடன், சத்தீஷ்காரில் பலியான 76 மத்திய பொலிஸாருக்கு நஷ்ட ஈடு வழங்கத் தயார் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

மேற்கு வங்க மாநிலம் புரூலியாவில் உள்ள பத்திரிகை அலுவலகங்களுக்கு மாவோயிஸ்டுகள் பக்ஸ் மூலம் அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அதில், 'மாவோயிஸ்டுகளுக்கு எதிரான மத்திய அரசின் அடக்குமுறைகள் நீடித்தால், தந்தேவடாவில் (சத்தீஷ்கார் மாநிலம்) நடந்ததுபோல் மேலும் பல தாக்குதல்களை நடத்துவோம். எனவே, மத்திய பொலிஸ் படையினர் எங்களுக்கு எதிரான நேரடி தாக்குதலில் ஈடுபட வேண்டாம். மீறினால், அதன் விளைவுகள் [illegible] மோசமாக இருக்கும்' - என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

பொது மக்கள் தங்கள் போராட்டத்துக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ள மாவோயிஸ்டுகள், பொலிஸாருக்கு உளவு சொல்வதை நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

அதே நேரத்[illegible]ல், தந்தேவடாக்குத லில் பலியான 76 ம[illegible]த்திய பொலிபடையினரின் குடும்பத்தி[illegible]ருக்கு தங்[illegible] அனுதாபத்தையும் அதில் [illegible]தெரிவித்துள்ளனர். அத்துடன் பலியான பொல[illegible]ஸாரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்[illegible]க த[illegible]ாராக இருக்கின்றனர் எனவும், பொது[illegible] மக்களும் அவர்களுக்கு உதவி செய்ய [illegible] வேண்டும் என்றும், அந்த அறிக்[illegible]யில் வேண்டுகோள் விடுத்து உள்ளனர்.

இதற்கிடையில், மாவோயிஸ்ட்[illegible]கள் ஒரு சில மாநிலங்களில் தனி சாம்ராஜ்ஜியமே நடத்தி வருவதால், அவர்[illegible]களை முற்றிலும் ஒடுக்குவது அவ்வளவு [illegible] தல்ல என்று சில ஆய்வுகள் மற்றும் [illegible]னாய்வுத் தகவல்கள் மூலம் தெரிய [illegible] துள்ளது.

ஆண்டுக்கு ரூபா 1500 கோடிவரை அவர்கள் வசூலித்து ஏராளமான ஆயுதங்களை வாங்கிக் குவித்து வருகிறார்கள்.

கனிம வளங்கள் நிறைந்த ஜார்கண்ட் மாநிலம் மட்டும் ஆண்டுக்கு ரூபா 300 முதல் 400 கோடி வரை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# பக்தர்களின் அன்புக் கோரிக்கையால் சத்திய சாயி பாபா புதுடில்லி விஜயம்

புதுடில்லி, ஏப். 13

பக்தர்களின் அன்பு வேண்டுகோளை ஏற்று, சத்திய சாயிபாபா ஒரு வார பயணமாக புதுடில்லி வந்துள்ளார். புட்டபார்த்தியில் இருந்து 9 ஆம் திகதியன்று தனி விமானம் மூலம் புதுடில்லி வந்த அவர், வரும் 15ஆம் திகதி வரை அங்கு தங்கியிருப்பார்.

பக்தர்களின் அன்பு வேண்டுகோளை ஏற்று டில்லிக்கு வந்த அவரை சத்திய சாய் சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் ஏராளமான பக்தர்கள், விமான நிலையத்தில் வரவேற்றனர். கோடை காலத்தையொட்டி ஓய்வெடுக்க [illegible] 15 ஆம் திகதி அவர் டில்லியில் இருந்து சிம்லாவுக்கு பயணமாகிறார். அங்கு மூன்று நாட்கள் தங்கியிருந்து, 17 ஆம் திகதி புட்டபர்த்திக்குத் திரும்புகிறார்.



சாயி பாபாவுடன் சத்திய சாய் சேவா மன்றத்தின் தலைவர் ஆர்.ஜே.ரத்னாகர் கிரி, சர்வதேச சத்திய சாய் சேவா சங்கத்தின் தலைவர் சீனிவாசன், வெங்கடராமன் உட்பட 19 மாணவர்களும் அவருடன் புதுடில்லி வந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி. அணி ஆதரவாளரான இளம் பெண் மீது வல்லுறவு!

## கட்சி அலுவலகம் அமைக்க இடம் அளித்தமைக்காக

கொழும்பு,ஏப்.13

ஜே.வி.பி.இடம்பெற்றுள்ள ஜனநாயக தேசிய முன்னணிக்கு தென்மாகாணத்தில் உள்ள ஒரு தொகுதியில் தேர்தல் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு இடமளித்தார் என்ற காரணத்துக்காக அந்த அணி ஆதரவாளரான இளம் பெண் ஒருவர் மறுதரப்பினரால் கடத்திச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார் என்ற அதிர்ச்சிச் செய்தி தென்னிலங்கையில் வெளியாகியிருக்கின்றது.

இரண்டு பிள்ளைகளின் தாயாரான மேற்படி இளம் பெண் தேர்தல் தினத்தன்று கடத்திச் செல்லப்பட்டு, வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு தொல்லைப் படுத்தப்பட்ட பின்னர் அன்றிரவே வீதியோரத்தில் கைவிடப்பட்டார் எனக் கூறப்பட்டது.

எதிரணி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் துணைவியார் அனோமா பொன்சேகா, தென்னிலங்கையில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த அந்த இளம் பெண்ணை நேற்று முன்தினம் நேரில் சென்று பார்த்து ஆறுதல் தெரிவித்தார் என் றும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து தென்னிலங்கைப் பொலிஸ் நிலையம் ஒன்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும், அத்தகைய முறைப்பாடு ஏதும் கிடைக்கவில்லை என ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. எனினும் பொலிஸ் முறைப்பாட்டு இலக்கத்தை ஊடகவியலாளர்கள் தெரிந்து கொண்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்துக்கு முன்னதாக, ஜனநாயக தேசிய முன்னணி தேர்தல் அலுவலகம் அமைப்பதற்கு இடம் வழங்க வேண்டாம் என மேற்படி இளம் பெண் மாற்றுத் தரப்பினரால் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தார் என்றும் கூறப்பட்டது.

# ஆளும் தரப்பின் மே தினக் கூட்டம் கொழும்பு மாநகரசபைத் திடலில்

கொழும்பு, ஏப்.13

இம்முறை அரசுத் தரப்பின் மே தினக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கொழும்பு மாநகர சபைத் திடலில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக ஏற்பாடுகளைச் செய்வது தொடர்பில் இம்மாதம் 19ஆம் திகதி முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும தலைமையில் இடம்பெறும் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என்று மே தினக் கூட்டமைப்பின் செயலாளரும் மேல்மாகாணசபை ஆளுநருமான எஸ். அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

நாட்டைப் பாதுகாப்பதற்காகத் தொழிலாளர் வர்க்கம் செய்த தியாகத்தை எவராலும் மறக்க முடியாது என்று கூறிய ஆளுநர், மே தினக் கூட்டத்தின்போது ஜனாதிபதி இந்தத் தியாகங்கள் அனைத் தையும் கவனத்திற் கொள்வார் என்று சொன்னார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. உள்ளிட்ட பல கட்சிகளும் மே தின நிகழ்வுகளை நடத்துவது தொடர்பில் ஆலோசித்து வருகின்றன என்று கூறப்படுகிறது.

# புத்தாண்டு வியாபாரம் மும்முரம்: யாழ். நகரில் ஒரே சனக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 13.

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு யாழ். நகரப்பகுதியில் வியாபார நடவடிக்கைகள் களை கட்டியிருப்பதை அவதானிக்க முடிந்தது.

பொதுமக்கள் புதுவருடத்துக்குத் தேவையான பொருள்கள் மற்றும் உடுபுடைவைகளை முண்டியடித்து வாங்கிச் செல்கின்றனர்.

தென்பகுதியிலிருந்து வந்த முஸ்லிம், சிங்கள வியாபாரிகளும் இம்முறை பெரும் எண்ணிக்கையில் வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். நகரிலுள்ள வீதிகள் நடைபாதை வியாபாரிகளால் நிரம்பி வழிகின்றன. போக்குவரத்துக்கு இடைஞ்சலை ஏற்படுத்தும் வகையில் வியாபார நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

குடாநாட்டின் பல இடங்களில் இருந்தும் மக்கள் திரண்டு வந்து பொருள்களைக் கொள்முதல் செய்கின்றனர். நடைபாதை வியாபாரிகளே உடுபுடைவை விற்பனையில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இதேவேளை பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசாமி ஆலயச் சூழலிலும் புதுவருட வியாபார நடவடிக்கைகள் களை கட்டியிருக்கிறது. அங்கும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது. (ஒ-14-135)

# யுவதியைக் கடத்திய இளைஞர் விளக்க மறியலில்

யாழ்ப்பாணம், ஏப். 13

வீதியில் சென்ற யுவதியை ஓட்டோவில் கடத்திச்சென்ற சம்பவம் அண்மையில் கைதடி தெற்கில் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் யுவதியைக் கடத்தியாகக் கருதப்படும் அதே இடத்தைச் சேர்ந்த இளைஞரைக் கைது செய்து சாவகச்சேரி பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இந்த இளைஞரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை உத்தரவிட்டார். (ஒ-207)

# ஆங்கிலப் பாட ஆசிரியருக்கு...

யாழ்ப்பாணம்,ஏப்.13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசலைகளில் தரம் 2 வகுப்பாசிரியர்களுக்கான ஆங்கில பாட செயலமர்வு எதிர்வரும் 19ஆம் திகதியும், தரம் 10,11 ஆகிய வகுப்புகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு 20ஆம் திகதியும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஒ-207)



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த திருவிழா கொடியேற்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலய திருவிழாவையொட்டி நேற்றுமுன்தினம் அம்பாள் கிராம வீதி உலாவரும் காட்சியைப் படங்களில் காணலாம். *(படங்கள்: நேசன்)*

# செயலமர்வு

தென்மராட்சி, ஏப். 13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான குணநல உள்ளீடு தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறும்.

பாடசாலையின் அனர்த்தப் பாதுகாப்புக் குழுவின் விவரத்தினையும், அனர்த்தப் பாதுகாப்புக் குழுவின் பொறுப்பாசிரியரின் பெயரினையும் கொண்டு வருமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

# சூழ்ச்சிக்குப் பலியாகமாட்டோம் என்பதை தமிழ் மக்கள் நிரூபித்துக் காட்டி விட்டனர்

## பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 13



நடந்து முடிந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிக்க இலங்கை அரசு தன்னாலான அத்தனை சூழ்ச்சிகளையும் மேற்கொண்டது. ஆனால் தமிழ்த் தேசியத்தின் பலத்தைச் சிதைக்கும் எத்தகைய சூழ்ச்சிக்கும் பலியாக மாட்டோம் என்று தமிழ் மக்கள் நிரூபித்து விட்டார்கள்.

- இவ்வாறு தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், தமிழ் மக்கள் தங்கள் அரசியல் அபிலாசைகளை ஜனநாயக முறையில் வென்றெடுப்பதற்கான அமைப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பையே நம்புகின்றனர். இதனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அழித்துவிடும் நோக்கில் அரசு கங்கணம் கட்டிச் செயற்பட்டுவருகின்றது.

கூட்டமைப்புப் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே கருத்து முரண்பாடுகளை உருவாக்குவது, அவர்களில் சிலரைத், தம்வசப்படுத்துவது என்று கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்ட அரசு, நாடாளுமன்றத் தேர்தலில் வேறுவகையான சூழ்ச்சி வலையைப் பின்னியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைக்கும் வாக்குகளைச் சிதறடிக்கும் நோக்கில் மிகப்பெரும் தொகையான சுயேச்சை வேட்பாளர்களையும், உதிரிக் கட்சிகளையும் களமிறக்கியது.

ஆனால், அரசுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்ட, அரசின் இலக்குக்கு இசைவாகத் தனிக்குழுக்களாகப் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் அனைவரையும் தமிழ் மக்கள் படுதோல்வியைத் தழுவ வைத்துள்ளனர். சுயேச்சைக் குழுக்களைச் சார்ந்த அனைவரையும் சொற்ப வாக்குகளையேனும் வழங்காது முற்றாக நிராகரித்துள்ளனர். இதன் மூலம் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியப் பலத்தைச் சிதைக்கும் அரசின் எத்தகைய சூழ்ச்சிக்கும் பலியாக மாட்டோம் என்பதைத் தெளிவாக நிரூபித்துவிட்டனர்.

வடகிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே அதிகப்படியான வாக்குகளை வழங்கித் தங்கள் அரசியல் தலைமைத்துவம் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே என்பதையும் தமிழ் மக்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

அதேசமயம், யாழ். மாவட்டத்தில் வாக்களிப்பு மிகக்குறைவாக இடம்பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ். குடாநாட்டு மக்கள் வாக்களிப்பில் ஆர்வம் காட்டாமைக்கான காரணங்கள் விரிவாக ஆராயப்பட வேண்டியவை.

வாக்களிப்பு சதவீதம் குறைவாக இருந்தமையால், விகிதாசார தேர்தல் முறை காரணமாக யாழ். மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐந்து வேட்பாளர்கள் மட்டுமே நாடாளுமன்றத்துக்கு தெரிவாக முடிந்தது.

இவர்களில் ஒருவராக நான் இடம்பெறாதபோதும், தமிழ் மக்கள் தங்கள் அரசியல் இலக்கை எட்டுவதற்கும், தமிழ் மக்களுடைய இயற்கை மற்றும் பண்பாட்டு மரபுகளைப் பாதுகாப்பதற்கும் தொடர்ச்சியாக உழைப்பேன் என்று உறுதி கூறுகின்றேன்.

மேலும், எனக்கும் கூட்டமைப்பின் ஏனைய வேட்பாளர்களுக்கும் வாக்களித்த தேசிய உணர்வாளர்கள் அனைவருக்கும்,

என்னோடு சேர்ந்து கூட்டமைப்பின் வெற்றிக்காகக் கடுமையாக உழைத்த பற்றாளர்களுக்கும் உறுதுணையாக இருந்த பழைய மாணவர்களுக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன் - என்றுள்ளது.

# நாளை சீட்டிழுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் அபிவிருத்தி நிதிக்கான அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு புத்தாண்டு தினமான நாளை பிற்பகல் 4 மணிக்கு கல்லூரி முன்றலில் நடைபெறுமென சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ- 207)

# பளையில் புதுவருடத்தன்று விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப். 13

பளைப் பிரதேச மக்களுக்கான சித்திரைப் புதுவருட விளையாட்டுப் போட்டிகள் புதுவருட தினத்தன்று பளை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

பளைப் பிரதேச படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விளையாட்டுப் போட்டிகளில் பல்வேறு பாரம்பரிய விளையாட்டுகள் இடம்பெறவுள்ளன. (ஒ-207)

# 175 ஆவது ஆண்டு நிறைவு தினம்

யாழ்ப்பாணம், ஏப். 13

தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி தேவாலயத்தின் 175 ஆவது ஆண்டு நிறைவு தினம் கடந்த சனிக்கிழமை தேவாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ். ஆதீன பேராயர் கலாநிதி டி.எஸ். தியாகராஜா இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

முன்னாள் பேராயர் அதிவண. சுப்பிரமணியம் ஜெபநேசன் எழுதிய சாவகச்சேரி திருச்சபையின் வரலாறு எனும் நூல் வெளியீடும் இடம்பெறும். (ஒ- 207)

# நிலையறி பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 13

தீவக வலயகத்தில் இடம்பெற்ற தரம் 3 தொடக்கம் தரம் 9 வரையான நிலையறி பரீட்சையின் புள்ளிகளைக் கணனியில் பதிவு செய்து உருப்படிப் பகுப்பாய் வினையும் விடைத்தாள்களையும் நாளைமறுதினம் வியாழக்கிழமை வலயக் கணனி வள நிலையத்துக்குக் கொண்டுவருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாக்கிருஷ்ணன் கேட்டுள்ளார். (ஒ-1-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் ... மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிக்குமாறு ஜே.வி.பியின் பிரமுகர்களுக்குப் பணிப்பு

கொழும்பு, ஏப். 13

வாக்களிப்புக்கு 48மணி நேரத்துக்கு முன்பாகத் தேர்தல் விடயங்கள் முடிவுற்றிருந்த போதிலும் அச்சமயத்தில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு தேர்தல் சட்டத்தை மீறினர் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பில் ஜனநாயகத் தேசிய முன்னிணியின் முக்கிய உறுப்பினர்களை நீதிமன்றத்தில் ஆஜராகி வாக்குமூலமளிக்கும்படி உத்தர விடப்பட்டிருக்கின்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், சுனில் ஹந்துன்நெத்தி, அர்ஜூன ரணதுங்க, லக்ஷ்மன் நிபுணாராய்ச்சி மற்றும் ஜெனரல் சரத் பொன்சேகாவின் மனைவியார் அனோமா பொன்சேகா ஆகியோருக்கே இந்த உத்தரவை கொழும்பு கோட்டை நீதிவான் லங்கா ஜெயரட்ண விடுத்தார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யக் கோரி வாக்களிப்பு நாளுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் இவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை ஒட்டி, பொலிஸார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அறிக்கை தொடர்பிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்திருக்கிறது.

# சட்டவிரோதமாக ஆஸி. செல்ல முயன்ற கோஷ்டி பேருவளையில் மடக்கிப் பிடிப்பு

கொழும்பு, ஏப். 13

சட்டவிரோதமான முறையில் படகுகளின் மூலம் ஆஸ்திரேலியா நோக்கிச் செல்ல முற்பட்ட கும்பல் ஒன்றை பேருவளை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சட்டவிரோதப் படகில் சுமார் 45 பேர் பயணம்செய்ய முயற்சித்துள்ளனர் எனக் குறிப்பிடப்படுகிறது.

மட்டக்களப்பு பாசிக்குடா கடலிலிருந்து குறித்த படகு புறப்பட்டுச் சென்றுள்ளது. 25 நாள்களுக்கு போதுமான உணவு மற்றும் நீர் போன்றவை குறித்த படகில் சேமிக்கப்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையர்கள் மற்றும் ஆப்கானிஸ்தானியர்களுக்கு புகலிடம் வழங்குவது தொடர்பில் ஆஸ்திரேலியா புதிய நடைமுறைகளை அறிவித்து 24 மணித்தியாலங்கள் கடந்த நிலையில் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



புதுவருடத்தையொட்டி கொழும்பு நகரில் மும்முரமாகப் பட்டாசுக் கொள்வனவு.

# மக்களின் தேவைகளை நிறைவேற்ற அவர்களுடன் இருந்து பணியாற்றுவோம்

## புங்குடுதீவில் வைத்து அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஏப். 13

மக்களது கோரிக்கைகளும், தேவைக ளும் நிச்சயம் நிறைவு செய்து தரப்படு மென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

புங்குடுதீவு, சிவலப்பிட்டி சனசமூக நிலையமும், அம்பாள் விளையாட்டுக் கழக மும் இணைந்து நடத்தி வருகின்ற மாபெரும் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் கலந்து கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் நாம் மக்களிடம் நடைமுறைச் சாத்தியமான உறுதிமொழிகளை வழங்கியிருந்ததன் பிரகாரம், நிச்சயம் மக்களது கோரிக்கைகளும், தேவைகளும் நிறைவு செய்யப்படும்.

மக்களோடு இருந்து மக்களுக்காகப் பணி செய்வதே எமது இலட்சியமும் கொள் கையுமாகும் என்ற வகையில் நிச்சயமாக உங்களின் நல்வாழ்வுக்காக உழைப்போம்.

தீவகத்தில் பொதுவாகவுள்ள குடிதண் ணீர், மின்சாரம், வீதிகள் திருத்தம், போக் குவரத்து உள்ளிட்ட சகல விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும். எந்தக் கட்டத்திலும் ஈ.பி.டி.பி. மக்களுடன் இரத்தமும் சதையுமாக இருக்கும் என்பதில் நீங்கள் சந்தேகப்படவோ, பயப்படவோ தேவையில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆண்டுதோறும் சித்திரைப் புத்தாண்டையொட்டி புங்குடுதீவு சிவலப்பிட்டி சனசமூக நிலையமும் அம்பாள் விளையாட்டுக் கழகமும் இணைந்து பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதிப் பங்களிப்புடன் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாடு கருதி புங்குடு தீவில் அமைக்கப்பட்டுள்ள அம்பாள்கல்விநிலையத்தையும் அவர் சென்று பார்வையிட்டார். (ஒ-1)

## பேச்சுக்கு வரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று தெரிவித்தார்.

அழைப்புக் கிடைத்தவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடி அது குறித்து ஆக்கபூர்வமாகவும் பொறுப்புணர்ச்சியுடனும் பரிசீலித்து முடிவு எடுக்கும். அவ்வாறு எடுக்கப்படும் முடிவு தமிழ்ப் பேசும் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதாகவும் அவற்றை உத்தரவாதப்படுத்துவதாகவும் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்த அரசியல் தீர்வு மற்றும் மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றல் ஆகிய கொள்கைகளில் உறுதியாகவும், தீவிரமாகவும் அவற்றைச் செயற்படுத்தும் விதத்தில் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் சம்பந்தன் தெரிவித்தார். (அ)

## முஸ்லிம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முந்திய நாடாளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரஸ் 5 ஆசனங்களை மாத்திரம் கொண்டிருந்தது. அவற்றுள் தேசியப் பட்டியல் ஆசனங்கள் இரண்டும் அடங்கியிருந்தன. ஆனால், இம்முறை எட்டு ஆசனங்களைப் பெறும் வாய்ப்பை அந்தக் கட்சி எட்டியிருக்கின்றது.

இதேவேளை, கடந்த நாடாளுமன்றத்தில் அக்கட்சியில் இருந்து விலகி அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளை வகித்து வந்தவர்களில் ரிஷாத் பதியுதீனைத் தவிர அனைவரும் இத்தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர். (அ-சி)

## பஸில் பிரதமரா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, பஸில் ராஜபக்ஷவிற்கு பிரதமர் பதவி அல்லது வெளி நாட்டமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-சி)

## சவுதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கியிருக்கும் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

இந்தோனேஷிய பிரஜைகளுக்கும், இலங்கையர்களுக்கும் இடையில் ஏற் பட்ட மோதல் சம்பவத்திலேயே குறித்த இலங்கையர் உயிரிழந்துள்ளார் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மோதல் சம்பவத்தில் மேலும் சிலர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பொது முகாமையாளர் எல்.கே.ருஹுணகே தெரிவித்துள்ளார்.

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

### சந்திரிகா ஆட்சியை விட்டுச் சென்றபோது

அதேபோல், சந்திரிகா கூட ஆட்சியைவிட்டுச் செல்லும் போது நாடு எல்லாத் துறைகளிலும் வீழ்ச்சியடைந்திருந்தது. அப்படியானதொரு நிலை மீண்டும் நாட்டுக்கு ஏற்படக்கூடாது.

அரசமைப்பை மாற்ற அரசு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் கேட்கின்றது. அரசமைப்பை மாற்றினால் மட்டும் நாட்டுக்கு நல்ல காலம் வந்திடாது. நடைமுறையில் உள்ள தேர்தல் கலாசாரத்தை மாற்றாமல் அரசமைப்பில் தேர்தல் முறைமையை மாற்றிவிட்டால் நீதியானதும், நியாயமானதுமான தேர்தல் நடைபெற்றுவிடாது.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதாகவும், ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதாகவும் அரசமைப்புத் திருத்தம் அமையவேண்டும். அவ்வாறு அமைந்தால் அதற்கு நாம் ஆதரவு வழங்குவோம். - என்றார்.


Physics 2012 Batch
English and Tamil Medium
Personal and Group Classes
BY: S.Uiroviyam
தொடர்புக்கு: 0777158667,0212222452

விடுமுறைக் கால வகுப்பு
(திங்கள் முதல் வெள்ளி வரை)

| நேரம் | A/L-2010 & DAY | A/L-2011 |
|---|---|---|
| 8.00-10.00 | B.St | Acc |
| 10.00-11.30 | Eco. | Eco. |
| 11.30-2.00 | Acc | Acc |

DMI, Jaffna

நீங்கள் பெறும் பட்டமானது அதியுயர்ந்த வருமானமுடைய தொழில் வாய்ப்புக்களை இலக்காக கொண்டதா?



A/L? Pass → BIT
No → FIT → BIT
University of Colombo
பரீட்சைகள் யாழ் பல்கலைக்கழகத்தில், தமிழ் மூல விளக்கங்கள், குறைந்த செலவு, சிறந்த பெறுபேறு
BIT மாணவர்களுக்கு மேலதிக கட்டணம் இன்றி BCS, Computer Engineer(USA), ICDL
விண்ணப்பபடிவங்களிற்கும் பதிவுகளுக்கும் நேரில்
Closing Date 16.04.2010
MCS 324,Palaly Road,Parameswara Junction
Web site : Http://www.mcsitcampus.org
Call 772395895
கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருது பெற்ற நிறுவனம்

மதுரம் இன்ஸ்ரிரியூட்
டச்சுவீதி, இருபாலை, கோப்பாய்.
O/L DAY CLASS
ஆரம்பம்-15.04வியாழன் 10மணி.

A/L - 2012
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஏப்பிரல் - 17 (சனி)
காலை 9 மணி
DMI Jaffna

ஐடியல் அக்கடமி

| சண்டிலிப்பாய் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் |
|---|---|---|
| 9.00AM | 6.30AM | 3.00PM |

O/L DAY CLASS
A/L 2012
கலை/வர்த்தகப் பிரிவு
இரண்டும் ஒரே நாளில் மூன்று இடங்களிலும் ஆரம்பம்
ஆரம்பம்: 15.04.2010 (வியாழன்)
மாணவச் செல்வங்களே! ஒரு தடவை தவறிவிட்டீர்களா? கவலை வேண்டாம். மறுதடவை ஐடியலுடன் இணையுங்கள். வெற்றி நிச்சயம். நிர்வாகம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
மட்டுப்படுத்தப்பட்ட பதிவுகள்
Diploma Courses...
*MS Office *Accounting*Graphics 3D
*Printing & Typing,Hardware*English
*Web Designing* Video Editing *AutoCAD
* VB.net,LINUX,ICT,GIT,Kids Programs
International Courses...
Computer Engineering,CIMA,IELTS / Toefl
Cisco-CCNA, ICDL-AutoCAD, BCS,
Sun Java programmer, Red Hat Engineer
Degree Course-University of Colombo
* Diploma in -IT,Higer Diploma-IT,* Bachelor-IT
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு
Closing Date 16.04.2010
MCS 324,Palaly Road,Parameswara Junction
Web site : Http://www.mcsitcampus.org
Call 772395895


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.